# குர்ஆனின் குரல்

ذو القعدة - ١٤٤٥

மே - 2024

₹25/-



# 999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



**K.A.S. ZAINULABDIN & Co.**

New No. 196, Angappan Street, Chennai - 600 001.

www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475

KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# இஸ்லாத்தில் பரிபூரணமாக இணைந்திடுவீர்!

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱدْخُلُوا۟ فِى ٱلسِّلْمِ كَآفَّةً وَلَا
تَتَّبِعُوا۟ خُطُوَٰتِ ٱلشَّيْطَٰنِ ۚ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ ﴿٢٠٨﴾

"இறை நம்பிக்கையாளர்களே! (இறைவனால் அங்கீகரிக்கப் பட்ட மார்க்கமான) இஸ்லாத்தில் முழுமையாக நீங்கள் நுழைந்து விடுங்கள்; தவிர, ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுடைய பகிரங்க மான பகைவனாக இருக்கிறான்" – அல்குர்ஆன் (2:208)

நபித் தோழர்களில் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரளி) போன்றோர் யூத அறிஞர்களாக இருந்து முஸ்லிமானவர்கள். இவர்கள் இஸ்லாத்தில் இணைந்த பிறகும், யூதர்களைப் போல சனிக்கிழமை தினத்தை மதித்து வந்தனர். ஒட்டக இறைச்சியை சாப்பிடுவதிலிருந்து தவிர்த்துக் கொண்டனர். இப்படி செய் வதனால் இரண்டு நபிமார்களையும், ஷரீஅத்துகளையும் பேணிய கூடுதல் நன்மை கிடைக்கும் என எண்ணினார்கள்.

இந்த எண்ணம் தவறானது. எப்பொழுது இஸ்லாம் வந்ததோ நபி (ஸல்) அவர்களின் மார்க்கம் வந்ததோ அப்பொழுதே ஏற் கனவே இருந்த அனைத்து ஷரீஅத்துகளும் செயலற்று செல்லுபடியற்றதாகி விட்டது. இஸ்லாத்தில் முழுமையாக இணைந்து, நுழைந்து முழு மனதுடன் உடலும், உள்ளமு மாக இரண்டறக் கலந்து இஸ்லாத்தில் செயல்பட வேண்டும். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டாம் என மேற்கூறப்பட்டுள்ளவசனத்தில் அல்லாஹ் அறிவுரைகூறுகிறான்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களிடம் "யா ரஸூலல்லாஹ், தவ்ராத் வேதத்தை ஓதத் தெரிந்த ஒருவர் ஓதக் கேட்டேன். நுட்பமான விஷயங்கள் அதில் உள்ளன. அதை நான் எழுதி வைத்துக் கொள்ளலாமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், "என்ன உமரே? இன்னும் தடுமாற்றத்தில்தான் இருக்கிறீரா? குர்ஆனை விடவா உயர் வாக தெரிந்தது" என கோபத்துடன் கேட்டார்கள். இன்றும் கூட ஹதீஸ்களுடன் குர்ஆனின் ஆயத்துகளை கூறுவதுடன், திருவள்ளுவரின், பாரதியின் கூற்றுகளை உதாரணம் காட்டுபவர்கள் உண்டு. அல்லாஹ் தான் இவர்களின் தவறை இவர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# வறுமையிலிருந்து விடுபட...!

تَابِعُوا بَيْنَ الحَجِّ وَالعُمْرَةِ، فَإِنَّهُمَا يَنْفِيَانِ الفَقْرَ وَالذُّنُوبَ كَمَا يَنْفِي الكِيرُ خَبَثَ الحَدِيدِ، وَالذَّهَبِ، وَالفِضَّةِ، وَلَيْسَ لِلْحَجَّةِ المَبْرُورَةِ ثَوَابٌ إِلَّا الجَنَّةُ

**"ஹஜ்ஜையும், உம்ராவையும் தொடர்படியாக செய்யுங்கள். ஏனெனில், நெருப்பு இரும்பு, தங்கம், வெள்ளி ஆகியவற்றிலிருந்து அழுக்கைப் போக்குவது போல ஹஜ்ஜும், உம்ராவும் மனிதனின் பாவங்களையும், வறுமைகளையும் அழித்து விடுகின்றன. நன்மையான ஹஜ்ஜின் கூலி சுவனத்தைத் தவிர வேறில்லை" என்று நபி (ஸல்)அவர்கள் அருளியுள்ளார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்.
(நூல் : திர்மிதி)

பல்லாயிரம் பேர்கள் ஹஜ்ஜும், உம்ராவும் செய்வதற்கு காரணமாக திகழ்ந்து கொண்டிருக்கும் குர்ஆனின் குரல் இன்னும் பல நன்மைகளுக்கு வித்திட அன்புடன் வாழ்த்துகிறோம்!

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 67 ★ எதிரொலி – 5
துல்கஃதா 1445 மே – 2024

## நாட்டை நாசமாக்கப் போகும் பொது சிவில் சட்டம்!

நாடு முழுவதும் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படும் என பாரதீய ஜனதா கட்சி தன் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது.

இந்திய மக்கள் பல்வேறு மத, மொழி, இனக் குடும்பமாக "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற அடிப்படையில் வாழ்ந்து வருகிறார்கள். அவரவர் பழக்க வழக்கங்களை அவரவர் பின்பற்றி வருகிறார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை பிரிவு 25-ன்படி குடிமக்கள் அனைவரும் தாங்கள் சார்ந்துள்ள மத வழக்கங்களைப் பின்பற்றவும், பரப்பவும் உரிமை பெற்றவர்களாவர். இத்தகைய வேறுபாடுகள் நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தை வலிமையாக்கியுள்ளது.

பாரதீய ஜனதாவின் ஒரே நாடு, ஒரே இனம், ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற கொள்கை, சட்ட விரோதமானது ஆகும். பொது சிவில் சட்டம் நடைமுறைக்கு வந்தால், மதச் சார்பின்மைக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுடன் சட்டம் - ஒழுங்கு பாதிப்பு, அமைதியின்மை போன்ற பல கேடுகளை இந்திய சமுதாயத்தில் உருவாக்கும் நிலை ஏற்படும்.

பொது சிவில் சட்டம் தனிநபர் உரிமையான எந்த மதத்தையும் பின்பற்றுதல், வாரிசுரிமை, தத்தெடுத்தல் போன்றவற்றில் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 25 வழங்கியுள்ள உரிமைகளைப் பறிப்பதற்கும், பிரிவு – 29 வழங்கியுள்ள சிறுபான்மையினருக்கான உரிமைகளைப் பறிப்பதற்குமான முயற்சியாகும். அரசியலமைப்புச் சட்டப் பிரிவு - 29, இந்திய நிலப்பரப்பில் வாழும் ஒவ்வொரு குழுவின ருக்கும், அவர்களுடைய மொழி, எழுத்து, பண்பாடு

ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமையை அளித்துள்ளது. அதற்கு பொது சிவில் சட்டம் விரோதமானதாகும்.

இந்திய அரசியலமைப்பின் 371ஆவது பிரிவின்கீழ் பல்வேறு இந்திய யூனியன் மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இச்சட்டமானது குஜராத், மகாராஷ்டிரா, நாகலாந்து, மிசோரம், அசாம், ஆந்திரப்பிரதேசம், சிக்கிம், மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம், கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளை வழங்குகிறது.

இதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், இந்த மாநிலங்களின் வளர்ச்சியடையாத பகுதிகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவது அவர்களின் பொருளாதார மற்றும் பண்பாட்டு நலன்களைப் பாதுகாப்பது, உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்ப்பது, அவர்களின் வழக்கமான சட்டங்களைப் பாதுகாப்பது என்றே சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த மாநிலங்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட சட்டப்பிரிவுகள் இவை.

தெலுங்கானா, மிசோரம் என சில மாநிலங்களுக்கு பல்வேறு சிறப்புச் சட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் மாநிலங்களுக்கான தனியாகச் செய்யப்பட்ட சிறப்புச் சட்டங்கள் ஆகும். இதில் கை வைக்க தைரியம் உண்டா? பொதுவான நாட்டில் மாநிலங்களுக்கு ஏன் சிறப்புச் சட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? அதை மாற்ற முடியுமா?

பொதுவான நாட்டில் பெண்களுக்கு ஏன் சிறப்புச் சலுகைகள்? பட்டியலின பழங்குடியினருக்கு ஏன் தனி ஒதுக்கீடு? பிற்படுத்தப்பட்டவருக்கு ஏன் தனி ஒதுக்கீடு? என்று கேட்பீர்களா?

முஸ்லிம்களை மட்டும் குறி வைப்பது ஏன்?

சங்கிகள் ஆட்சியில் இருக்கும் வரை, முஸ்லிம்கள் குறி வைக்கப்படுவார்கள். ஆனால், இன்ஷா அல்லாஹ் இத்தேர்தல் மூலம் சங்கிகள் துடைத்தெறியப்படுவார்கள். இது நிச்சயம்!

தஹஜ்ஜுது தொழுகையை பஜ்ருடைய பாங்குக்கு எவ்வளவு நேரம் முன்பு வரை தொழுகலாம்?

**சேலத்திலிருந்து அன்வர்ஜீ**

பஜ்ருடைய பாங்குக்கு இருபது நிமிடங்களுக்கு முன்பு வரை தொழுகலாம். சமயத்தில், எப்போதாவது எழுந்திருப்பதில் தாமதமாகிவிட்டால் பத்து நிமிடங்களுக்கு முன்பு வரை தொழுது கொள்ளலாம். அதை விட பிற்படுத்த வேண்டாம்.

ஹள்ரத் நபி ஈஸா (அலை) அவர்கள் உண்மையில் சிலுவையில் அறையப்பட்டார்களா? அல்லது அது கற்பனைகதையா?

**மும்பையிலிருந்து மஜீதுத்தீன்**

ஹள்ரத் நபி ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருக்கும் நிலையிலேயே வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டதாக அல்குர்ஆன் பதிவு செய்கிறது. அல்குர்ஆன் வாசகத்தின் செய்தியில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அது முழுக்க உண்மையை மட்டுமே பேசும். அணுவளவு கூட உண்மைக்கு மாற்றமான செய்தி அதில் இடம் பெறுவதற்கு கிஞ்சிற்றும் வாய்ப்பில்லை.

நெஞ்சிலிருக்கும் முடியை அகற்றிக் கொள்ளலாமா?

**ஈரோட்டிலிருந்து முஹம்மது**

அவசியமின்றி அகற்றக் கூடாது.

அனைத்து நல்ல குணங்களையும் அழிப்பது எது?

**செம்மியமங்கலத்திலிருந்து அப்துல்**

இரண்டு. (1) பொய். (2) மது. இந்த இரண்டையும் தவிர்த்துக் கொண்டால் இன்ஷா அல்லாஹ் வாழ்க்கை சொர்க்கமாகும். இந்த இரண்டும் வந்து விட்டால் அனைத்து தீய குணங்களும் நம்மில் குடிகொண்டு, நம்மிடமுள்ள அனைத்து நன்மைகளையும் அது அழித்து விடும்!

என் வீடு அமைந்துள்ள 10 சென்ட் நிலம் என் பெயரில் உள்ளது. நானும், என் மனைவியும் அதில் வசித்து வருகிறோம். பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளனர். என் காலத்திற்கு பிறகு மேற்படி

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

சொத்தை ஷரீஅத் முறைப்படி பிரிப்பதற்காக பத்திரமாக எழுதி வைத்துவிட்டு செல்லலாமா? அல்லது என் இறப்பிற்கு பிறகு அந்தப் பிள்ளைகளே பிரித்துக் கொள்ளலாமா?

**சிவகங்கையிலிருந்து**
**ராஜா**

ஷரீஅத் ரீதியாக மனிதன் இறந்ததற்குபிறகுதான் அவனுடைய சொத்துகள் பிரிக்கப் படும். அந்தப் பாகப் பிரிவினைக்குத்தான் மார்க்கம் சட்டங்களைவரையறுத்துள்ளது. யாருக்கு என்ன பாகம் கொடுக்கப் பட வேண்டும் என்பதை அல் குர்ஆன் நமக்கு போதிக்கிறது. "நான் இருக்கும்போதே என் பிள்ளைகளுக்கு சொத்துகளை பிரித்துக் கொடுத்துவிட்டால் நன்றாக இருக்குமே" என்று நினைப்பவர்கள், அவரவர்களுக்கு எது நிறைவாக மனதில் தோன்றுமோ அவ்விதமாகவே அந்த சொத்துகளை பிரித்துக் கொடுப்பதில் மார்க்க ரீதியாக எந்தத் தடையுமில்லை.

எனவே, பிற்காலத்தில் பிள்ளைகளுக்கு நடுவில் பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்க, தானே முன்னின்று அவரவர்களின் பெயர்களில் அவர்களின் சொத்துகளை முறையாக பத்திரமாகபதிந்துகொடுத்துவிட்டாலும் தவறு ஒன்றுமில்லை.

சகோதர சமுதாய நண்பர் ஒருவர், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் படிப்பறிவு இல்லாதவர். மார்க்க ரீதியாகவும் எதையும் கற்றுக் கொள்ளக்கூடிய அவகாசம் எதுவும் அவருக்கு கிடைக்க வில்லை. பிஸ்மில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற ஒரு சில வார்த்தைகளை மட்டுமே அறிந்தவர். தனக்கு தெரிந்த தன் தாய்மொழியில் மட்டுமே அல்லாஹ்விடம் துஆ கேட் கிறார். நான் இறந்து விட்டால் என்னை அடக்கம் செய்யும் போது குர்ஆன் ஷரீஃப் ஒன்றை தன்னோடு வைத்து அடக்கம் செய்யும்படி கூறுகிறார். மார்க்கம் என்ன சொல்கிறது?

**ஆந்திராவிலிருந்து**
**சைய்யது காதர்**

அவருக்கு அவகாசம் கிடைக்குமானால் இஸ்லாத்தின் அடிப்படை கடமையான தொழுகையையும், அதில் ஓதப் படக்கூடிய அல்குர்ஆனின் சில சூராக்களையும் கற்றுக் கொள் வது அவர் மீது கட்டாயமாகும். ஆனால், அவர் அதற்கான முயற்சிகள் செய்தும், அவர் அவற்றை கற்றுக் கொள்ள முடியவில்லையானால், அதே நிலையில் மரணத்தை அடைந்து விடுவாரானால் அல்லாஹ் அவ ருடைய எல்லா முயற்சிகளுக் கும், அவரது கவலைகளுக்கும் நிரப்பமான கூலிகளை வழங்க போதுமானவன். பயப்பட தேவையில்லை. அவர் தனக்கு தெரிந்த மொழிகளில் மனமுருகி அல்லாஹ்விடம் துஆ செய்தால்

பிஸ்மில்லாஹ்....

# மதரஸா ஹிதாயத்துன் நிஸ்வான்

(துவக்கம் 1973)

## ஹிதாயத்துன் நிஸ்வான்
## பொது அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி

[அரசு அங்கீகாரம் - சுயநிதிப்பள்ளி]

இராஜகிரி -614207 -தஞ்சாவூர் மாவட்டம்

## பள்ளி படிப்பும் ஆலிமா பட்டமும் இணைந்த கல்வி.

மாணவியர் சேர்க்கை LKG முதல் +2 வரை
இன்றே சேர்த்து அல்லாஹ்வின் அருள் பெறுக.

**ADMISSION OPEN**

# ஆசிரியர் தேவை

மதரஸாவிற்கு

அப்ஸலுல் உலமா, ஆலிமா மற்றும் நிர்வாக திறன் கொண்ட

- தலைமை நாஜிரா
- முழு நேர வார்டன் ஆசிரியை
- முதுநிலை பட்டதாரி

ஆங்கிலம் - கணிதம், உடற்கல்வி
பெண் ஆசிரியைகள் தேவை.
(ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்).

தொடர்பிற்கு, **தலைவர் / செயலாளர்,**
**ஹிதாயத்துன் நிஸ்வான் கல்விச் சங்கம், இராஜகிரி.**
Cell: 9944886757 ; e-Mail: hidayathun.niswan@yahoo.com

நிச்சயமாக அல்லாஹ் அவரின் துஆகளை அங்கீகரிப்பான்.

அவரின் மரணத்திற்கு பின்பு அவரின் உடலுடன் குர்ஆன் ஷரீஃபையும் சேர்த்து வைதது அடக்கம் செய்வது என்பது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட வில்லை. எனவே, அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவரின் முந்தைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும். மேலும், அவரின்நன்மைகள் அனைத்தும் அல்லாஹ்விடம் அவரது மறுமை பட்டியலில் கண்டிப்பாக சேர்க்கப்பட்டு விடும்.

☛ குர்ஆன் ஓதும்போது சாதாரணமாக பேசுவது போல் நன்றாகவாய் திறந்து சப்தமிட்டு ஓதுவது அல்லது சப்தமில்லாமல் உதடுகளின் அசைவுகளைக் கொண்டு மட்டும் ஓதுவது அல்லது உதடுகளை அசைக்காமல் மனதுக்குள் ஓதுவது இந்த மூன்று வகையில் எதுசரியானது?

**பெரிய வடகரையிலிருந்து ஹாஜா முஹம்மது**

✍ முதல் வகையே மிக மிக நன்மையை தரக்கூடியதும், சிறப்புக்குரியதும் ஆகும். ஏனெனில், குர்ஆன் ஓதப்படக் கூடிய இடங்களிலிருந்து ஷைத்தான்களும், பேய்பிசாசுகள் போன்றதீய சக்திகளும் விரண்டோடுகின்றன. இதுவல்லாமல், காலம் மற்றும் இடத்தின் சூழ்நிலைகளுக்கு தகுந்தவாறு கொஞ்சம் சப்தங்களை குறைத்தும், மெதுவாகவும், உதட்டளவிலும் ஓதிக் கொள்ளலாம்.

மனதிலே ஓதிக் கொள்வது வேண்டாம்.

☛ நானும், எனது நண்பரும் ஹஜ் செய்வதற்காக சிறுக சிறுக பணம் சேர்த்து வந்தோம். அது சில மாதங்களில் பெரிய தொகையாக ஆகி விட்டது. திடீரென நண்பர் இறந்துபோய் விட்டார். இப்பொழுது அந்தத் தொகையை அவரின் குடும்பத்தாரிடம் கொடுத்தால் அவர்கள் அதை வாங்க மறுக்கிறார்கள். என்ன செய்வது?

**மகாராஷ்டிராவிலிருந்து முஹம்மது மைதீன்**

✍ அந்தப் பணம் ஒரு நபரை ஹஜ்ஜுக்கு அனுப்புவதற்கு போதுமான பணமாக இருந்தால் தகுதியான ஒரு நபரை அந்தப் பணத்தைக் கொண்டு ஹஜ்ஜுக்கு அனுப்பி வைத்து விட வேண்டும். அல்லது அது பற்றாக்குறையாக இருந்தால் ஹஜ்ஜுக்கு ஆசைப்பட்டு பணம் குறைவு உள்ளவர் யாராவது இருந்தால், இந்த குறைந்த பணத்தை அவர்களிடம் கொடுத்து அவர்களை ஹஜ்ஜுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்த இரண்டு நிலைகளிலும் ஹஜ்ஜு செய்தவருக்கும், அதற்காக பணம் சேகரித்து வைத்த உங்களின் நண்பருக்கும், அதற்கு உதவியாக இருந்த

உங்களுக்கும் அதன் நன்மைகள் கிடைக்கும்.

AMYRA HUMNA அமைரா ஃகும்னா என்று பெயர் வைத்திருக்கிறோம். இந்த பெயர் சரியா? இதன் அர்த்தம் என்ன?

**புதுக்கோட்டையிலிருந்து**
**ஏ.ஷாஜஹான்**

இப்படி ஓர் அரபு வார்த்தைக்கு பொருள் காண்பது நமக்கு சிக்கலாக இருக்கிறது. தயவு கூர்ந்து பெயர் வைப்பதற்கு முன்பாகவே அருகிலுள்ள உலமாபெருமக்களிடம் பெயர்களை கேட்டு அதன் அர்த்தங்களையும் தெரிந்து பிறகு பெயர் வைத்துக் கொள்ளுங்கள்.

வலைத்தளங்களில் பெயர்களை தேடாதீர்கள். அதில் நிறைய குளறுபடிகள் உள்ளன. நாம் ஒரு பெயரைத் தேடினால் அது அர்த்தம் தெளிவில்லாத வேறு ஒரு பெயரை காட்டும். தாங்கள் மேலே எழுதிய பெயரில் கொஞ்சம் மாற்றம் செய்து "ஆமிரா அம்னா" என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். "முழுமையாக நிம்மதி பெற்றவள்" என்பது அதன் பொருளாகும்.

நம் சகோதரர்கள் பீடி, சிகரெட் போன்றவற்றை தயாரிப்பது, விற்பனை செய்வது சரியாகுமா?

**திருச்சியிலிருந்து**
**முக்தார்**

சரியாகாது. பொதுவாக, நம் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தப் பொருளையும் நம் மார்க்கம் ஆகுமாக்கவில்லை. எனவே, அப்படிப்பட்ட பொருள்களை தயாரிப்பது, விற்பது, அதற்கு உதவி செய்வது போன்ற அனைத்தையும் மார்க்கம் தடை செய்கிறது.

சொர்க்கத்தின் சுகத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?

**திண்டுக்கலிலிருந்து**
**ஏ.எஸ்.முஹம்மது**

தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்ற அல்லாஹ்வின் கடமைகளை குறைவின்றி நிறைவேற்றுவதோடு அடியார்களின் கடமைகளிலும் குறைவு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பொடுபோக்குத்தனத்தால் அல்லது அதிகாரத்தால் அல்லது ஆணவத்தால் எந்த மனிதருடைய உள்ளமும் புண்பட்டு விடாமல் செயல்பட வேண்டும். அல்லாஹ்வின் கடமையிலும், அடியார்களின் கடமையிலும் கண்ணும்-கருத்துமாக இருந்தாலே இன்ஷா அல்லாஹ் சுவனம் நமக்கு கிடைத்து விடும். ஒன்றை மட்டும் செய்து இன்னொன்றை விட்டுவிட்டால் சுவனம் கிடைப்பது சிரமமாகி விடும். அல்லாஹ் தன் அடியார்களுக்காக சுவனத்தை திறந்து வைத்திருப்பது போன்று நரகின் வாசல்

களையும் திறந்தே வைத்திருக்கிறான். இரண்டு வழிகளையும் குர்ஆன், ஹதீஸ்களின் மூலமாக நமக்கு தெளிவுபடுத்தியுள்ளான். எனவே, சுவனத்தை கேட்பதிலும், நரகத்தை விட்டு பாதுகாப்பு தேடுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

☛ தினமும் சூரா வாகிஆ ஓதுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

**மண்டக்களத்தூரிலிருந்து**
**மஜீத் பாய்**

✍ சூரா வாகிஆவை தினந்தோறும் மக்ரிபு தொழுகைக்குப் பின்பு பேணுதலாக, நிரந்தரமாக நம்பிக்கையோடு ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் விரைவில் வறுமைகள் ஒழிந்து போகும்.

☛ நான் அரசுத் துறையில் வேலை பார்த்து வருகிறேன். வருமான வரி அறிக்கையில் சேமிப்பைக் காட்டுவதற்காக நான்கு எல்.ஐ.சி. பாலிஸி போட்டுள்ளேன். மார்க்க ரீதியாக அதுசரியாகுமா? அதுமுடிந்த பின்பு அதிலிருந்து வரக்கூடிய முழுத் தொகையையும் நாம் பெற்றுக் கொள்ளலாமா? அந்த நேரத்தில் நாம் இல்லையென்றால் அதிலிருந்து கிடைக்கும் இழப்பீட்டுத் தொகையை குடும்பத்தினர் பெற்றுக்கொண்டு குடும்பச் செலவுகளுக்கு அதை பயன்படுத்தலாமா?

**துறைமங்கலத்திலிருந்து**
**இன்சாத் அஹமத்**

✍ அது போன்ற பாலிஸிகளில் இணைவது, அதற்காக முயற்சிப்பது, அதற்காக பணம் கட்டுவது, அதற்காக உழைப்பது போன்ற செயல்பாடுகள் அனைத்தும் ஹராமாகும். இது அனைத்துமே வட்டியின் வகையை சார்ந்தது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஒரு நிர்பந்த சூழ்நிலையில் நீங்கள் அதை கட்டியிருந்தால் அதிலிருந்து வரக்கூடிய அசல் தொகை மட்டுமே உங்களுக்கு ஹலாலாகும். அதிகப்படியாக வரக்கூடிய தொகைகள் வட்டிக்கு சமமானது என்பதால் அதை நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தார்களோ பயன்படுத்துவது ஆகுமானது அல்ல. எனவே, அதிகப்படியான தொகையை நன்மையை எதிர்பார்க்காமல் யாருக்காவது கொடுத்து விட வேண்டும்.

☛ நான் கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பாக திருமணம் செய்தேன். ஏதோ ஒரு காரணத்தைக் கூறி அந்தப் பெண் என்னிடமிருந்து மணவிலக்கு வாங்கிக் கொண்டு சென்று விட்டாள்.பிறகுஓரிருவருடங்கள் கழித்து, இன்னொரு பெண்ணை மணமுடித்தேன். அவளும் ஓரிரு வருடங்கள் கழித்து என்னிடம் வாழ முடியாது என்று கூறி தன் தாய்வீட்டிற்கு சென்றுவிட்டாள். நான் அந்தப் பெண் சார்ந்த ஜமாஅத்தினரிடம்கடிதம் கொடுத்தேன். அவர்கள் வரச் சொன்ன நாளில்நானும்சென்றேன். ஆனால்,

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

அந்தப் பெண் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் அங்கு வரவில்லை. அதனால், "நீங்கள் சட்டரீதியாக பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்த ஜமாஅத்தார்கள் எங்களை அனுப்பி விட்டார்கள். அதன்பிறகு, மூன்று மாதங்களாக பிரித்து பிரித்து மூன்று தடவைகள் தலாக் நோட்டீஸ் அனுப்பி விட்டேன். அவர்கள் அதில் முதல் நோட்டீஸை மட்டும் ரிட்டர்ன் செய்து விட்டு, மற்ற இரண்டையும் பெற்றுக் கொண்டு விட்டார்கள். நீதிமன்றத்தின் மூலமாகவும் இந்த வழக்கை என்னால் சரிவர அணுக முடியவில்லை. பெண் வீட்டாரும் எனக்கு முறையாக எந்த பதிலும் அளிக்கவில்லை. நான் இப்போது என்ன செய்வது?

**திருப்பூரிலிருந்து**
**ரிஜ்வான்**

✍ ஷரீஅத் ரீதியாக நீங்கள் எழுதி அனுப்பிய தலாக் உடைய செய்தியின் காரணமாக உங்களுக்கும், அந்தப் பெண்ணுக்கும் இடையேயுள்ள திருமண தொடர்பு முறிந்துபோய்விட்டது. மார்க்க ரீதியாக இனிமேல் நீங்கள் எந்த நேரத்திலும் வேறொரு ஸாலிஹான பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொள்வதற்கு எந்தத் தடையுமில்லை. அடுத்த வாழ்க்கை சிறப்பாக அமைய அல்லாஹ்விடம் அதிகம் துஆ செய்துதேடிக் கொள்ளுங்கள். தங்களிடமோ, தங்களின் குடும்பத்தார்களிடமோ ஏதாவது குறைகள் இருக்குமானால் அதை சரி செய்து கொண்டு "குடும்ப பெரியவர்களை வைத்து நன்றாக கலந்து முடிவு செய்து சிறந்த பெண்ணை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

எப்போதும் இதுபோன்ற விஷயங்களுக்காக நீதிமன்றங்களை மிதிக்காதீர்கள். வேண்டுமானால், "ஷரீஅத் கோர்ட்" பல இடங்களில் செயல்பட்டு வருகிறது. இன்ஷா அல்லாஹ் அவர்களிடம் சென்றால் விரைவில் உங்களின் பிரச்சனைகளுக்கு சிறந்த தீர்வுகள் கிடைக்கும்.

☛ இரண்டாவது திருமணம் செய்து கொள்ள முதல் மனைவியின் அனுமதி அவசியமா?

**பூணாவிலிருந்து**
**அன்வர்**

✍ அவசியமில்லை.

☛ நண்பர் ஒருவர், Term Deposit செய்துள்ளார். மாதச் சம்பளத்துடன் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அந்த டெபாசிட்டுக்கான வட்டியும் கூடுதல் வருமானமாக வருகிறது. அப்படி வரும் வட்டித் தொகையை அவர் பள்ளிவாசல்களின் சில தேவைகளுக்காக கொடுக்கிறார். அரசுக்கு செலுத்த வேண்டிய வரித் தொகையை அந்த வட்டித் தொகையிலிருந்து கட்டிக் கொள்கிறார். இது சரிதானா?

**காரைக்குடியிலிருந்து**
**கமாலுத்தீன்**

டெபாசிட்டுகளின் மூலமாக கிடைக்கும் தொகை வட்டிதான் என்று தெரிந்த பின்பும், அதை நாம் பயன்படுத்துவது கண்டிப்பாகக் கூடாது. அல்லாஹ்வின் பரிசுத்த இல்லங்களாகிய மஸ்ஜிதுகளுக்கு கொடுப்பதும் கூடாது. இவ்விரண்டும் இன்றி, எந்த நன்மையையும் எதிர்பார்க்காமல் அது போன்ற தொகையை யாருக்காவது தர்மம் செய்து விடுவதுதான் சிறந்த வழியாகும். வட்டி வரும் என்று தெரிந்தும் வங்கி களில் போய் நம் தொகைகளை முடக்குவது ஈமான் கொண்ட சகோதரர்களுக்கு நல்லதல்ல. அதற்கு பகரமாக விலைகளை கூட்டி கொடுக்கக்கூடிய, இலாபம் தரக்கூடிய வியாபாரங்களில் அந்தத் தொகைகளை போட்டு விடுவது அல்லது முடிந்தளவு காலிமனைகளை வாங்கி போடுவது அல்லது தங்கத்தில் முதலீடு செய்வது போன்ற வழிகளின் மூலமாக மேற்படி பணங்களை நாம் பாதுகாத்துக் கொள்வதோடு அதிலிருந்து ஹலாலான இலாபங்களையும் நாம் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, ஹலாலான வழிகளை விட்டுவிட்டு, மார்க்கம் தடை செய்திருக்கின்ற ஹராமான வழிகளில் செல்வது நம் ஈமானில் அதிகமான பலஹீனத்தை ஏற்படுத்தும். அல்லாஹ் பாதுகாப்பானாக.

புத்தம் புதிய ஆடைகளை போட்டுக் கொண்டு பெருநாளை கொண்டாடிய நாம், நம் ஏழை சகோதரர்களை கவனிக்காமல் இருப்பது பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**வேடசந்தூரிலிருந்து**
**அ.ஷேக் முஹம்மது**

அல்லாஹ் அவர்களுக்கு ஹிதாயத் செய்ய வேண்டும். செல்வம் கொடுக்கப்பட்டவர்கள், இல்லாதவர்களுக்கு வழங்கி, அவர்களையும் சந்தோஷமாக வாழ வைக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் ரமளான் மாதத்தில் நோன்பையும், ஜகாத்தையும், ஸதக்கத்துல் ஃபித்ரையும், மற்ற தான தர்மங்களையும் கட்டாயமாக்கியுள்ளான்.

பசித்திருந்து, ஏழைகளின் பசியை உணர வேண்டும் என்பதற்காக நோன்பை கட்டாயமாக்கினான்.

பெருநாள் அன்று அனைத்து ஏழைகளும் கவலைகளின்றி, உண்டும், உடுத்தியும் மகிழ வேண்டும் என்பதற்காகவே ஸதக்கத்துல் ஃபித்ருவை அல்லாஹ் கடமையாக்கினான். ஆனால், நம்மில் பலர், மேற்படி கடமைகளை சிறு சிறு காரணங்களைக் கூறி, விட்டு விடுகிறோம். தான தர்மங்களை புறக்கணித்து விடுகிறோம்.

அந்த ஏழைகளுக்கு வரக்கூடிய சிரமங்கள் நமக்கோ அல்லது நம் வாரிசுகளுக்கோ ஏற்படாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. எனவே, செல்வந்தர்கள் ஏழைகளின் விஷயத்தில் அல்லாஹ்விற்கு பயந்து செயல்பட வேண்டும்.

☛ ஜுமா அத் தொழுகை முடிந்தவுடன் இமாம் அவர்கள் துஆ ஓதும்போது, பலர் ஆமீன் சொல்கிறார்கள். சிலர் மட்டும் ஆமீன் சொல்வதோ, துஆவிற்காக தங்களின் கைகளை உயர்த்துவதோ கிடையாது. இதுபற்றிய விளக்கம் தேவை.

**பெரம்பலூரிலிருந்து**
**காஜா**

✍ ஆமீன் சொன்னால் இமாமுடைய துஆவில் இன்ஷா அல்லாஹ் அவாகளுக்கும் பங்கு கிடைக்கும். இல்லையானால் அவர்கள் அந்த இமாம் கேட்கக்கூடிய தீன் - துன்யாவுடைய நன்மைகளை இழந்தவர்களாக ஆகி விடுவார்கள். பலர் ஆமீன் சொல்லும் நேரத்தில் யாராவது ஒருவருடைய ஆமீனின் பரக்கத்தால் அனைவரின் ஆமீனுக்கும் பதில் கிடைத்து விடலாம். எனவே, அந்த துஆவில் கலந்து கொள்வதில் நன்மைகளும், பரக்கத்துகளும் இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

☛ இஸ்லாமிய சட்டப்படி ஒரு பள்ளிவாசல் நிர்வாகிகளின் பொறுப்புகள் மற்றும் பணிகள் என்ன?

**ஈரோட்டிலிருந்து**
**சுபைதா பீவி**

✍ நிர்வாகிகளாக பொறுப்பேற்பவர்கள் வெறும் பள்ளிவாசல்களின் கட்டிடங்களுக்கோ அல்லது வரவு - செலவுகளுக்கு மட்டுமோ பொறுப்பானவர்கள் அல்ல. மாறாக, பள்ளிவாசல் சார்ந்த தீன் - துன்யாவுடைய அனைத்து காரியங்களுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். எனவே, முதலில் அந்தப் பள்ளிவாசலுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இமாம்கள் மற்றும் முஅத்தின்களை அவர்கள் மிக மிக கண்ணியமாக வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் விஷயத்தில் அல்லாஹ்விற்கு பயந்து கொள்ள வேண்டும். தங்கள் வீடுகளில் அல்லது தங்கள் நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடிய ஊழியர் களைப் போன்று அவர்களை நினைப்பதும், அவர்களை செயல்படுத்துவதும் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

பின்பு, அந்தப் பள்ளிவாசலுக்கு சொந்தமான சொத்துகளை, கட்டிடங்களை முழுமையாக பராமரிக்க வேண்டும். அதன் வருமானம் மற்றும் செலவுகளின் விஷயத்தில் மார்க்கம் கூறியிருக்கின்ற வழிமுறைகளில் அணுவளவும் பிசகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிறகு, அந்த மஹல்லாவைச் சார்ந்த முஸ்லிம்களுக்கு ஏற்படக்கூடிய நல்ல - கெட்ட விஷயங்கள் அனைத்தையும் பார்த்து அதை முழுமையாக சரி செய்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, மேற்படி பள்ளிவாசலின் பொறுப்பு என்பது பெருமைக்காகவும், ஆடம்பரத்திற்காகவும்

அதை பயன்படுத்துவோமானால், **அல்லாஹ் தன் வீட்டை தான் நாடியவர்களைக் கொண்டு பாதுகாப்பதற்கு மிக மிக சக்தி பெற்றவன்** என்ற விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தான் நாடியவர் களுக்கு பதவியை கொடுக்கவும் செய்வான். தான் நாடியவர் களிடமிருந்து பதவியை பிடுங்கவும் செய்வான்.

மக்கத்து முஷ்ரிகீன்கள் மஸ்ஜிதுல் ஹராமை பராமரிப்ப தில் மிகுந்த பெருமை கொண் டார்கள். அல்லாஹ் தன் இறை வசனத்தின் மூலமாக அல்லாஹ் அவர்களின் அந்த பெருமையை தவிடுப் பொடியாக்கினான்.

பொதுவாகவே, எந்த பொறுப் பையும் நாமாக அதை தேடுவதை விட, அது நம்மை தேடி வந்தால் மட்டுமே அல்லாஹ்வின் உதவி யும் நம்மை தேடி வரும். பொறுப்புகள் கிடைத்ததற்கு பின்பு பெருமையும், ஆடம்பரமும், அதிகாரமும், ஆதிக்கமும் அறவே கூடாது. அதற்கு மாற்றமாக, பொறுப்பு கொடுக்கப்பட்டவரி டம் பணிவும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் தன்மையும், மக்களிடம் இரக்க குணமும் அதிகரிக்க வேண்டும். அப்படி யிருந்தால் அந்தப் பொறுப்பு களில் நம்மீது அல்லாஹ்வின் ரஹ்மத்தும், உதவியும் என்றென்றும் வந்து சேரும்.

---


CityAds BOOKS **www.cityadsbooks.com**

# இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்-நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர்ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds For More Details Call/Whatsapp: **98410 16016**

## நுகர்ந்தவை

நூல் : **தமிழுக்கு தொண்டு செய்த முஸ்லிம்கள்**
ஆசிரியர் : மவ்லவீ **மீ.கா.முஹம்மது ரஃபீக் மிஸ்பாஹி**
பக்கங்கள் : **132;** விலை : ரூ.**130/-**
வெளியீடு : **நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்,**
43, யூனிகான் காம்ப்ளக்ஸ்,
குருவிக்காரன் சாலை, மதுரை – 625 020.
அலைபேசி : 9080330200

தமிழுக்கு முஸ்லிம்கள் செய்த சேவைகள் ஏராளம்! ஏராளம்! முஸ்லிம்கள் தமிழுக்குச் செய்த சேவைகளை நம் சமுதாயமே மறந்துவிட்டது. மேலும், சங்பரிவார் கூட்டம் முஸ்லிம்கள் தமிழுக்கு செய்த அரும்பெரும் சேவைகளை மறைத்துவிட்டது. எந்தளவிற்கென்றால் முஸ்லிம்கள் தமிழர்களா? என்று கேள்வி கேட்டு வருகிறார்கள். இந்நிலையில், "தமிழுக்கு தொண்டு செய்த முஸ்லிம்கள்" என்ற அரிய நூலை சமுதாயத்திற்கு வழங்கியுள்ள நூலாசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! நூலாசிரியர் நூலில் சொல்லியுள்ள அறிஞர் பெருமக்களில் ஒரு சிலரை மட்டுமே நாம் அறிந்துள்ளோம். நாம் அறியாத தெரியாத பல அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை அர்த்தத்தை மிகத் தெளிவான ஆதாரத்தோடு நமக்குத் தந்துள்ளார் நூலாசிரியர்.

இந்நூலாசிரியர் மவ்லானா மீ.கா.முஹம்மது ரஃபீக் மிஸ்பாஹி மிகச் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர். இவரின் எழுத்திலும், பேச்சிலும் நகைச்சுவை இழையோடும்; 'அல்ஹிந்து' இதழின் ஆசிரியராக பணியாற்றி சமுதாயப் புரட்சி செய்தவர். பன்னூல் ஆசிரியர்; பல இதழ்களில் வெளியான இவரின் கட்டுரைகள் வாசக நேயர்களின் பரவலான வரவேற்பை பெற்றுள்ளன.

பழம்பெரும் முஸ்லிம் புலவர்களைப் பற்றிய வாழ்க்கை குறிப்புகள் இந்நூல் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. அவர்களின் கவிதைகளால் அவர்கள் நிகழ்த்திய அதிசயங்களை அழகாக சொல்லப்பட்டுள்ளன.

இந்நூலை நீங்கள் படிக்க துவங்கினால் நூல் முழுவதையும் படித்த பின்புதான் நூலை கீழே வைப்பீர்கள். நூலை வாங்கிப் படித்துப் பாருங்கள் உண்மை தெரியும். இது போன்று பல நூல்களை மவ்லானா மீ.கா.முஹம்மது ரஃபீக் மிஸ்பாஹி சமுதாயத்திற்கு வழங்கிட வேண்டுகிறோம்.

ஆய்வு : **பாவா**

# அல்லாஹ்வே! விடமாட்டேன்!! அருள் மழை பொழியும் வரை!!!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"எனக்கு வழிபட்டவர் அல்லாஹ்வுக்கு வழிபட்டவரா வார்; எனக்கு மாறு செய்பவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்ப வராவார்; தலைவருக்கு வழி படுபவர் எனக்கு வழிபடுபவரா வார்; தலைவருக்கு மாறு செய் பவர் எனக்கு மாறு செய்பவரா வார்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

வழிபடுதல், கட்டுப்படுதல், ஒன்றுபடுதல் என்பது குர்ஆன், ஹதீஸ், இமாம்கள் ஆகியோரின் வழிகாட்டுதலும், வலியுறுத்தலும் ஆகும்.

இக்கட்டுப்பாடு என்பது நபி (ஸல்) அவர்களின் ஆரம்ப காலம் முதல் வலியுறுத்தப் பட்டுக்கொண்டே வந்ததாகும்.

கட்டுப்பட்டபோது அதன் பலனை பெற்றார்கள்; கட்டுப் பாட்டை இழந்தபோது அதன் இழப்பையும் அனுபவித்தார்கள்.

கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும் எல்லோருமே விரும்புகிறார்கள். ஆனால் அதில் ஸ்திரமாக நிற்கமுடியவில்லை; சுயநலம் நுழைகிறது. கட்டுப்பாடு கலைகிறது.

சமீபத்தில் ஒரு கருத்துச் சிதறல் தமிழகத்தை வடநாட்ட வர் ஆக்கிரமித்துக் கொண்டி ருக்கிறார்கள் என்பதே அது. தமிழகத்து மாவட்டங்களில், மார்வாடிகள் தொழிலை ஆக்கிர மிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை எதிர்த்து தொழி லில் போட்டி போட முடிய வில்லை. தமிழர்களின் வீடு களை விலைக்கு வாங்குகிறார் கள். மெயின் பஜாராகயிருந்தது இப்போது ஜெயின் பஜாராகி விட்டது. தமிழர்களை அவர்கள் மதிப்ப தில்லை. சிலநேரங்களில் தமிழர்களை மிரட்டவும், விரட்ட வும் செய்கிறார்கள். எனவே, தமிழகத்தைக் காப்பாற்ற இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஒன்றுபட வேண்டும் என்ற வேண்டுகோள் வந்து கொண்டே இருக்கிறது.

ஒற்றுமை ஒன்றுபடல் என்ற கோஷம் எல்லா பக்கங் களிலிருந்து எழுந்து கொண்டிருக்கிறது.

தொல்லை, துன்பம், இடையூறு ஏற்படும்போதுதான் மனிதனின் சிந்தனை ஏறெடுத்துப்பார்க்கிறது. அடக்கு

முறைக்கு ஆளாகும்போது தான் அறிவு வேலை செய்ய ஆரம்பிக்கிறது.

ஒற்றுமையின்மையால் உங்கள் உரிமை பறிக்கப்பட்டு விடும் என்ற உபதேசம் ஆபத்து வந்தபின் தான் சிந்தனைக்கே வருகிறது. மார்வாடிகள் சிலர் சேர்ந்து விட்டால் உடனே கோயிலை கட்டி விடுகிறார்களாம். அதன் பின் அதன் சுற்றுவட்டாரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுகிறார்களாம்.

இது தமிழனை தட்டியெழுப்பியிருக்கிறது. அதனால் ஒன்றுபட வேண்டுமாம்.

அல்லாஹ் கூறும்போது நபிமணி அழைத்தபோது கண்டு கொள்ளாதவர்கள், இன்னல் வரும்போது துள்ளு கிறார்கள்; துடிக்கிறார்கள். வரு வதற்குமுன் அணை போடாமல் வந்தபின் அணை போட முயலும் முயற்சி மிகச் சிரமமே.

"அறிவிலிகளின் ஆட்சி யிலிருந்து பாதுகாப்புத் தேடு கிறேன். பொய்யை உண்மை யாக்குபவர்கள், அநியாயத்துக்கு உதவி செய்பவர்கள் என்னைச் சார்ந்தவர்களல்ல" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிலிகள், அநியாயக் காரர்கள், பொய்யர்கள் யார்? எல்லா அரசியல், அரசியலல்லாத வர்களுமே இந்தப் பட்டியலில் வருகிறார்கள். இங்கே முஸ்லிம் களை மட்டுமே சல்லடை போட வேண்டியதிருக்கிறது.

அநீதி செய்யும் அரசனிடமே உண்மை உரைப்பவர் அவர் செய்யும் ஜிஹாத் எனலாம்.

இன்றைக்கு அத்தகைய தியாகிகளைக் காணுவது அரிது. பொய் சொன்னால் பணம் கிடைக்கும். பதவி கிடைக்கும். கொள்கையை விட்டுக் கொடுத்தால் சுகம் கிடைக்கும் என்ற சுயநலவாதிகளால் சமு தாயத்துக்கு நஷ்டமும், இழிவும் ஏற்படுவதைக் கண்டு முஃமின்களால் அழ மட்டுமே முடிகிறது.

சமுதாயம் புதிய உரிமை களைப்பெற முடியாவிட்டாலும், இருக்கும் உரிமையையாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டாமா? அந்தச் சக்தி ஒற்றுமையில் தான் இருக்கிறது என்பது தெரிந்தும், மமதையிலும் போதையிலும் இருப்பது போல் இருப்பதால் இயலாதவர்கள் கைகளைப் பிசைந்து கொண்டு இரத்தம் உறைந்துபோய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

"தவறு செய்பவர்களை தடுக்காவிட்டால் சக்தியிருந் தும் கண்டு கொள்ளாதவர்கள், அவர்கள் மரணிப்பதற்குள் அல்லாஹ்வின் தண்டனை வரும்" என ஹள்ரத் ஜுபைர் (ரளி) அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

என் இரட்சகனே எனக்கு கல்வி ஞானத்தை அதிகப்படுத்துவாயாக (அல்குர்ஆன் 20 : 114)

جامعة منبع الاسرار للعلوم الشرعية الاسلامية والعلوم العصرية

# ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி

# JAMIA MANBAUL ASRAR ARABIC COLLEGE

D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், திருவாரூர் ரோடு,
மன்னார்குடி–614001. திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.

D.G. Town, Near Markas Pallivasal, Thiruvarur Road,
MANNARGUDI - 614001. Thiruvarur Dist, Tamil Nadu.

## இரு கல்வியும் கற்போம்! கண்ணியம் காப்போம்!!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

அன்பான பெற்றோர்களே... அல்லாஹ்வின் கிருபையால் புதியதாக துவங்கப்பட்டுள்ள எங்கள் மத்ரஸாவில் மார்க்கக் கல்வியுடன் கூடிய பள்ளி மற்றும் காலேஜ் படிப்புகளும் சேர்த்து கற்றுத்தருவதுடன், தங்களின் குழந்தைகளின் ஈருலக வாழ்வில் சிறந்த மார்க்கக்கல்வி பெற்ற மாணவர்களாக திகழ்வதற்கு எங்களின் மதரஸாவில் இனிதே பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### கல்லூரியின் சிறப்பம்சங்கள்

### மார்க்கக்கல்வி பாட திட்டம் மவ்லவீ ஆலிம் பட்டப்பிரிவு

- ★ உயர்நிலை 10, மேல் நிலை +2 பள்ளி படிப்பு
- ★ B.Com., B.B.A., போன்ற பட்ட படிப்பு (Annamalai University)
- ★ C.F.A., (Certificate in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ D.F.A., (Diplama in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ B.A., Arabic படிப்பு (Chennai University)
- ★ D.F.U., (Diplama in Functional Urdu)
- ★ கிராஅத் பட்ட பயிற்சி பிரிவு
- ★ அரபி, உருது, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமை பெறச் செய்தல்
- ★ கம்யூட்டர் பயிற்சி

**குறிப்பு : மாணவர்கள் சேர்க்கைப்பதிவு நடைபெறுகிறது.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : மவ்லானா, மவ்லவீ, ஹாஃபிழ், காரி, அஃப்ஜலுல் உலமா
**B. ஜமீலுத்தீன் தாவூதி பாஜில் காஸிமி, D.F.A.,**

நிறுவனர் & முதல்வர் : ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி
D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், ஜவர் சமாதி பஸ் ஸ்டாப், திருவாரூர் ரோடு, மன்னார்குடி–614001. திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.

**Cell : 97895 18284, 96593 88904.**

ஔரங்கஜீப்பின் ஆட்சி, ஐம்பது ஆண்டுகள் நீடித்தது என்றால், அதற்கு அவரின் பரந்த எண்ணம், தியாகம், பொறுமை எல்லாம் காரணமாகும்.

சமுதாயத்துக்கு தியாகம் என்ற பெயரால் பல பிரிவுகளுக்கு சொந்தக்காரர்கள்; இவர்களில் எவரும் அல்லாஹ்வின் பார்வையிலிருந்து தப்ப முடியாது. கப்ரு வரை காத்திருக்க வேண்டியதில்லை. இறப்புக்குமுன் துன்பங்களை சந்திக்க வேண்டியவர்களாகி விடுவார்கள்.

யா அல்லாஹ்! சின்னா பின்னமாய் சிதறிக் கிடக்கும் சமுதாயத்தின் சீர்திருத்தம் ஈமானுக்கு உரமாக இருக்குமே!

ஒற்றுமையின்மையால் உயிரிழப்புகள், உடைமை இழப்புகள், உரிமை இழப்புகள், கேவலம் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் நீ, நடக்கட்டும் என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாயா?

நான் அர்ரஹ்மான்; எல்லோரையும் பாவிப்பேன் என்று சொல்கிறாயா?

"இறைவா! இவ்வுலகம் முஃமின்களுக்கு சிறைச்சாலை" என உனது நபி (ஸல்) அவர்கள் சொல்லவில்லையா? என நினைவூட்டுகிறாயா! அதற்காக குட்டக் குட்ட குனிந்து கொண்டே இருக்கச் சொல்கிறாயா?

இறைவா! உலகை ஆள வேண்டுமென்ற ஆசையில்லை. கௌரவமும், கண்ணியமும் இருந்தால் போதும்.

இஸ்லாமிய சட்டங்களை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். காழ்ப்புணர்ச்சியால் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தட்டிக் கேட்க முடியவில்லை. காரணம், பலத்தை பயன்படுத்த முடியாமல் பிரிவினையால் பலஹீனத்தால் பரிதாபப் பட்டுக் கிடக்கிறோம்.

இவற்றை இப்படி ஆட்டிப் படைப்பவன்நீதான், நன்மை, தீமை, ஏற்றத் தாழ்வு, எல்லாவற்றையும் படைத்தவனும் நீதான், அறிவைக் கொடுத்திருக்கிறேனே பகுத்தறிய நீ ஏன் சிந்திக்கவில்லை, செயல்படவில்லை என்று கேட்கிறாய்!

அல்லாஹ்வே! அந்த ஆற்றலையும், ஹிதாயத்தையும் நீயே தந்தருள். வேதனையில் விம்முகிறோம். சமுதாயத்தை நினைத்து கவலைப்படுகிறோம்.

கவலைகளை அகற்றுபவன், பிரார்த்தனையை அங்கீகரிப்பவன், மகிழ்ச்சியைத் தருபவன் நீயேதான் ரஹ்மானே! எங்களது கவலையும், பிரார்த்தனையும், மகிழ்ச்சியும் எல்லாமே இந்த சமுதாயத்துக்காகத்தான்.

சமுதாயத்துக்காக என்று சொல்லி சுயநலத்துக்காக

சுகத்தைத் தேடவில்லை அல்லாஹ்வே!

மண்ணறையில் நீ வழங்கும் தென்றலை விடவா இந்த உலக சுகம்; இதை மறந்து உலகைத் தேடி அலைபவர்களுக்கு நீ தான் நற்சிந்தனை தர வேண்டும்.

மஹ்ஷரிலே நீ போ சொர்க்கத்துக்கு என்று சொல்ல, அதற்கு தகுதியை அமைத்துக் கொள்ள சமுதாயம் சந்தோஷப்படும்படியான சேவை செய்யவே விரும்புகிறோம்!

இம்மக்களை வழிநடத்திச் செல்பவர்கள் ஒன்றிணைந்து ஓரணி நிற்க நீ அருள வேண்டும் என்று கெஞ்சுகிறோம்.

இந்தக் கெஞ்சல் உனக்குக் கேட்கும். இந்த சமுதாயத் தலைவர்களின் செவிகளுக்கு எட்டச் செய்து, அவர்களது இதயங்களை 'இக்லாஸ்' எனும் தூய்மைப் பெட்டகமாக ஆக்கி குஃப்ர் எனும் இருளிலிருந்து காப்பாற்றி எல்லோரையும் ஒளி இலங்கச் செய் ரப்பே!

நாளிதழ்கள், வார - மாத இதழ்கள், தொலைக்காட்சிகள் அத்தனையும் முஸ்லிம்களுக்கு எதிராக செய்தி வெளியிடுவது முஸ்லிம்களுக்கு எதிரான கொலைச் சம்பவங்களை மறைப்பதும், உண்மைகளை திரித்து பொய் செய்திகளை வெளியிடுவது, முஸ்லிம்களை தீவிரவாதிகளாக சித்தரிப்பது, இவர்களுடைய பொய், நீதிமன்றங்களில் வெளிச்சத்துக்கு வந்த பின் செய்தியை வெளியிடாமல் மூடி மறைப்பது, முஸ்லிம் பெயரை தவறாக சித்தரித்து வெளியிடுவதும் அது முஸ்லிமல்லாத நபர் என ஊர்ஜிதமாக்கப்பட்டபின் செய்தி வெளியிடாமல், கண்டு கொள்ளாமல் இருப்பது, சில வேளைகளில் காவல்துறையிலும் ஓரவஞ்சனை நடப்பது.

இதற்கெல்லாம் என்ன காரணம்? ஏன் இவர்கள் முஸ்லிம்களை தவறான பார்வையில் வெளிப்படுத்துகிறார்கள். முஸ்லிம்களைப் பற்றி தவறாக பிரச்சாரம் செய்கிறார்கள்.

"மணிச்சுடர்" நாளிதழைத் தவிர முஸ்லிம்களிடம் பத்திரிகைகளோ, தொலைக் காட்சிகளோ இல்லை. இவற்றை நடத்த, இயக்க முஸ்லிம்களிடம் வசதி இல்லையா? பொது நோக்குப் பார்வை இல்லை.

இவர்கள் ஏதோ ஒரு வகையில் தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த தவறுக்கு தண்டனையாக ஒட்டு மொத்த சமுதாயமும் வேதனையை அனுபவிக்க வைப்பது அல்லாஹ்தான். இவற்றை எடுத்துக் கூற யார் இருக்கிறார்கள்?

உலமா பெருமக்கள் இருக்கிறார்கள். ஆனால், சொல்ல முடியவில்லை. பல கட்சித் தலைவர்களை தங்கள் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள், உலமா பெருமக்களின் அறிவுரைகளை, வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

அப்படி ஜும்ஆ மேடையில் பேசிவிட்டால் பூகம்பம் கிளம்பிவிடும். இஸ்லாத்தைப் பற்றி கவலைப்படாமல் நமக்குத் தலைவர் நாயகம் (ஸல்) அவர்கள்தானே; நமக்கு வழிகாட்டி அல்குர்ஆன்தானே; அதை விளக்கிச் சொல்பவர்கள் உலமா பெருமக்கள்தானே என்ற உணர்வின்றி, யார் யாரையோ தலைவர், உயிரே என்றெல்லாம் அழைத்து, பணம், உழைப்பு எல்லாம் இழந்து அல்லது ஒரு சிறு பிரதிபலன் பெற்று சமுதாயத்தையே அடகு வைப்பதாக நடந்து கொள்கிறார்கள்.

இட ஒதுக்கீட்டால், பதவி அதிகாரம் பெற்ற ஓரிரு முஸ்லிம்கள், அவர்களிடம் சென்றால் முகம்சுளிப்பதும் வெறுப்பதும் இவர்கள் குணமாக இருக்கிறது.

தனி நபரால் தினப்பத்திரிகை நடத்த முடியும். அது சிலருக்கு ஜால்ரா போடக்கூடியதாக இல்லாமல், சமுதாயக் குரலை ஓங்கி ஒலிக்கும் தைரியமுடையதாக இருக்க வேண்டும்.

இந்தச் சமுதாயம் உலமா பெருமக்களை தங்கள் பிரதிநிதியாக, தலைவராக ஏற்க வேண்டும். உலமா பெருமக்களுக்கு அரசியல் தெரியாது; உலகம் தெரியாது என்று ஒதுங்கினால் கியாமத் வரை இந்தச் சமுதாயம் அல்லல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

இன்றைய முஸ்லிம் இதழ்களில், அரசியல் விமர்சனம் எழுதும் ஆலிம்களின் ஆற்றலைப் பாருங்கள். உலகளாவிய செய்திகளை இஸ்லாமிய வட்டத்துக்குள்ளிருந்து வெளி உலகுக்கு தெரியப்படுத்தும் நேர்த்தியைப் பாருங்கள்.

மேடைகளில் அரசியல் கருத்துக்களை ஆதாரங்களோடு அள்ளிக் கொட்டும் ஆலிம்களைப் பார்க்கவில்லையா?

இஸ்லாமிய மன்னர்களின் அரசியல் முதல் ஆன்மிகம் வரை உலமா பெருமக்கள் ஆலோசகர்களாக வழிநடத்துபவர்களாக, சட்ட வல்லுநர்களாக இருக்கவில்லையா?

தீன் அடிப்படையில், தக்வாவின் அடிப்படையில் ஒரு தலைமையை அமையுங்கள். எல்லோரும் அத்தலைமைக்கு

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

யைஅத் செய்யுங்கள் அல்லது உலமா பெருமக்களிடம் தலைமைத்துவத்தை ஒப்படையுங்கள். குடும்பத்தார் பற்றி குடும்பத் தலைவர் விசாரிக்கப்படுவார்.

மஹல்லா மக்கள் பற்றி பள்ளி நிர்வாகிகள் விசாரிக்கப்படுவார்கள்.

சமுதாயத்தை வழி நடத்த, செல்வாக்குப் பெற்ற, சொல் வாக்குப் பெற்ற, செல்வ வசதி பெற்ற சில பேர் இருப்பார்கள். இவர்களும் விசாரிக்கப்படு வார்கள்; விசாரிக்கப்பட்டே ஆக வேண்டும்.

இவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளட்டும். சக்தி, செல்வாக்கு மற்றும் தடுக்கும், எடுத்துச் சொல்லும் ஆற்றல் இருந்தும் எனக்கென்ன வந்தது என்று இருப்பார்களா னால் மரணிக்கும் முன்பே உல கிலேயே அல்லாஹ் தண்டனை தந்துவிடுவான். தண்டனையை எதிர்கொள்ள திராணி இருந் தால், தைரியம் இருந்தால், அவமானப்பட ரெடி என்றால்.... எப்படியாவது இருந்து தொலையுங்கள்.

ஆனால், சமுதாயம் வலிமைப் பெற வேண்டும். சமுதாயம் மரியாதைப் பெற வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்குமானால் கரம் கோர்த்து ஒற்றுமையோடு செயல்படுவோம்!

---

“ஜிஹாதைவிட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ் மிகச் சிறந்ததாகும்” என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள். (நூல் : புகாரி)


# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை – 1.

04373-254354; 253339; 99444 54354

# காலக்கண்ணாடி

– தென்காசி மஸ்ஊது

## மின்னல்!

வானில் தோன்றும் மின்னல் மரங்களின் வழியே நிலத்தில் பாய்ந்து விடும். சில நேரங்களில் விலங்குகளும், மனிதர்களும் மின்னல் தாக்கி இறக்க நேரிடுகிறது. மின்னல் ஏற்படும் பகுதியை விட உயரத்தில் விமானங்கள் பறப்பதால் அவை மின்னலால் பாதிக்கப்படுவதில்லை. இருந்தாலும் சில சமயங்களில் ஆகாய விமானங்களும் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

- இந்து தமிழ் (10.03.24)

“நயமும், பயமும் தரக்கூடியவாறு மின்னலை அவன் உங்களுக்குக் காண்பிப்பதும், மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து, அதனைக் கொண்டு இறந்த பூமியைச் செழிக்கச் செய்வதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். அறிவுடைய ஜனங்களுக்கு நிச்சயமாக இதில் [ஒன்றல்ல, பல] அத்தாட்சிகளிருக்கின்றன”

- அல்குர்ஆன் (30 : 24)

“அல்லது, [இவர்களுக்கு இன்னும் ஓர் உதாரணம் :] வானத்திலிருந்து பொழியும் மழையைப் போன்றதாகும்; அதில் காரிருள்களும், இடியும், மின்னலும் [கலந்து] உள்ளன; [இவ்வகை மழையில் அகப்பட்டுக் கொண்டோர்] இடி முழக்கங்களால் மரணத்திற்குப் பயந்து தங்களுடைய விரல்களைத் தம் காதுகளில் வைத்து [அடைத்துக்] கொள்கிறார்கள்; அல்லாஹ்வோ நிராகரிப்பவர்களைச் சூழ்ந்து கொள்கிறான்”

- அல்குர்ஆன் (2:19)

“அம்மின்னல் அவர்களின் பார்வைகளைப் பறிக்க நெருங்குகின்றது.....

- அல்குர்ஆன் (2 : 20)

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ **அஹ்மதுல்லாஹ்** காஷிஃபீ காஸிமீ

## மிஸ்வாக் செய்வதின் முக்கியத்துவம்

1. "எனது உம்மத்துக்கு சிரமம் ஏற்படும் என்ற அச்சம் மட்டும் இல்லையென்றால் ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் மிஸ்வாக் செய்ய அவர்களுக்கு கட்டளையிட்டிருப்பேன்".
அறிவித்தவர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் 589, புகாரீ - 887)

2. "ஒவ்வொரு தொழுகையின் நேரத்திலும் ஒளூ இருந்தாலும் ஒளூ செய்ய வேண்டும் என நபிகளாருக்கு கட்டளையிடப் பட்டிருந்தது. ஆனால், பின்பு சிரமத்தைக் கருதி ஒவ்வொரு தொழுகைக்கும் (ஒளூ இருந்தால்) மிஸ்வாக் செய்தால் போதுமென அல்லாஹ் கட்டளையிட்டான்".
(நூல் : அபூதாவூது 48 பாகம் - 1, பக்கம் - 6)

3. "ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) என்னிடம் வரும்போதெல்லாம் மிஸ்வாக் செய்வதை வலியுறுத்திக் கூறுவார்கள். அதிகமாக மிஸ்வாக்செய்வதால்என்ஈறுகளைக்காயப்படுத்திவிடுவேனோ என்று பயப்படுமளவு மிஸ்வாக் செய்து வருகிறேன்."
(நூல் : அஹ்மத் 22269 பாகம் - 5, பக்கம் - 263)
(இப்னுமாஜா - 289)

4. "எனது உம்மத்துக்கு சிரமம் ஏற்படும் என்ற அச்சம் மட்டும் எனக்கு இல்லையென்றால் தொழுகைக்கு ஒளூ கடமையாக இருப்பதைப் போன்று மிஸ்வாக் செய்வதையும் கடமையாக்கியிருப்பேன்".
(நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா 202 (16)
பாகம் - 1 பக்கம் - 170)

5. ஒரு தடவை நபி (ஸல்) அவர்களிடம் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வழக்கத்தை விட தாமதமாக வந்ததற்கு நபிகளார் காரணம் கேட்டார்கள். அதற்கு ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நீங்கள் நகங்களை வெட்டாமல், இடுக்கு

களை சத்தம் செய்யாமல், மிஸ்வாக் செய்யாமல் இருக்கும் நிலையில் எப்படி உங்களிடத்தில் வருவது? என பதிலளித்தார்கள்."

(நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா 202 (24)

6. "நீங்கள் மிஸ்வாக் செய்து (பற்களை) சத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். (மிஸ்வாக்) ஒற்றைப்படையாக செய்யுங்கள். ஏனெனில் அல்லாஹ் ஒருவன், ஒருமையை விரும்புகிறான்"

(நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா 202 (25)

7. "மிஸ்வாக் சம்பந்தமாக ஏதேனும் வசனம் இறங்கி விடுமோ என்று கருதுமளவுக்கு நபி (ஸல்) அவர்கள் (மிஸ்வாக் பற்றி) வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள்.

(நூல் : முஸ்னது அஹ்மத் 3122)

8. "மிஸ்வாக் செய்வது மனிதனின் இயற்கையான குணங்களில் ஒன்றாகும்." (நூல் : கன்ஜுல் உம்மால் 26161)

9. "அதிகமாக மிஸ்வாக் செய்வது உங்கள் மீது கட்டாயமாகும்."

(நூல் : புகாரீ 888)

10. மிஸ்வாக் செய்வது பாதி ஒளு - ஒளு செய்வது பாதி ஈமான்

(நூல் : கன்ஜுல் உம்மால் 26159)

11. நபி (ஸல்) அவர்கள் எப்பொழுதும் ஊரிலும், பயணத்திலும் தன்னுடன் ஐந்து பொருட்களை வைத்திருப்பார்கள்.

(i) முகம் பார்க்கும் கண்ணாடி (ii) சுர்மா (iii) சீப்பு
(iv) டேலா கட்டி (V) மிஸ்வாக்

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்

(நூல் : கன்ஜுல் உம்மால் 17614)

12. ஸஹாபாக்கள் தங்களுடைய மிஸ்வாக்கை தன் காதுகளுக்கு மேல் வைத்துக் கொண்டு ஒவ்வொரு தொழுகைக்கு முன்பும் மிஸ்வாக் செய்வார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்

மேலும், கடை வீதியில் நடந்து கொண்டிருக்கும் போதும் மிஸ்வாக்கை தன் காதுகளுக்கு மேல் வைத்துக் கொள்வார்கள்.

(நூல் : முஸன்னஃப் இப்னு அபீஷைபா 202 (13)
பாகம் - 1, பக்கம் 160) (புத்லுல் மஜ்ஹூத்
பாகம் - 1, பக்கம் - 100)

*(தொடரும்)*

# பசியாற்று!

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

وَمَآ أَدْرَىٰكَ مَا ٱلْعَقَبَةُ ۝١٢ فَكُّ رَقَبَةٍ ۝١٣ أَوْ إِطْعَٰمٌ فِى يَوْمٍ ذِى مَسْغَبَةٍ ۝١٤
يَتِيمًا ذَا مَقْرَبَةٍ ۝١٥ أَوْ مِسْكِينًا ذَا مَتْرَبَةٍ ۝١٦

“(நபியே!) ‘அகபா’ என்றால் என்னவென்று நீங்கள் அறிவீரா? அதுதான் ஓர் அடிமையை விடுதலை செய்வது அல்லது கடும் பசியான நாளில் உணவளிப்பது, உறவு முறையில் உள்ள அனாதைக்கு அல்லது (வறுமையில்) மண்ணைக் கவ்விக் கிடக்கும் ஓர் ஏழைக்கு உணவளிப்பது” - அல்குர்ஆன் (90 : 12, 13, 14, 15, 16)

தர்மங்களில் சிறந்த தர்மம், உணவு தர்மமே! காரணம், அதில்மட்டும்தான் மனிதனுக்கு போதுமென்ற மனநிலை உருவாகிறது. பழையக் கஞ்சியை உண்டு வயிறு நிரம்பியவனிடம் கூட சுவைமிக்க உயர் ரக பிரியாணியைக் கொடுத்து சாப்பிடு என்று சொல்லப்பட்டாலும், “வயிறு நிரம்பி விட்டது; வேண்டாம்” என்பான். மனிதனுக்கு உலகப் பொருட்களில் எதைக் கொடுத்தாலும், எவ்வளவு கொடுத்தாலும் போதுமாகாது. ஆனால், உணவைத் தவிர.

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள் கூறியதாவது : “ஒரு மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் “இஸ்லாமிய பண்புகளில் சிறந்துது எது?” என்று கேட்டார். அதற்கு நபியவர்கள், “(பசித்தோருக்கு) நீர் உணவளிப்பதும், நீங்கள் அறிந்தவருக்கும், அறியாதவருக்கும் ஸலாம் (முகமன்) கூறுவதும் ஆகும்” என்று பதிலளித்தார்கள்.

(நூல்: புகாரீ - 12, முஸ்லிம் - 83, அபூதாவூத் - 4520, நசாயீ - 4914 இப்னு மாஜா - 3244, முஸ்னது அஹ்மத்)

## பாதுகாப்புப் பெற்றவர்கள்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : “நாங்கள் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் இருந்தோம். அப்போது ஒரு மனிதர் வந்தார். அவர் கைஸ் குலத்தைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். அவர், “நாயகமே!

ஹிம்யர் குலத்தைச் சபியுங்கள்" என்று கூறினார். அப்போது அண்ணலார் அவரிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். பிறகு வேறு ஒரு பக்கத்திலிருந்து அவர் அண்ணலாரிடம் வந்தார். அப்போதும் அண்ணலார் அவரிடம் இருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். பிறகு இன்னொரு புறத்திலிருந்து அண்ணலாரிடம் வந்தார். அப்போதும் அண்ணலார் அவரிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

அண்ணலார், "அல்லாஹ் (யமன் தேசத்து ஹிம்யர் குலத்தினருக்கு அருள் புரிவானாக! அவர்களின் வாய்களில் எப்போதும் ஸலாம் இருக்கிறது. (அதாவது மக்களிடையே ஸலாமை அமைதியை அதிகமதிகம் பரப்புகிறார்கள்) அவர்களின் கைகளில் உணவு இருக்கிறது. (அதாவது அவர்கள் ஏழைகளுக்கும், விருந்தினருக்கும் உணவு வழங்கிய வண்ணம் இருக்கிறார்கள்) அவர்கள் அமைதியாகவும், இறை நம்பிக்கை மிக்கவர்களாகவும் இருக்கின்றனர்" என்று கூறினார்கள்.

(நூல் : திர்மிதீ - 3864; (முஸ்னது அஹ்மத்)

## கண்ணாடி அறைகள்

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "சொர்க்கத்தில் சில கண்ணாடி அறைகள் உள்ளன. அவற்றின் உள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்ளேயும் பார்க்க முடியும். யார் (பசித்தவருக்கு) உணவளித்து, இன்சொல்பேசி, தொழுகையையும், நோன்பையும் முறையாக கடைபிடித்து இரவில் மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது அல்லாஹ்வை நின்று வழிபட்டாரோ அவர்களுக்கே உயர்ந்தோன் அல்லாஹ் அவற்றைத் தயார் செய்து வைத்துள்ளான்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ மாலிக் அல் அஷ்அரீ (ரளி) அவர்கள் (நூல்:முஸ்னது அஹ்மத், தஃப்ஸீர் இப்னு அபீ ஹாத்திம், தஃப்ஸீர் இப்னு கஸீர் அல் அன்கபூத் வசனம் - 58)

## தக்க சமயத்தில் உயிர் காக்கும்

"ஸகர் [எனும்] நரகத்தில் உங்களைப் புகுத்தியது எது?" என்று குற்றவாளிகளிடம் கேட்கப்படும்] அதற்கு அவர்கள் கூறுவார்கள்: நாங்கள் தொழுகையாளிகளாக இருக்கவில்லை. நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவுமில்லை".

- அல்குர்ஆன் (74:42, 43, 44)

ஒருமுறை இறைவன் இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களிடம் "இன்னான் மிகப்

Since 1977-2023
46
Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

பெரும் பாவி, அவனைப் பிடித்து கொன்று விடுவீராக!" என்று கூறினான். இது அவனுக்குத் தெரிந்து விட்டது. எனவே, அவன் "தர்மம், சோதனைகள் மற்றும் விதியைத் தட்டி விடும்" எனக் கருதி, சில ரொட்டிகளைத் தயாரித்து ஏழைகளுக்குக் கொடுத்து வந்தான். மூஸா (அலை) அவர்கள் அவனை இறையாணைப்படி கொல்வதற்காக எங்கும் தேடித் திரிந்த போதினும் அவன் அன்று செய்த அறத்தின் காரணமாக அவர்களின் கண்களில் தென்படவில்லை.

இவ்வாறு ஒரு நாள் இரு நாளல்ல; இருபத்தி நான்கு ஆண்டுகள் அவன் செய்து வந்தான். அதன் காரணமாக அவன் மூஸா (அலை) அவர்களின் எதிரே சென்ற போதினும் அவர்களால் அவனைக் கொல்ல இயலாது போய் விட்டது.

இருபத்தி நான்கு ஆண்டுகளுக்குப்பின் ஒரு நாள் விதி அதன் வேலையை செய்தது. அன்று அவன் ரொட்டி தயாரித்து ஏழைகளுக்குக் கொடுக்க மறந்துவிட்டான். அன்று மூஸா (அலை) அவர்கள், தெருவிலே நடந்து சென்று கொண்டிருந்த போது அவன் அவர்களின் கண்களில் தென்பட்டதும், அவர்கள் அவனை அக்கணமே வாளால் ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விட்டார்கள்.

அதன்பின் மூஸா (அலை) அவர்கள், "இறைவா! அவன் இவ்வளவு காலமாக என் கண்களில் படாது எங்கே ஒளிந்திருந்தான்?" என்று வினவினார்கள். அதற்கு இறைவன், "அவன் எங்கும் ஒளியவில்லை. உன் கண் முன்னாலேயே நடமாடிக் கொண்டிருந்தான். அவன் இவ்வளவு காலமாக அறம் செய்து வந்தான். அதன் காரணமாக, நாம் அவனை உன் கண்ணிலிருந்து மறைத்து வைத்திருந்தோம். இன்று அவன் அறம் செய்வதில் அசட்டை செய்து மறந்து விட்டான். எனவே இன்று அவனை உன்கண்களில் தென்படச்செய்து உம் கையால் கொலையுறச் செய்தோம்" என்று பதிலளித்தான்.

## நல்லவர்கள் உண்ணட்டும்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "சஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ரொட்டியும், ஆலிவ்எண்ணெயையும் கொண்டு வந்து உண்ணக் கொடுத்தார். அண்ணலார் உணவருந்தி விட்டு "உங்களிடம் நோன்பாளி நோன்புதிறக்கட்டும். உங்கள் உணவை நல்லவர்கள் உண்ணட்டும். வானவர்கள் உங்களுக்காக அருள் வேண்டிப் பிரார்த்திப்பார்கள்" என்று கூறினார்கள்.

(நூல்: அபூதாவூத் - 3356, இப்னுமாஜா - 1737, முஸ்னது அஹ்மத், தாரமீ - 1707)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உனது உணவை இறையச்சம் உடையவர் தவிர வேறெவரும் உண்ண வேண்டாம்".

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ சயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ - 2318)

இறைநேசர் ஜுனைத் அல்பக்தாதி (ரஹ்) அவர்கள் காலத்தில் ஒருவர் எப்போதும் தமது உணவை ஸூஃபி மகான்களுக்கு விருந்தாக அளிப்பார். மற்றொருவர், "நீர் பொதுவான ஏழைஎளியவருக்கு உணவளித்தால் மேலானதாக இருக்குமே!" என்றார். அதற்கவர், "அவர்களின் முழு சிந்தனையோ அல்லாஹ்வின் பக்கம் இருக்கிறது. அவர்களுக்கு பசிக்குமாயின் அவர்களின் சிந்தனையில் இடையூறு விளையும். ஒருவருடைய சிந்தனையை அல்லாஹ்வுடன் இணைத்திருப்பதில் நான் உதவியாய் இருப்பது உலக சிந்தனையிலேயே முழு கவனமாய் மூழ்கியிருக்கும் ஓராயிரம் மனிதர்களுக்கு உணவளிப்பதை காட்டிலும் சிறந்ததாக கருதுகிறேன்" என்றார். இதை செவியுற்ற ஜுனைத் அல்பக்தாதி (ரஹ்) அவர்கள் இக்கருத்தை மிகவும் சிலாகித்து போற்றினார்கள்.

பசித் தேவை என்று வரும் போது மனிதநேய அடிப்படையில் யாருக்கேனும் உணவும், உதவியும் வழங்கிட வேண்டும். விரும்பி அழைக்கும் விருந்துகளில் நல்ல இறையச்சமுடைய நல்லடியார்கள் கலந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இறையச்சமுடையவர் உண்டால் இறைவழிபாடு செய்வதற்கு அந்த உணவு பயன்படும்.

நம்முடைய உணவை ஓர் இறைமறுப்பாளன் உண்ணுவதைவிட ஒரு முஸ்லிம் உண்ணுவது சிறந்தது. சாதாரண ஒரு முஸ்லிம் உண்ணுவதைவிட தொழுகை, வணக்கம் போன்றவற்றை பேணுதலுடன் நிறைவேற்றும் ஓர் இறையச்சமுள்ளவர் உண்ணுவது சிறந்தது. ஓர் இறையச்சமுள்ள பாமரன் உண்ணுவதை விட ஓர் இறையச்சமுள்ள மார்க்க அறிஞர் (ஆலிம்) உண்ணுவது சிறந்தது.

## பாவங்களை அழித்துவிடும்

அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "தண்ணீர், நெருப்பை அணைப்பதைப் போன்று தான தர்மங்கள் பாவங்களை அழித்துவிடும்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் முஆத் பின் ஜபல் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ - 2538; இப்னு மாஜா, முஸ்னது அஹ்மத்)

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "பனூ இஸ்ரவேலர்களில் ஓர்

இறைநேசர் காட்டுப்பகுதியில் சிறிய குடில் அமைத்து தங்கி 60 ஆண்டுகளாக இறை வணக்கம் செய்து வந்தார். சில நேரங்களில் அந்தத் துறவி தன் இருப்பிடத்தை விட்டு வெளியே (வந்து சிறிது நேரம் உலாவுவார் பின்னர் சென்று) விடுவார். அவ்வாறு வரும்போது, "நான் என் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தாலும் எப் போதும் இறை நினைவிலேயே இருப்பேன்; நன்மைகளை இன்னும் அதிகமாக செய்வேன்" எனச் சொல்லிக் கொள்வார்.

(இவ்வாறு வரும்போது ஒரு சமயம்) ஒரு பெண்ணைப் பார்த்தார். அவளோடு பேசினார். இப்பேச்சு காதலானது. காதலின் உச்சத்தில் அவர் அப்பெண்ணோடு ஆறு இரவுகளை கழித்தார். பிறகு அவர் தன் நிலையை உணர்ந்து தன் இருப்பிடத்திற்கு வந்துவிட் டார். மூன்று தினங்கள் கவலை யோடு உணவேதும் உண்ணா மல் இருந்தார். அச்சமயம் தம் கையிலிருந்த ஒரு ரொட்டியை உடைத்து இரண்டு யாசகர் களுக்கு தர்மம் அளித்தார். அதன் பிறகு அல்லாஹ் அவ ருடைய உயிரைக் கைப்பற்றி வருமாறு வானவரை அனுப்பி னான். அவர் ஆன்மா இறை வனிடம் வந்ததும், அவருடைய 60 வருட நன்மைகளை ஒரு தட்டிலும், அவர் செய்த விபச்சாரத்தின் தீமையை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்கப் பட்டது. விபச்சாரத்தின் தீமை வைத்து நிறுக்கப்பட்ட தட்டே அதிகம் கனத்தது.

பின்னர், அறுபது வருட நன்மைகளோடு இரு அரை (ஒரு) ரொட்டித் துண்டுகளின் நன்மையையும் அத்துடன் சேர்த்து நிறுத்து பார்க்கப்பட்ட போது, விபச்சாரத்தின் தீமையை வைத்து நிறுக்கப்பட்ட தட்டை விட இப்போது நன்மைகள் வைத்து நிறுக்கப்பட்ட தட்டு கனத்தால் கீழிறங்கியது. உடனே அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டன"

(நூல் : பைஹகீ, இப்னு ஹிப்பான்)

இந்த இறைநேசர் அறுபது ஆண்டுகளாக செய்து வந்த தொழுகை, நோன்பு, இறை தியானம் போன்ற இறை வணக்கங்களில் கிடைத்த நன்மைகளின் எடையைவிட தர்மத்தின் எடை கனமாக இருந்ததால் அவர் பாவம் மன்னிக்கப்பட்டது. எனவே, எடை அதிகமுள்ள நன்மையைத் தரும் உணவு தர்மத்தை தாராளமாக வழங்க வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஓர் இறைநம்பிக்கையாளர் பசி யோடு இருக்கும் மற்றொரு இறை நம்பிக்கையாளருக்கு உணவளித்தால், மறுமை நாளில் அவருக்கு அல்லாஹ்

## புதுக்கோட்டை

# ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரி

## இரு கல்வியும் ஒரே இடத்தில்...!

புதுகை மாநகரில் பொன்விழா ஆண்டைக் கடந்து கம்பீரமாகக் காட்சி தரும் ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரியில் மார்க்கக் கல்வியோடு பொதுக்கல்வியும் ஒருசேர ஒழுக்கத்துடன் அனுபவமிக்க பேராசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது.

*கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (நபிமொழி)*

## நமது அரபிக் கல்லூரியின் சிறப்பம்சங்கள் :

- ஏழு வருடம் மவ்லவீ ஆலிம் வகுப்புகளுடன் ஃபாஜில் (மேல் வகுப்பு) பாடங்களையும் பயிற்றுவித்தல்.
- குர்ஆன் மனனம் (ஹிஃப்ளு) மற்றும் காரீ பட்டம் வழங்குதல்.
- 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பொதுக்கல்வி வகுப்புகள்.
- ஒழுக்கம் மற்றும் தர்பிய்யத்தில் அதிக கவனம் செலுத்துதல்.
- நேரடிக் கண்காணிப்பில் உணவு ஏற்பாடு மற்றும் மருத்துவ வசதி.
- நல்ல காற்றோட்டத்துடன் கூடிய சுகாதாரமான விடுதி வசதி,

**தங்களது பிள்ளைகளைச் சேர்த்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரி

**ஈத்கா கார்டன், புதுக்கோட்டை-622 001.**

**Ph : 04322-220270, 225700**

**Cell: 98650 07110, 95006 43943, 97907 08839**

சொர்க்கத்தின் கனிகளை உண்ணச் செய்வான்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ சயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள்
(நூல் : திர்மிதீ - 2373)

## நீங்காமல் நிலைத்திருக்கும்

**ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறினார்கள் : "ஏழைகளுக்கு உணவு கொடுங்கள். உங்கள் வருமானம் பெருகி விடும்."**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ மதர் (ரஹ்) அவர்கள்
(நூல் : பைஹகீ, ஹயாத்துஸ் ஸஹாபா பாகம் - 2 பக்கம் - 752)

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் ஒரு தம்பதியினர் நீண்ட நெடுங்காலமாக வறுமையுடன் வாழ்ந்து வந்தனர். வறுமையின் துயரத்தை தாங்க முடியாத நிலை ஏற்பட்டபோது, தங்களுடைய வறுமை நிலையை மூஸா (அலை) அவர்களிடம் எடுத்துரைத்து நபியவர்களை தங்களுக்காக பிரார்த்திக்கும்படி வேண்டிக் கொண்டனர். மூஸா (அலை) அவர்களும் அந்தத் தம்பதியினர் நலன் கருதி பிரார்த்தித்தார்கள்.

அப்போது இறைவன், "அவர்களின் வறுமை அகல இன்னும் ஓர் ஆண்டு ஆகும். அதன்பின் அவர்களுக்கு செல்வத்தை கொடுப்பேன். அந்த செல்வநிலை அவர்களிடம் ஒரு வருடம்தான் இருக்கும்" என்று கூறினான்.

இறைவன் கூறியபடி, ஓராண்டு காலம் கடந்த பிறகு அவர்களிடம் செல்வம் கொழித்தது. ஓராண்டை கடந்து பல ஆண்டுகளாக செல்வம் நிலைத்து நின்றது. இதைப் பார்த்த மூஸா (அலை) அவர்கள், "இறைவா! வறுமையில் வாடிய அந்தத் தம்பதியருக்கு ஓர் ஆண்டுதான் செல்வம் நிலைத்திருக்கும். அதன்பிறகு நீங்கிவிடும்என்று சொன்னாயே. ஆனால் பல ஆண்டுகள் கடந்த பிறகும் அவர்கள் செல்வ நிலை நீங்காமல் நிலைத்திருக்கிறதே. அவர்கள் அப்படி என்ன நற்காரியம் செய்தார்கள்? எதனால் உன்னுடைய நாட்டம் மாறியது?" என வினவினார்கள்.

இறைவன், "நான் கொடுத்த ஓராண்டு செல்வத்தில் மாளிகை ஒன்றை கட்டி, அதற்கு ஏழு வாசல்களை அமைத்தார்கள். அந்த ஏழு வாசல்களிலும் தினந்தோறும் ஏழை எளியோருக்கு உணவு வழங்கினார்கள். இதன் மூலம் பலரின் கஷ்டங்களை நீக்கினார்கள். இதன் பிறகு, அவர்களுக்கு கொடுத்ததை நிறுத்துவதற்கு எனக்கு மனமில்லை. அந்தக் காரியத்தைச் செய்வதற்கு நான் வெட்கப்படுகிறேன்.

எனவே, செல்வத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருக்கிறேன்" என்று கூறினான்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள், ஹள்ரத் சுஹைப் ரூமி (ரளி) அவர்களிடம், சாப்பாட்டுவிஷயத்தில்அளவுக்கு மீறி செலவழிப்பதாக குறைபட்டுக்கொண்டார்கள். அதற்கு ஹள்ரத்சுஹைப்(ரளி) அவர்கள், "பசித்தவருக்கு உணவளிப்பவரே உங்களில் மிகச் சிறந்தவர்" என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றுள்ளேன். எனவே, பிறருக்கு உணவளிக்கும் விஷயத்தில் தாராளமாக செலவழிப்பது எனக்கு சந்தோஷம்தான் (நான் அதை விரயமாக எண்ணவில்லை) என்று பதிலளித்தார்கள்.

(நூல் : முஸ்னது அஹ்மத், ஹாகிம், இப்னு ஹிப்பான், தப்ரானீ, உசுதுல் ஙாபா)

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "ஒரு முஸ்லிம் சகோதரனின் உள்ளத்தில் மகிழ்ச்சியை நிரப்புவது அல்லது அவரின் [தேவையை நிறைவேற்றி] சிரமத்தைப் போக்குவது அல்லது அவரது பசியைப் போக்குவது அல்லது அவருடைய கடனை அடைப்பது தான் அல்லாஹ்விடம் மிகச் சிறந்த நற்செயலாகும்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் (நூல் : பைஹகீ, இப்னு அபித்துன்யா, இப்னு அதீ, தாரிக் திமிஷ்க் இமாம் இப்னு அசாகிர்)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து தன்னுடைய உள்ளம் மென்மையாக இல்லையென முறையிட்டார். அண்ணலார், "(உங்கள் உள்ளத்தை மென்மையாக்கிக் கொள்ள விரும்பினால்) எளியோருக்கு உணவளியுங்கள். அனாதை குழந்தைகளின் தலையை வருடிக் கொடுங்கள்" என்று ஆலோசனை கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்னது அஹ்மத், பைஹகீ, மஜ்மஉஸ் ஸவாயித், ஃபத்ஹுல் பாரீ)

## நன்மையின் தட்டு கனமானது

"அவர்கள் எதிர்பார்க்காத வகையில் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அளிப்பான். எவர்கள் அல்லாஹ்வை முற்றிலும் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு அவனே [முற்றிலும்] போதுமானவன்"

- அல்குர்ஆன் (65 : 3)

(இஸ்லாமியப் பெருங்குடி மக்களின் இரண்டாம் தலை முறை) எனும் தாபிஈன்களின் காலம் அஹ்மத் பின் மிஸ்கீன் (ரஹ்) அவர்களின் மாணவர் அபூ நஸ்ரு அஸ்ஸியாத் (ரஹ்) தனது மனைவி மக்களுக்கு போதிய உணவு வழங்க முடியாத அளவுக்கு வறுமையில் வாடினார். தனது ஆசிரியரின் வழிகாட்டுதல் படி மீன் பிடிக்க சென்று பிடிப் பட்ட மீன்களை விற்று, தனது மனைவி மக்களுக்காக இரண்டு உணவுப் பைகளை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். இடையில் ஒரு பெண் பச்சிளங் குழந்தையை தூக்கிக் கொண்டு அழுதபடி இவரிடம் வந்து, பசியால் பல நாட்கள் அவஸ்தைப்பட்டு வருகிறோம். எங்களுக்கு உண்ண ஏதேனும் தாருங்கள் என்று கேட்டாள்.

இந்த அபலைப் பெண்ணின் நிலையில்தான் தனது மனைவி மக்களும் இருக்கிறார்கள். இருப்பதோ இரண்டு உணவுப் பைகள். என்ன செய்வது? என்று யோசித்துவிட்டு, அந்த உணவுப் பைகளை அப்பெண் ணிடமே கொடுத்து விட்டு வெறுங்கையோடு வீட்டிற்கு வந்தார்.

அவர் வீட்டிற்கு வந்த கொஞ்ச நேரத்திற்குள் ஒருவர் வந்து, "உங்கள் தந்தை இருபது ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு கடன் கொடுத்து உதவினார். அவரும் இறந்து விட்டார். அதைத் திருப்பி தர இயலாமல் போனேன். (இப்போது அதைக் கொண்டு வந்துள்ளேன். இதோ!) உங்கள் தந்தைக்கு கொடுக்க வேண்டிய முப்பதா யிரம் வெள்ளிக்காசுகளைப் பெற்றுக் கொள்வீராக" என்று கூறி கொடுத்துவிட்டு சென்றார். பிறகு இவரின் நிலை செல்வச் செழிப்பாக மாறிப் போனது.

பிறகு இவர் ஒரு நாள் இரவு கனவில் மறுமை நாளை கண்டார். அதில் இவருடைய நன்மை தீமைகள் நிறுக்கப்பட் டன. உணவுகிடைத்துவிட்டது என்றெண்ணி சந்தோஷப் பட்ட அந்தக் குழந்தையின் சந்தோஷத்தை நன்மை தட்டில் வைத்தபோது நன்மை தட்டு கனமாகிப்போனது.

**"எவர்களுடைய நன்மை யின் எடை கனக்கிறதோ அவர்கள்தான் வெற்றி அடைவார்கள்"**

- அல்குர்ஆன் (23 : 102)

## ஆர்வமூட்ட வேண்டும்

**"[பின்னர் நாம்] "அவனைப் பிடியுங்கள். அவனுக்கு விலங் கிடுங்கள்; அவனை நரகத்தில் தள்ளுங்கள் என்றும், எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" என்றும் [கூறுவோம்], நிச்சயமாக அவன் மகத்தான அல்லாஹ்வையே நம்பிக்கைக் கொள்ளவில்லை.**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

IATA

**லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி**

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |
| மே | 02-05-2024 | வியாழன் | 16-05-2024 | வியாழன் | 15 நாள் |
| மே | 12-05-2024 | ஞாயிறு | 26-05-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜூலை | 24-07-2024 | புதன் | 07-08-2024 | புதன் | 15 நாள் |
| ஜூலை | 24-07-2024 | புதன் | 22-08-2024 | வியாழன் | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

விபரங்களுக்கு: உரிமையாளர்.

**அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைப** செல்: 9994254304

ஏழைகளுக்கு [உணவளிக்காத துடன், பிறரையும்] உணவளிக்கும்படி அவன் தூண்டவில்லை".

- அல்குர்ஆன் (69:30, 31, 32, 33, 34)

இந்த வசனங்கள் ஓர் அடியான் வாழுங்காலத்தில்,

1. இறைநம்பிக்கை கொள்ள வில்லை.
2. ஏழைகளுக்கு உணவளிக்க வில்லை. பிறரையும் உண வளிக்கத் தூண்டவில்லை.

ஆகிய இரண்டு நற்காரியங் களை செய்யாததால் மறுமை நாளில் நரகத்தில் சிக்கிக் கொள்கின்ற பரிதாபத்திற் குரிய காட்சிகளை இது விவரிக்கிறது.

ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் இந்த வசனங்களை தமது குடும்பத்தினருக்கு ஓதிக் காட்டி "நாம் இறை நம்பிக்கை கொண்டு விட்டதால் பாதி சங்கிலியிலிருந்து விடுபட்டு விட்டோம். மீதியிருக்கின்ற பாதியிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்றால், பிறருக்கு உணவளித்துக் கொண்டே இருக்க வேண்டும். பிறரையும் உணவளிக்க தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்.

இறைநேசச் செல்வர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் கூறி னார்கள் : "மக்களே! பசித்த வனுக்கு ஒரு கவளம் உண வளிப்பது ஆயிரம் பள்ளிவாசல் கள் எழுப்புவதை விடவும், கஅபாவின் மீது போர்வைகளை யும், அலங்காரச் சீலைகளையும் அணிவிப்பதை விடவும், இரவு முழுதும் அல்லாஹ்வுக்காக குனிந்து வணக்கத்தில் ஈடுபடுவதை விடவும், இறை மறுப்பை எதிர்த்து கூரிய வாளோடு அறப்போர் புரிவதை விடவும், கடும் வெயிலில் பகலெல்லாம் நோன்பு நோற்பதை விடவும் பன் மடங்கு மேலான காரியமாகும். பசித்தவன் வயிற்றில் ஒரு கவள உணவு விழுந்ததும், சூரியனின் ஒளி போன்ற பிரகாசம் அதற்குண்டாகிறது. பசித்தோனுக்கு உணவளிப்போனே! உமக்கு சுபசோபனம் உண்டாகட்டும்!

அகிலம் முழுவதும் உள்ள எல்லா புதையல்களும் எனக்கு கொடுக்கப்பட்டாலும் அவை அனைத்தையும் பசித்தோனுக்கு உணவளிப்பதிலேயே செலவழிப்பேன். அனைத்து நற்செயல்களையும் ஆராய்ந்து பார்த்தேன். பசித்தவனுக்கு உணவளிப்பதைவிட சிறந்த

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

நற்செயலாக எதையும் காணவில்லை".

(நூல் : கலாயிதுல் ஜவாஹிர், தாரீக் இப்னு நஜ்ஜார், தத்கிரதுல் அவ்லியா)

## பிறரின் பிரார்த்தனை கிடைக்கும்

ஹள்ரத் சஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் அதிகமாக ஏழைகளுக்கு உணவளிப்பவர். ஒரு முறை அவருடைய உணவுக் கொடையைக்கண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "இறைவா! உன் ரஹ்மத்தையும், அருளையும் சஅத் பின் உபாதா உடைய சந்ததிகளுக்கு வழங்குவாயாக" என்று பிரார்த்தனை செய்துள்ளார்கள்.

திண்ணைத் தோழர்களுக்கு யாராவது உணவு கொடுக்கிறீர்களா? அல்லது மக்காவாசிகளுக்கு யாராவது உணவு கொடுக்கிறீர்களா? என்று அறிவிப்புச் செய்தால், மற்றவர்கள் ஓரிரு ஆட்களைத்தான் அழைத்துச் செல்வார்கள். ஆனால் ஹள்ரத் சஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் ஒரே நேரத்தில் 80 பேரை அழைத்துச் செல்வார்கள் என்கிறது அவர்களது வரலாறு.

(நூல் : அல்இசாபா)

எனவே, நாம் பசித்தோருக்கு பசியாற்றி, படைத்தவனின் பரிவைப் பெறுவோமாக!


## மணமகள் தேவை!

தமிழ் இராவுத்தர், வயது 42, **M.A.**, படித்த, நல்ல சிவப்பு நிறம், முதல் மணம், சொந்த தொழில் (சூப்பர் மார்க்கெட்) செய்யும், சாலிஹான **மணமகனுக்கு**, சாலிஹான, +2 அல்லது டிகிரி படித்த, வயது 30 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் முதல் அல்லது இரண்டாம் தாரம் சம்மதமே! இராவுத்தர் அல்லது உருது **மணமகள் தேவை!** இரண்டாம் தாரமாக இருந்தால் குழந்தை இல்லாத பெண் தேவை.

தொடர்புக்கு :

**9080729162; 9443724438**

# வழி தவற கூடாது....

– பா. ஹாஜி முஹம்மது

பழங்காலத்தில் ஜப்பான் நாட்டில் விசித்திரமான மனிதாபி மானமற்ற ஒரு வழக்கம் இருந்து வந்தது. பெற்றோர்கள் வயதாகி, முதுமையின் காரணமாக வலிமை குறைந்து, மற்றவர்களுக்கு எவ்விதப் பயனுமளிக்க இயலாத நிலைக்கு வந்துவிட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் உயரமான மலை உச்சியில் படுக்க வைத்து விட்டு வந்து விடுவார்கள்.

எதுவும் செய்ய முடியாத நிலையிலுள்ள அம்முதியோர்கள் பசியாலும், தாகத்தாலும் தனிமையில் வாடி மழை, வெயில் சொல்லொண்ணா நிலையிலிருந்து இறுதியில் மரணமடைந்து விடுவார்கள்.

இப்படியான சூழ்நிலையில் ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயை சுமந்து கொண்டு மரங்கள் செடிகள் சூழ்ந்த காட்டுப் பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். எதற்காகத் தாயை தூக்கிச் செல்கிறோம் என்று மகனுக்கும், எதற்காக தன்னை தூக்கிச் செல்கிறான் என்று தாய்க்கும் தெரியும். ஆனால் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

பயணத்தின்போது தன் தோளிலிருந்த தாயார், ஏதோ ஒரு வித நறுமணம் வீசும் மரங்களின் சிறிய சிறிய கிளைகளை கையில் வைத்துக் கொண்டு அதனை உடைத்து கீழே வழி நெடுகிலும் போட்டுக் கொண்டு வருவதை மகன் பார்த்துக் கொண்டே வந்தான். அதனைப் பற்றி தாயிடம் வினவியதற்கு மகனே! நீ என்னை மலைமேல் விட்டு விட்டு வீடு திரும்பும் சமயம் வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா? இம்மாதிரி நான் போட்டு வருகின்ற செடிகளின் வாசனையைக் கொண்டு நீ வழி தவறாமல் பாதுகாப்பாக வீடு போய் சேரலாம். அதற்கு அடையாளமாகத்தான் இம்மாதிரி செய்தேன்" என்றார் அந்த அன்புத்தாய்.

வயதாகி விட்ட தன்னை தவிக்கவிட்டு சென்றாலும் தன் மகன் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் தாயா பயனற்றவர்? என்று அவனது உள் மனம் கேட்க, அவன் தன் தாயை மீண்டும் தன் வீட்டிற்கு அழைத்து வந்து பாசத்துடன் பராமரிக்கலானான்.

அதன்பின் இந்த கொடூர பழக்கம் நாட்டில் இல்லாமலே போக அரசு ஆவன செய்ததாம்.

இந்நிலையில், நம் மார்க்கம் பெற்றோர்களைப் பற்றி கூறியிருப்பதை நினைவு கூர வேண்டும்.

## யுனெஸ்கோ பட்டியலில் இஃப்தார்!

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், கலாச்சார பாது காப்பு நிறுவனமான யுனெஸ்கோ அமைப்பு ரமளான் மாத நோன்பு திறக்கும் இஃப்தார் நிகழ்வை பாரம்பரியப் பட்டியலில் சேர்த்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் ரமளான் நோன்பு காலத்தில் ஏழை, பணக்காரன் வித்தியாசமின்றி அனைவரும் கலந்து மனித குல ஒற்றுமையைப் பறை சாற்றும் இஃப்தார் நிகழ்ச்சியை பாரம்பரியப் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று துருக்கி, ஈரான், ஆஜர்பைஜான், உஸ்பெகிஸ்தான் நாடுகள் சார்பில் யுனெஸ்கோ அமைப்புக்கு வைத்த வேண்டுகோளை ஏற்று "அரிதான கலாச்சார பாரம்பரிய உணவு" பட்டியலில் இஃப்தார் நிகழ்ச்சி இடம் பெறுவதாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த சூழலுக்கு ஏற்ப ஜூஸ் பழ வகை பரிமாறும் இஃப்தார் நிகழ்ச்சியில் பேரீச்சம் பழம் முக்கிய இடம் வகிக்கிறது என்று கூறியுள்ள யுனெஸ்கோ அனைத்து சமூகத்தவரும் இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதால் மனிதநேயம் வளர்க்கும் நிகழ்ச்சியாகவும் இஃப்தார் விளங்குகிறது என்று பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதலிடம் பெற்ற பஹ்ரைன் மாணவர்!

துபாயில் கடந்த 27 ஆவது சர்வதேச திருகுர்ஆன் மனப் பாடப் போட்டியில் முதலிடம் பெற்ற பஹ்ரைன் மாணவர் முஹம்மது அல் அம்ரிக்கு துபாய் விளையாட்டு கவுன்சிலின் தலைவர் ஷேக் மன்சூர் பின் முஹம்மது பின் ராஷித் அல் மக்தூம் பரிசு வழங்கி கௌரவித்தார்.

மேலும் சிறந்த இஸ்லாமிய அறிஞருக்கான விருது ஷேக்கா ஹிந்த் பிந்த் மக்தூமிற்கு வழங்கப்பட்டது.

துபாய் அல் மம்சார் கலாச் சாரம் மற்றும் அறிவியல் சங்கத் தின் சார்பில் 27 ஆவது சர்வதேச திருகுர்ஆன் மனப்பாடப் போட்டி நடந்தது. இந்த போட்டியில் ஐக்கிய அரபு அமீரகம், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பஹ்ரைன் உள்ளிட்ட 70 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். திருகுர்ஆனின் முக்கியத்துவத்தை வெளிப் படுத்தும் வகையில் இந்த போட்டி அமைந்திருந்தது. இந்த போட்டியில் நடுவர்களாக அமீரகம், சவூதி அரேபியா உள்

ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மார்க்க அறிஞர்கள் பங்கேற்று வெற்றி பெற்றவர்களை தேர்வு செய்தனர்.

இப்போட்டியில் முதல் பரிசை பஹ்ரைன் நாட்டைச் சேர்ந்த மாணவர் முஹம்மது அல் அம்ரிக்கு துபாய் விளை யாட்டு கவுன்சிலின் தலைவர் ஷேக் மன்சூர் பின் முஹம்மது பின் ராஷித் அல் மக்தூம் பரிசு வழங்கி கௌரவித்தார்.

இரண்டாவது பரிசு லிபியா நாட்டைச் சேர்ந்த நாஜி பின் சுலைமானுக்கும், மூன்றாவது பரிசு காம்பியா நாட்டைச்சேர்ந்த ஷேக் கிஜான் அரபிக்கும் வழங்கப்பட்டது.

மேலும், நான்கு முதல் பத்து இடங்களை பெற்றவர் களுக்கு பரிசு வழங்கப்பட்டது. இதனால் போட்டியில் பங்கேற்றவர்கள் மிகவும் உற்சாகமடைந்தனர். அவர் களுக்கு அந்த நாடுகளைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் வாழ்த்துக் களை தெரிவித்தனர்.

சிறந்த இஸ்லாமிய அறிஞருக் கான விருது அமீரக துணை அதிபரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முஹம்மது பின் ராஷித் அல்மக்தூமின் மனைவி ஷேக்கா ஹிந்த் பிந்த் மக்தூமிக்கு இஸ்லாமிய மனிதாபிமான கழகப் பணிகளுக்காக வழங்கப் பட்டது. இந்த விருதை அவரின் சார்பில் ஷேக் சயீத் பின் முஹம்மது பின் ராஷித் அல் மக்தூம் பெற்றுக் கொண்டார். மேலும், இந்த போட்டிக்கான நடுவர்களாககலந்துகொண்டவர் களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும்

பாரதீய ஜனதாவின் ஒன்றிய அரசு அமல்படுத்திய குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உச்சநீதிமன்றத்தில் அவசரவழக் காக தாக்கல் செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒன்றிய பாரதீய ஜனதா அரசு திடீரென கடந்த மார்ச் 11 அன்று அமல் படுத்தி அரசிதழில் அறிக்கையை வெளியிட்டது. இதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சி கள் கடும் கண்டனம் தெரிவித் துள்ளன. மக்கள் மத்தியில் ஒரு வித பதற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் இதுபோன்ற பாசிஸ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகப் பல்வேறு தரப்பினரும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

# இறைஇல்லம் விசாலமடைய உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகர், 1வது தெரு, கதவு எண்.1, முகப்பேர் கப்ருஸ்தான் பின்புறம் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் & மதரஸா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதிகளிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்கு முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஸ்கூல் படிப்புடன் ஹிஃப்ழு மதரஸாவில் ஓதக் கூடியவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லை. இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் ரூபாய் 36 இலட்சத்தில் விலைக்கு வந்திருக் கிறது. நல்லுள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்யுங்கள். ஸதக்கத்துல் ஜாரியாவின் வகையில் நாம் மரணித்த பிறகும் நன்மை வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது ஆமிரி : 9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
G-pay No. : **9444273674**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289**
SWIFT Code : **KVBLINBBIND**

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வழக்கு

இந்நிலையில் நாடு முழுவதும் ஒன்றிய பாரதீய ஜனதா அரசு அமல்படுத்திய குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளது.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மதத்தினை அடிப்படையாக மட்டுமே வைத்துக் கொண்டு குடியுரிமை வழங்கப்படும் என ஒன்றிய பாரதீய ஜனதா அரசின் குடியுரிமை வழங்கப்படும் என ஒன்றிய பாரதீய ஜனதா அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒன்றிய பாரதீய ஜனதா அரசின் நடவடிக்கை காரணமாக நாட்டில் பதற்றமான அசாதாரண சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

### குஞ்ஞாலிக்குட்டி கண்டனம்

மேலும், ஒன்றிய பாரதீய ஜனதா அரசின் நடவடிக்கைகள் குறித்து கருத்து கூறியுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய பொதுச் செயலாளர் பி.கே. குஞ்ஞாலிக்குட்டி மதத்தை அடிப்படையாகவைத்து குடியுரிமை வழங்கப்படும் என்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான ஒன்று என கண்டனம் தெரிவித்துள்ளார்.

எனவே, உச்ச நீதிமன்றத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நாடியிருப்பதாகவும், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## துபாய் சர்வதேச விமான நிலைய ஓடுபாதையில் இஃப்தார் நிகழ்ச்சி!

உலகில் முதல் முறையாக துபாய் சர்வதேச விமான நிலைய ஓடுபாதையில் இஃப்தார் - நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் விமான நிலைய ஊழியர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

அமீரகத்தில் ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் இஃப்தார் எனப்படும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்துள்ளன.

பள்ளிவாசல்கள், கூடாரங்களில் நடைபெறும் இஃப்தார் நிகழ்ச்சிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று நோன்பு திறந்து வந்துள்ளனர்.

துபாயில் பல்வேறு கின்னஸ் உலகச் சாதனைகள் பல வித்தியாசமான முறையில் படைக்கப்

பட்டுள்ளன. ஒவ்வொரு கின்னஸ் சாதனை நிகழ்விலும் பல்வேறு புதுமைகளை துபாய் உலகுக்கு காட்டி வருகிறது.

விமான ஓடுபாதையில் இதன் ஒரு பகுதியாக இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியிலும் இத்தகைய புதுமை படைக்கப் பட்டுள்ளது. உலகில் முதல் முறையாக துபாய் சர்வதேச விமான நிலையத்தில் விமாணங் கள் தரையிறக்கப்படும் ஓடு பாதையில் இஃப்தார் நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் அமீரகம் உள்ளிட்ட பல்வேறு நாடு களைச் சேர்ந்த பல கலாச் சாரங்களை கொண்ட விமான நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

## குடியுரிமை திருத்தச் சட்டம் அரசியல் சாசன விழுமியங்களை அப்பட்டமாக மீறுவதாகும்

குடியுரிமை திருத்தச் சட்டம் அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்றும், மக்கள் விரோத வகுப்புவாத நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி என்றும் முதல்வர் பினராயி விஜயன் கூறினார். கேரளாவில் இச் சட்டம் அமல் படுத்தப்படாது என்ற இதே நிலைப்பாடு தொடரும் என்றும் அதற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

மக்களின் சேவையில் 18 ஆண்டுகள்!
நம்பிக்கையோடு வாருங்கள்!!
இன்ஷா அல்லாஹ் சுகம் பெறுவீர்கள்!!!

Rx

**சன் மெடிக்கல்ஸ்**

**SUN MEDICALS**

1/180-A, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்,
திருப்பூர் ரோடு, **மங்கலம் - 641663.** திருப்பூர் மாவட்டம்.

**9865261670**

என்றும் முதல்வர் பினராயி விஜயன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். அவர் பேசுகையில் கேரளத்தில் சி.ஏ.ஏ. அமல்படுத்தப்படமாட்டது என்ற அறிவிப்பில் ஒரு பகுதியாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த சட்டம் மக்களை மதத்தின் அடிப்படையில் பிரிக்கிறது. இது பிரிவினைவாத அரசியலின் மூலம் தேர்தல் ஆதாயத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையாகும்.

சிஏஏ என்பது இந்தியா என்கிற கருத்துக்கு ஒரு சவால். இது அரசியல்சாசன விழுமியங்களை அப்பட்டமாகமீறுவதாகும். புலம் பெயர்ந்தோர் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் என எவ்வாறு பிரிக்கப்படுகிறார்கள்? இச்சட்டத்தின் நோக்கம் முஸ்லிம் குடியேறிகளின் குடியுரிமையை ரத்து செய்வதாகும். சிஏஏ அமல்படுத்தப்பட மாட்டது என்ற நிலைப்பாட்டை எடுத்த முதல் மாநிலம் கேரளம். இதன் ஒரு பகுதியாக போராட்டம் நடத்தப்பட்டு சிறப்பு சட்டசபை கூட்டம் நடந்தது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் நிகழ்ச்சி நிரல் இங்கு செயல்படுத்தப்படாது என மாநில அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது என முதல்வர் கூறினார். குடியுரிமைதிருத்தச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், மக்கள் விரோத வகுப்புவாத செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகும். கேரளாவில் செயல்படுத்த படாது என்று மீண்டும் மீண்டும்அறிவிக்கப்பட்டது. அந்த நிலைப்பாட்டை அனைத்து மாவட்டங்களிலும் நிலைநிறுத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. மாநில அரசு தாக்கல் செய்த அசல் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவை யில் உள்ளது.

இந்த சட்டம் இந்திய அரசியலமைப்பின் சாசனத்திற்கு எதிரானது. மக்களை மத அடிப்படையில் பிரிக்கிறது. இது சங்பரிவாரின் தீவிர இந்துத்துவா நிகழ்ச்சி நிரலின் ஒருபகுதி. பிரித்தாளும் அரசியலின் மூலம் தேர்தல் ஆதாயம் அடையும் சங்பரிவார்களின் இந்த கேவலமான செயல் சர்வதேச அளவில் கேள்விக்குறியாகி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை உட்பட சட்டத்தின் பாரபட்சமான தன்மை குறித்து விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன. சிஏஏ என்பது ஒவ்வொரு அர்த்தத்திலும் இந்தியா என்ற கருத்துக்கு ஒரு சவால். 2014 டிசம்பர் 31அன்று அல்லது அதற்கு முன் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு குடியேறிய முஸ்லிம் அல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்குதல், முஸ்லிம்களுக்கு மட்டும் குடியுரிமை மறுப்பது இந்த சட்டத்தின் அடிப்படை.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# நிரந்தர நல்லறங்கள்

மவ்லவீ **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

## இறைவழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்

ஹள்ரத் ஃபழாலத் பின் உபைத் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது:

"நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

இறைவழியில் தொடர்புடையவராக இருந்து மரணித்தவரை தவிர மற்ற அனைத்து வகைகளிலும் மரணித்தவர்களின அமல் கள் - சேவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது.

(அதாவது மற்றவர்களுக்கு இறந்த பிறகு எந்த வகை நன்மையும் வந்து சேராது)

நிச்சயமாக மறுமை நாளில்(இறைவழியில்இறந்த)

அவருடைய சேவைகள் அவருக்கு பன்மடங்காக்கி பெருக்கித் தரப்படுவார். மேலும் அவர் கப்ர் (மண்ணறை) குழப்பங்களில் இருந்து பாதுகாக்கப்படுவார்".

நூல் : திர்மிதீ, அபூதாவூத்

ஹள்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : "நான் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து கேட்டிருக்கிறேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இரவு பகல் என இறைவழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மாதமாதம் நோன்பு நோற்று அதன் இரவுகளில் நின்று வணங்கு கிறவரை விட சிறந்தவர் ஆவார்.

(இறைவழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட) அவர் இறந்து விட்டால், அவர் என்ன வகையான அமல் - சேவைகள் செய்திருந்தாரோ அதற்கான கூலி வழங்கப் பட்டுக் கொண்டே இருக்கும். மேலும் அவருக்கு மறுமையில் சிறந்த ரிஜ்க்கு - சொர்க்க வாழ்வாதாரங்களை கூலியாக வழங்கப்படும். மேலும் மண்ணறை குழப்பங் களில் இருந்தும் பாதுகாக்கப் பட்டிருப்பார்".

(நூல் : முஸ்லிம்)

முராபிதன் ஃபி ஷபீல் என்றால் யுத்தத்தில் கலந்து

கொண்டவர்கள் என்பதே முதன்மையான பொருள்.

இவர்களிடம் மண்ணறையில் உனது இறைவன் யார்? உனது மார்க்கம் என்ன? உன்னிடம் அனுப்பப்பட்ட நபி யார்? என்பது போன்ற வழமையான கேள்விகள் கேட்கப்படாது.

இறைவழியில் உண்மையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டதாலும், அதில் உண்மையாக இருந்ததா லும், அதில் நீடித்து நிலைத்து ஈமானோடு செயல்பட்டதாலும் அவருக்கு இந்த கண்ணியம் வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு இவர்களுக்கு மட்டுமே உரியது.

**அல்லாஹ் திருகுர்ஆனில், "அவர்கள் அல்லாஹ்விடத்தில் உயிரோடு இருக்கிறார் கள்; மேலும் அவர்கள் உணவளிக்கவும் படுகிறார்கள்...." என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான்.**

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் "ஷுஹதாக்கள் சொர்க்கக் கனிகளை சாப்பிடுகிறார்கள்".

"ஃபைலுல் கதீர்" எனும் நூலில் அல் முனாவீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "இவர்களிடம் முன்கர் மற்றும் நகீர் ஆகிய இரண்டு மலக்குமார்கள் வரவே மாட்டார்கள். இவர்கள் சம்பந்தமான எந்த தகவல்களையும் இறைவனிடத்தில் எடுத்துச் சொல்லவும் மாட்டார்கள். இவர்கள் இறைவழியில் நீடித்து நிலைத்திருந்து மரணித்து விட்டார்கள் என்பதே சாட்சியாகக் கருதப்படும்".

இமாம் ஸர்கஸீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "இவர்கள் வாழும் காலத்தில் முஸ்லிம்கள், இவர்களின் காரணமாக பாதுகாப்பாக இருந்தார்கள். அதனால் இவர்கள் தன் மண்ணறை யில் பாதுகாப்பாக இருக்கிறார்கள்".

மேலும் முராபித்தன் ஃபீ ஷபீல்எனும் சொல்லுக்கு இறைவழியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இறைநேசர்கள், ஸூஃபியாக்கள், ஆலிம்கள் போன்றவர்களையும் இந்த சொல் குறிப்பிடுவதாக முஸ்லிம் நூலின் விரிவுரையான ஃபைலுல் கதீரில் குறிப்பிடப்படுகிறது.

## 10. ஸதகத்துல் ஜாரியா – நிரந்தரமாக நன்மையைத் தரும் தர்மம்

நிரந்தரமாக நன்மையைத் தரக்கூடிய சிறிய முதலீடுகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வது என்றும் பொருள் சொல்லலாம்.

அதாவது முழுமையான ஒரு பள்ளிவாசல் கட்டுவது, மதரஸா கட்டுவது போன்று இல்லாமல், ஒரு பள்ளிவாசலில் ஒரு தொழுகையாளி

தொழுவதற்கு என்ன செல வாகுமோ அந்த தொழும் இடத்திற்கான தொகையினை மட்டும் செலுத்துவது, ஒரு மதரஸாவில் ஒரு அறையை மட்டும் கட்டிக் கொடுக்க பொறுப்பேற்றுக் கொள்வது என்று சொல்லலாம்.

எனவே இவ்வாறான சிறிய அளவிலான இறை வழியில் முதலீடு செய்த பிறகு அதை அல்லாஹ்விற் காக வக்ஃபு - பொதுமக்களின் பயன் பாட்டிற்கென அல்லாஹ் விடம் ஒப்படைத்திட வேண்டும்.

இதுபோல் நாம் செய் திருக்கிற சிறு பணிகளுக்கான நன்மையும் நாம் மரணித்த பிறகு நம்மை வந்தடையும்.

ஷைஹு உசைமைன் (ரஹ்) அவர்கள் கூறுகிறார் கள்: "மனிதன் வாழ்கிற காலத்தில் செய்த ஸாலிஹ் - நற்செயல் களுக்கான நன்மை அவன் மரணித்த பிறகும் அவனுக்கு வந்து கொண்டே இருக்கும்.

உதாரணமாக பிரிந்து போக இருந்த கணவன் மனைவிக்கு நல்ல அறி வுரையைச் சொல்லி சேர்ந்து வாழ செய்த செயல்.

என்ன படிப்பது என்று தெரி யாமல் தடுமாறிக் கொண்டிருந்த மாணவனுக்கு சரியான படிப்பிற் கான வழியை காட்டியச் செயல்".

பொதுவாகவே மனிதன் எதை தர்மமாக கொடுத்திருக் கிறானோ அது மட்டுமே. அவன் மரணத்திற்கு பிறகு பயனளிக்கும். மற்ற எதுவும் அவனுக்கு பயனளிக்காது.

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறுவதாவது: (ஒரு நாள்) நபி (ஸல்) அவர்கள் (தம் வீட்டில்) ஒரு ஆட்டை அறுத்து (தர்மம்) செய்திருந்தார்கள்.

(வெளியில் சென்றிருந்த நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்ததும் அன்னை ஆயிஷா (ரளி) அவர்களிடம் (இன்று அறுத்த ஆட்டில்) என்ன மிச்சம் இருக்கிறது? என்று கேட்டார்கள்.

அதற்கு அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள், "ஒரு தொடை யைத் தவிர வேறு எதுவும் மிச்சம் இல்லை" என்று கூறினார்கள்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள், "(நாம் தர்மமாக கொடுத்த) அனைத்தும் நம் மிடமே (மிச்சமாக) இருக்கிறது. ஆனால் நம்மிடம் உள்ள அந்த தொடையைத் தவிர" என்று கூறினார்கள். (நூல்: திர்மிதீ)

அதாவது தான் அறுத்த ஆட்டில் தான் சாப்பிட்டதில் தனக்கு எந்த பயனும் இல்லை. அதே சமயம் நாம் பிறருக்கு அளித்த தர்மம் மறுமை நாளில் முழுமையாக பயனளிக்கும்.

யஸீத் பின் அபீ ஹபீப் (ரஹ்) அவர்கள் அறிவிப்ப தாவது: "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மறுமை நாளில் மக்களிடையே இறுதித் தீர்ப்பு

வழங்கப்படுவதற்கு முன், அடியார்களின் தலைக்கு மேல் மிக நெருக்கமாக சூரியன் சுட்டெரிக்கும் சமயத்தில், தர்மம் செய்தவர்கள் (மட்டும்) நிழலில் இருப்பார்கள்".

நூல் : முஸ்னது அஹ்மத்

எனவே நம்மிடம் உள்ள செல்வத்தை நாம் பயன் மிக்க வழியில் முதலீடு செய்ய பழகிக் கொள்ள வேண்டும். அதுவே நம் மரணத்திற்கு பிறகு அளவிட முடியாத, நினைத்துப் பார்க்க முடியாத அளவில் பயன் தரும்.

தன் உடல் உலகை விட்டு மறைந்து விட்டாலும் - அழிந்துவிட்டாலும் தான் அழியாமல் உலகில் நிலைத் திருக்க நிரந்தர நற்செயல் களை உருவாக்கி விட்டுச் செல்ல வேண்டும், அதுவே சரி யாகவும் முறையாகவும் வாழ்ந்த வாழ்வின் அடையாளமாகும்.

## இறந்தவர்களுக்காக உயிரோடு இருப்பவர்கள் ஸதகத்துல் ஜாரியாவை செய்யலாமா?

ஹஸ்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: "ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களி டம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! என் தாய் திடீரென இறந்து விட்டார்; அவர் பேசியிருந்தால் தர்மம் செய்யச் சொல்லியிருப்பார் என நான் எண்ணுகிறேன்; எனவே அவர் சார்பாக நான் தர்மம் செய்தால் அதன் நன்மை அவருக்குக் கிடைக்குமா?" என்றுகேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஆம்! கிடைக்கும் என்று கூறினார்கள்.

(நூல் : புகாரி 1388, 2760)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிப்ப தாவது: "ஸஅது பின் உபாதா (ரளி) அவர்கள் வெளியூர் சென்றிருந்த போது அவரது தாயார் இறந்து விட்டார். அவர் நபி (ஸல்) அவர் களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! நான் வெளியூர் சென்றி ருந்தபோது என் தாய் இறந்து விட்டார். அவருக்காக நான் ஏதேனும் தர்மம் செய்தால் அவருக்கு ஏதும் பயன் இருக்குமா?' என்று கேட்டார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஆம்! பயன் உண்டு" என்றார்கள்.

அப்படி என்றால் எனது மிக்ராஃப் எனும் தோட்டத்தை அவர் சார்பில் நான் தர்மம் செய்கிறேன் என்பதற்கு உங் களையே சாட்சியாக்கு கிறேன்" என அவர் கூறினார்.

(நூல்:புகாரி2756,2762,2770)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்ப தாவது: "என் தந்தை வஸிய்யத் ஏதும் செய்யாமல் சொத்தை விட்டுச் சென்று விட்டார். அவர் சார்பில் நான் தர்மம் செய்தால் அது வஸிய்யத்

துக்குப் பகரமாக அமையுமா? என்று ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஆம்! அமையும்" என்று கூறினார்கள்".

(நூல் : முஸ்லிம் 3081)

ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரளி) அவர்கள், "அல்லாஹ் வின் தூதரே! என் தாய் இறந்து விட்டார்; அவர் சார்பில் நான் தர்மம் செய்யட்டுமா?" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஆம்! தாராளமாக செய்யுங் கள்" என்று கூறினார்கள். "எது சிறந்த தர்மம்?" என்று கேட்டேன். அதற்கு, "தண்ணீர் வழங்குதல்" என்று கூறினார்கள்.

(நூல் : நஸாயீ 3604, 3606)

மேற்கண்ட ஹதீஸ்கள் நமக்கு இரண்டு கருத்துக்களை தெளிவுபடுத்துகின்றன.

ஒன்று : இறந்து போன பெற்றோருக்காக அல்லது தம் குடும்பத்தில் காலம் சென்ற பெரியவர்கள், முன்னோர்கள், மூதாதையர்கள் என எவருக் காகவேண்டி, தற்போது வாழ்கிற வர்கள் நன்மையை நாடி செய்தாலும் அதை இறைவன் தனது வலது கரத்தில் வாங்கி பன்மடங் காக்கி தருவான்.

இரண்டு : பள்ளிவாசல் கட்டுதல், தண்ணீர்ப் பந்தல் மற்றும் நிழற்குடை அமைத்தல், கிணறு, குளம் வெட்டுதல், பள்ளி, கல்லூரிகள் கட்டுதல் போன்ற நிலையான தர்மங் களை இறந்தவர்களின் நன்மைக்காகச் செய்தால் அந்த நன்மை அவர்களைச் சேரும் என்பதற்கு இந்த ஹதீஸ்கள் ஆதாரமாக அமைந்துள்ளதுன.

## ஆண், பெண் பிள்ளைகளில் வேற்றுமை இல்லை

"பெற்றோருக்காக பிரார்த்தனைச் செய்யும் நல்ல பிள்ளைகள்" என்று நபி ஸல் அவர்கள் சொல்லி இருக் கிறார்கள்.

ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எனவே பிரார்த்தனை செய்யும் படியான எந்த வகை பிள்ளை களை விட்டுச் சென்றிருந் தாலும் அந்த பெற்றோருக்கு பிரயோஜனம் தான்.

ஆனாலும் நம் சமூகத் தில் பெண் பிள்ளைகள் பிறப்பதை சிலர் வெறுக்கிறார் கள். ஏனென்றால் அவர் களை கற்பொழுக்கத்தோடு வளர்த்து, காதல் போன்ற விவகாரங்களில் சிக்காமல் பாதுகாத்து, பெரிய அளவில் பொருளாதாரம் செலவழித்து திருமணம் செய்து வைப்பது, திருமணத்திற்கு பின்னரும் அவர்களை கவனித்துக் கொள் வது போன்ற காரணங்களால் பெண் பிள்ளைகள் பிறப்பதை

விரும்பாத பெற்றோரை இன்று நாம் பார்க்கிறோம்.

தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கடமைகளை அல்லாஹ் செய்யும்படி நம்மிடம் சொல்லி இருக்கிறான். அல்லாஹ் சொன்னான் என்பதற்காக அதை நாம் முறையாகசெய்துவருகிறோம்.

அதே இறைவன் தான் "எவ்வித அறிவும் இல்லாமல் அறியாமையினால் தம் பிள்ளைகளை கொல்பவர்கள் பேரிழப்பை அடைவார்கள்; அல்லாஹ்வின் மீது பழி சுமத்தி, அல்லாஹ் அந்த பிள்ளைகளுக்கு அளிக்க விருக்கும் வாழ்வாதாரங்களை இவர்கள் தடுக்கிறார்கள்; அவர்கள் வழி தவறி விட்டார்கள்; அவர்கள் நேர்வழி பெறுபவர்களுமல்லர் என்று சொல்கிறான்".

அதாவது "வறுமையை அஞ்சி பெண் குழந்தை களை கொலை செய்து விடாதீர்கள். அவர்களுக்கு நாமே வாழ்வாதாரங்களை விசாலமாக தருகிறோம்" என்று சொல்லுகிறான்.

தொழுங்கள், நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் சொன்ன போது செய்கிற நாம், பெண் பிள்ளைகளையும் நாம் வளர்த்து ஆளாக்கினால், அவர்களுக்கு தேவையானவற்றை அல்லாஹ் தருவான் என்கிற நம்பிக்கை நமக்கு வர வேண்டும். வேற்றுமை பாராமல் பெண் குழந்தைகளையும் நன்கு வளர்த்து ஆளாக்க வேண்டும்.

எந்த குழந்தையாக இருந்தாலும் அவர்களை நாம் அன்புடனும், ஒழுக்கத் துடனும் வளர்த்துவிட்டால் நாம் மரணித்த பிறகு நமக்காக அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருப்பார்கள்.

**ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். கண்ணியமும், மகத்துவமும் நிறைந்த அல்லாஹ் சொர்க்கத்தில் ஒரு மனிதனின் அந்தஸ்தை உயர்த்துவான். இறைவா! இது எனக்கு எப்படி கிடைத் தது? என்று அவன் கேட்பான். அதற்கு அல்லாஹ், உனக் காக உன் பிள்ளைகள் பாவ மன்னிப்பு கேட்டதால் இந்த உயரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது என அல்லாஹ் பதிலளிப்பான்".**

(நூல் : முஸ்னது அஹ்மத்)

நமது பிள்ளைகள் இறைவன் நம்மிடம் அமானிதமாக கொடுத்த பொக்கிஷம். அவர்களை இறைவன் விரும்புவது போல் வளர்த்து, ஆளாக்கி விட்டால் இம்மை மறுமை ஆகிய இரு வாழ்வும் நமக்கு சிறப்பாகவே அமைந்து விடும். நாம் எந்த கவலையும் கொள்ள வேண்டாம்.

எனவே பிள்ளைகளிடத்தில் ஆண், பெண் என

வேற்றுமை காட்டாமல், உங்களுக்காக பிரார்த்திக்கும் நல்ல பிள்ளைகளை உரு வாக்கிட முயற்சி செய்யுங்கள்.

மேற்கண்ட பத்து விஷயங் களை தம் பெற்றோருக்காக செய்வதில் ஆண், பெண் பிள்ளைகள் என வேற்றுமை இல்லை. இரு தரப்பினரும் தம் பெற்றோருக்காகவும் மூதாதையர் களுக்காகவும் நிரந்தர நல்லறங்களை செய்யலாம்.

## இந்தியாவில் ஸதகத்துல் ஜாரியா நிலங்கள்

இந்தியாவை முஸ்லிம் கள் 1200 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆட்சி செய்யத் தொடங்கி விட்டார்கள். அன்று முதல் இந்தியா சுதந்திரம் அடை யும் வரை இடைப்பட்ட காலத் தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளை முஸ்லிம் மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். அதைப் போல் முஸ்லிமல்லாத மன்னவர் களும் ஆட்சி செய்தார்கள்.

அந்தந்தக் காலகட்டங் களில் வாழ்ந்த முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத பொதுமக்கள், தம் மரணத் திற்குப் பிறகு நிரந்தர நன்மை பெற வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில், தமக்குச் சொந்த மான நிலங்கள், ஆட்டு மந்தை கள், பசு மாடு கள் என அவரவர் சார்ந்த ஆலயங்களுக்கு தான மாக வழங்கியிருந்தார்கள்.

பல செல்வந்தர்கள் பல கிராமங்களுக்கு ஜமீன்தாரர் களாக - சொந்தக்காரர்களாக இருந்தார்கள். இப்படிப்பட்ட வர்கள் தமக்குச் சொந்தமான பல வருவாய் கிராமங்களை தான் வணங்கும் ஆலயங்களுக்கு இனாமாக வழங்கினார்கள்.

அவ்வாறு தமிழ்நாட்டிற் குள் மட்டும் 1952களுக்கு முன் சுமார் 20,000 கிராமங்கள் இனாம் கிராமங்களாக இருந்துள்ளன.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 1952இல் பி.சி.குமார சாமி ராஜா தமிழ்நாடு முதல் அமைச்சராக இருந்தபோது இனாம் ஒழிப்பு சட்டம் எனும் புதியதொரு சட்டத்தை வகுத்து அதன் மூலம் தமிழகத்தில் இருந்த 20,000 இனாம் கிராமங் களையும் விடுவித்து தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான வருவாய் கிராமங்களாக மாற்றினார்.

அந்த வகையில் முஸ்லிம் கள் வசம் சில பெயர்களில் பல கிராமங்கள் இருந்தன. அந்த கிராமங்கள் கீழ்காணும் பெயர் களால் அன்று வழக்கு மொழி யில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாகிர், அல்தாங்க் இனாம், தேஷ்முக், தேஷ்பாண்டே இனாம். இந்தப் பெயர்ச் சொல்லின் விளக்கத்தை சுருக்கமாகக் காண்போம்.

## ஜாகிர்

இது முஸ்லிம்படைத்தளபதி களுக்கு, வீரதீர செயல் புரிந்தவர் களுக்கு கொடுக்கப்பட்ட இனாம். ஜாகிர் இனாம்கள் தமிழகத் தில் பரவலாக இருந்தன.

## அல்தாங்க் இனாம்

இதை சிவப்பு முத்திரை இனாம் என்றும் சொல்வார்கள். இது முஸ்லிம் மசூதிகளும், அவற்றில் பணியாற்றும் ஊழியர் களும் அனுபவித்துக் கொள்ள கொடுக்கப்பட்ட இனாம்.

## தேஷ்முக் மற்றும் தேஷ்பாண்டே இனாம்

இந்த இனாம் நிலங்களை மும்பையில் பார்க்கலாம். தேஷ்முக் இனாம் வருவாய் துறையினருக்கும், தேஷ் பாண்டே இனாம் காவல் துறையினருக்கும் கொடுக்கப் பட்ட இனாம்.

இவ்வாறு நமக்கு முன் வாழ்ந்த மன்னர்களும், அந்தந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த இஸ்லாமிய செல் வந்தர்களும் பள்ளிவாசல், தர்கா, மதரஸா மற்றும் மருத்துவ மனைகள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கப் பெற வேண்டும், அதன் மூலம் தம் மரணத் திற்குப் பிறகும் தனக்கு நன்மைகள் வந்து கொண்டே இருக்க வேண்டும் என்கிற உயரிய நோக்கில் தர்மம் செய்து இருக்கிறார்கள்.

இன்று அந்த தர்மங்கள் அனைத்தையும் ஒன்றி ணைத்து வக்ஃபு நிறுவனம் என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

ஆனால், சுதந்திர இந்தியா வில் குறிப்பாக கடந்த முப்பது வருடங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு பள்ளிவாசலுக் கும், எந்த ஒரு மதரஸாவிற்கும், தர்காவிற்கும் யாரும் நிலங் களையோ, வீட்டுமனை களையோ அன்பளிப்பு செய்த தாக பதிவுகள் இல்லை.

## கடனை மக்களிடம் திருப்பித் தரும் எண்ணத்துடன் வாங்குதல்

“எவன் மக்களின் பணத்தை (அல்லது பொருட்களைத்) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி அதை (ஏமாற்றி) அழித்து விடும் எண்ணத் துடன் கடன் வாங்குகிறானோ அல்லாஹ்வும் அவனை அழித்து விடுவான்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்.

(நூல் : ஸஹீஹ் புகாரி – 2387)

தாராளமாக காசு பணங்களை வழங்குகிறார்களே தவிர இவ்வாறான ஸதக்கத் துன் ஜாரியாவாக வழங்கப் படுவது மிகவும் குறைந்து விட்டது.

இது போன்ற வரலாற்றை அறிந்தவர்களுக்கு மிகவும் வருத்தமாகவும், வேதனையாகவும் இருக்கிறது. செல்வந்தர்களே! நீங்கள் கோடி ரூபாயை தானமாக வழங்குவதை விட இடங்களாக கொடுத்துச் செல்லுங்கள். அது நிரந்தரமான நன்மையை பெற்று தரும்.

## இறை மறுப்பாளர்களின் செயல்களுக்கு மறுமை நாளில் கூலி உண்டா?

இறை மறுப்பாளர்களில் ஒருவர் மற்றொருவரின் பசியை ஆற்றினாலோ, ஒருவருக்கு மருத்துவ உதவி செய்தாலோ அல்லது நிரந்தர நல்லறங்களில் ஒன்றை செய்தாலோ அவருக்கு இவ்வுலகிலேயே சிறந்த பகரத்தை அல்லாஹ் கொடுத்து விடுவான். அவருக்கு மறுமை நாளில் எந்த நன்மை யும், பிரதி பலனும் வழங்கப்படாது. இதுவே இஸ்லாமிய கொள்கையாகும்.

இந்தக்கருத்தை வலியுறுத் தும் விதமான அல்லாஹ் வி ன் கூற்றையும், அண்ணலாரின் வாழ்வியலையும் காண்போம்.

அல்லாஹ் கூறுகிறான்: "இறை மறுப்பாளர்கள் [இவ்வுலகில்] செய்த நற் காரியங்களின் பக்கம் [மறுமை நாளில்] நாம் கவனம் செலுத்துவோம்; பிறகு அவற்றை காற்றில் பரப்பி விடப்பட்ட புழுதியாக நாம் மாற்றுவோம்".

-அல்குர்ஆன் (25 : 23)

"அவர்கள் இணை வைப்பார்களானால் அவர்கள் செய்த நல்லவற்றை யெல்லாம் அவர்களின் பதிவேட்டில் இருந்து அவன் அகற்றி விடுவான்".

- அல்குர்ஆன் (6 : 88)

"இணை வைப்பவர்கள், தாம் இறை மறுப்பாளர்களாகவே இருப்பதற்கு அவர்களே சாட்சியாளராக இருக்க, அவர்கள் அல்லாஹ் வின் பள்ளிவாசல்களை நிர்வகிப்பதற்கு தகுதியுடையோரல்லர்; அவர்கள் செய்த நற்காரியங்கள் அனைத்தும் பயனற்று போய் விட்டன; அவர்கள் நரகத்தில் நீடித்திருப்போர் ஆவர்".

- அல்குர்ஆன் (9 : 17)

"இறை நம்பிக்கை கொள்ள எவர் மறுக்கிறாரோ அவரது நற்செயல்கள் பயனற்று போகும். அவர் மறு உலகில் இழப்புக் குரியவர்களில் ஆகிவிடுவார்".

- அல்குர்ஆன் (5 : 5)

ஹள்ரத் அனஸ் [ரளி] அவர்கள் அறிவிப்பதாவது: "நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்: ஒரு இறை மறுப்பாளர் உணவை [தர்மம்] அளிப்பதன் மூலம் நன்மையை பெற்று இருந்தால்

அதற்கான நன்மையை அல்லாஹ் இவ்வுலகிலேயே அவருக்கு வழங்கி விடுகிறான்''.

அவை எந்த அளவு சிறந்த தாக இருந்தாலும், மறுமை நாளில் கூலியாக வழங்கப்படும் எந்த நன்மையும் அவருக்கு கொடுக்கப்படாது.

(நூல் : முஸ்லிம்)

ஆக இறுதியில்...

## மறுமை நாளில் இப்படியும் சிலர்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது:

"நபி (ஸல்) அவர்கள், "திவாலாகிப் போனவர் என்றால் யார் என்று உங் களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள்.

மக்கள், "யாரிடம் வெள்ளிக் காசோ (திர்ஹம்) பொருட் களோ இல்லையோ அவர்தான் எங்களைப் பொறுத்தவரை திவாலானவர்" என்று பதிலளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள், "என் சமுதாயத்தாரில் திவாலாகிப் போனவர் ஒருவராவார். அவர் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகியவற்றுடன் வருவார். (அதே நேரத்தில்) அவர் ஒருவரைத் திட்டியிருப் பார். ஒருவர் மீது அவதூறு சொல்லி யிருப்பார். ஒருவரது பொருளை (முறைகேடாகப்) புசித்திருப்பார். ஒருவரது இரத்தத்தைச் சிந்தி யிருப்பார். ஒருவரை அடித்திருப் பார். ஆகவே, இவருடைய நன்மைகளிலிருந்து சில வற்றை எடுத்து அவருக்குக் கொடுக்கப்படும்.

அவருடைய நன்மைகளி லிருந்துஎடுத்துக்கொடுப்பதற்கு முன் நன்மைகள் தீர்ந்துவிட்டால், (அவரால்பாதிக்கப்பட்ட) மக்களின் பாவங்களிலிருந்து சில எடுக்கப்பட்டு, இவர் மீது போடப் படும். பிறகு அவர் நரக நெருப்பில் தூக்கியெறியப் படுவார் (அவரே திவாலாகிப் போனவர்)'' என்றுகூறினார்கள்.

(நூல் : முஸ்லிம் 5037)

நமது கடந்த காலத்தை நாம் நினைத்துப் பார்ப்ப தில்லை. நினைத்துப் பார்க்கத் தோன்றினாலும் நினைவில் வருவதில்லை.

எனவே நமது கடந்த காலம் எப்படி கழிந்தது? என்று நமக்குத் தெரியாது. எஞ்சி இருக்கிற எதிர்காலத்தை சரியாக அமைத்துக் கொள்ள நினைப்பவர்கள் ஸதகத்துல் ஜாரியாவான மேற்கண்ட ஒரு செயலை செய்து, மரணத்திற்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் திவாலாவதில் இருந்து உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளலாம்.

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி
மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)


என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# AIMAN COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN

(Sponsored by AIMAN Education & Welfare Society)

(Affiliated to Bharathidasan University) Recognized by UGC Under Section 2(f) and 12(B)

K. Sathanur, Trichy-620 021

## ADMISSION OPEN



- B.A. - English
- B.B.A
- B.Com
- B.Com.(C.A)
- B.C.A
- B.Sc. - Computer Science
- B.Sc. - Mathematics
- B.Sc. - Physics
- B.Sc. - Nutrition & Dietetics
- B.Sc. - Apparel & Fashion Technology
- B.Sc. - Psychology

- M.A.-English
- M.Com
- M.Sc. - Computer Science
- M.Sc.- Food Service Management & Dietetics

100% PLACEMENT

Hostel and Bus Facilities Available

## MUBALLIGA AND MUALLAMA COURSES

Admission Going on...

Apply online : www.aimancollege.edu.in

For Admission : 96297 46444, 73395 48002

# பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்களுக்காக மதரஸா மற்றும் பள்ளிவாசலின் கட்டுமானம்

## மதரஸா-யே-இம்தாதியா மற்றும் அல்-மஸ்ஜிதுல் ஜமீல்

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவர் தங்களுடைய இடத்தை நமது மதரஸாவிற்காக வக்ஃப் செய்தார்கள். இந்த இடத்தின் மொத்த பரப்பளவு 4275 சதுர அடி ஆகும். இதில் நபி (ஸல்) அவர்களின் விருந்தினர்களான பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவர்கள் சகல வசதிகளுடன் தீனுடைய கல்வியை பெறும் வகையில் பள்ளிவாசல், வகுப்பறைகள், நூலகம், விடுதி, விருந்தினர் அறை மற்றும் கழிப்பறைகள் ஆகியவை இரண்டு தளங்களில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒரு சதுர அடியின் கட்டுமான செலவு ரூ.1500/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

எனவே, தாங்கள் அனைவரும் தங்களின் சார்பாகவும், குறிப்பாக, மறைந்த தங்கள் குடும்பத்தினரின் நன்மைக்காகவும் ஸதகத்துல் ஜாரியாவாக இந்த நற்செயலில் அதிக அளவில் பங்கு எடுத்துக் கொள்ளுங்கள். مَنْ بَنَى لِلّٰهِ مَسْجِدًا بَنَى اللّٰهُ لَهُ فِي الْجَنَّةِ مِثْلَهُ

அல்லாஹ்வின் திருப்தியை நாடி பள்ளிவாசலைக் கட்டுகிறவருக்கு அது போன்ற ஒன்றைச் சுவர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கட்டுகிறான் என நபி (ஸல்) கூறினார்கள். (ஹதீஸ்).

மூன்று செயல்களின் நன்மை ஒருபோதும் முடிவுக்கு வராது. அவற்றில் ஒன்று, பள்ளிவாசல், மதரஸா போன்றவற்றை எழுப்பி, அவற்றை நிரந்தரமாக தர்மமாக வழங்குவது. (ஹதீஸ்)

⚠ தயவு செய்து ஜகாத் தொகையை இதில் செலுத்த வேண்டாம்

Name : Imdadiya Educational and Charitable Trust
A/C No : 6288904753
IFSC : IDIB000M139
Branch : Melvisharam 1312
UPI Id : imdadiya@indianbnk

Indian Bank

SCAN & PAY

Donation's are Eligible for Deduction U/s. 80G of Income Tax Act. 1961
Vide U.R.No. AABTI2052FF20241 Dated: 09/02/2024

**Donate Us Per Sq.Ft Rs.1500**

8000 x 1500 1,20,00,000

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**
539, Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N)-632509
Contact : +91-9952120340

# நீங்கள் குர்பானி கொடுக்க வேண்டுமே என்று கவலைப்படாதீர்கள்!

## நாங்கள் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறோம்.

## குர்பானி ஆடு ஒன்றுக்கு ரூ.13,000/-மட்டுமே!

★ துல்ஹஜ் பிறை 10, 11, 12 ஆகிய நாட்களில் நமது கல்லூரியின் நிர்வாகிகள் மற்றும் உலமா பெருமக்கள் முன்னிலையில் உங்களின் குர்பானிகளை இன்ஷா அல்லாஹ் நிறைவுபடுத்தப்படும்.

★ "AL JAAMIATHUL ARABIYYA MAHDINUSSAADHA EDUCATION TRUST QURBANI FUND" எனும் பெயரில் செக்/டிராஃப்ட்களை கிராஸ் செய்து நேரடியாக கல்லூரியின் முகவரிக்கே அனுப்ப வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

Name : AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST QURBANI FUND

INDIAN BANK : A/c. No. 429051573 BRANCH : KARUPPAYURANI

IFSC Code : IDIB000K136

மேற்படி வங்கி கணக்கில் பணம் செலுத்துபவர்கள் பணம் அனுப்பிய விபரத்தை கீழ்க்கண்ட எமது செல் நம்பருக்கு வாட்ஸப் அல்லது SMS மூலம் அவசியம் தெரிவியுங்கள்.

மறக்காதீர்கள்! பணம் கிடைக்க வேண்டிய கடைசி நாள் : துல்ஹஜ் பிறை 7

கடித தொடர்புக்கும், நேரில் பணம் செலுத்துவதற்கும் :

JMS

## J.M.S.அரபு கல்லூரி

சிவகங்கை ரோடு, ஜாமிஆ நகர், மதுரை-20.

94430 66539, 99941 48480, 94860 17570


60B

60C

# ஏஜண்டுகளுக்கு உதவுங்கள்!

எவ்வித பெரிய இலாபத்தையும் எதிர்பார்க்காமல் – இலாபத்தை குறிக்கோளாக கருதாமல் – குரலின் வளர்ச்சிக்காக – தன்னலங் கருதாமல் – உழைப்பவர்கள் **குரலின் ஏஜண்டுகளாவர்.**

குரலை பரப்பும் பணியில் அவர்களின் உடல், பொருள், நேரம் அனைத்தையும் முழுமையாக அர்ப்பணித்து பாடுபடுகிறார்கள் என்பது சிலருக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகும்.

எனவே, குரலின் வளர்ச்சிக்காக அதன் மூலம் சமுதாயம் ''ஹிதாயத்'' எனும் நேர்வழியை பெற்றுக் கொள்வதற்காக பாடுபடும் குரல் ஏஜண்டுகளுக்கு உங்களால் எப்படியெல்லாம் உதவ முடியுமோ அப்படியெல்லாம் மனதார உதவுங்கள்.

அவர்கள் மூலம் உங்களின் மேலான உதவியோடு இன்னும் 5 – 10 இதழ்களை விற்பனை செய்ய முடியுமானாலும் அதற்கும் உதவியாய் நீங்கள் அமைந்திட வேண்டுகிறோம்.

ஒரேயொரு குடும்பத்திற்காவது உங்கள் முயற்சியால் குரல் சென்றடைந்து, அதன் மூலம் அந்த குடும்பம் ஒரு சிறிய விஷயத்தை தெரிந்து, அந்த குடும்பத்திற்கு நல்ல வழி கிடைக்குமானால் அந்த நன்மை முழுவதிலும் உங்களுக்கும் இன்ஷா அல்லாஹ் நிச்சயம் பங்கு கிடைக்கும்.

---

**முஸ்லிம்கள் அதிகளவில் வாழும் நகரங்களில் ஏஜண்டுகள் வரவேற்கப்படுகிறார்கள்.**

---

**இன்ஷா அல்லாஹ் உங்களின் மேலான உதவிக்கு என்றென்றும் நன்றி செலுத்துகிறோம்.**

---

## குர்ஆனின் குரல்

தபால் பெட்டி எண் : 45,
மதுரை-625020.
செல் : 9486729191/92

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

# உங்கள் பிள்ளைகள் ஆலிம் & ஹாஃபிழ் ஆக வேண்டுமா?

## கவலை வேண்டாம்!

# மதுரை ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரி

சிவகங்கை தேசிய நெடுஞ்சாலை,
ஜாமிஆ நகர், மதுரை - 20.

**கல்விப் பணியில் 40 ஆண்டுகள்....**

- ஐந்து ஆண்டுகளில் மவ்லவீ ஆலிம் பட்டம்
- குர்ஆன் மனன ஹிஃப்ழு பிரிவு
- குர்ஆன் நாஜிரா பிரிவு
- அரபி பேச்சுப் பயிற்சி
- அஃப்ழலுல் உலமா தேர்வு எழுத வைத்தல்
- தமிழ் பயான் பயிற்சி
- 8, 10, 11 மற்றும் 12 வரை உலகக் கல்வி

★ தரமான கல்வி
★ திறமையான ஆசிரியர்கள்
★ சுவையான உணவு
★ சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
★ வசதியான தங்குமிடம்
★ இயற்கையான சூழல்
★ தடையில்லாத மின்சாரம்
★ ஆங்கில பேச்சுப் பயிற்சி
★ கணினிப் பயிற்சி

கல்லூரியில் சேர எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**S.சபூர் முஹைதீன் மிஸ்பாஹி ஹள்ரத்**
தலைவர்.

மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் அல்லாமா அஷ்ஷைகு
**M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா**
முதல்வர்.

மேலும் தொடர்புக்கு :
**94430 66539, 94860 17570, 99941 48480**

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## தீமைகள் அகல தொழுகை வேண்டும்!

கலீஃபா உமர் (ரளி) அவர்களின் ஆட்சிகாலம். ஓர் அழகிய பெண் கோஷா பர்தாவுடன் தொழுகைக்குச் செல்வது வழக்கம். அந்தப் பெண் மீது ஓர் இளைஞன் காதல் கொண்டான். ஆனால், அந்தப் பெண் திருமணமானவள். இளைஞன் ஒரு நாள் துணிவுடன் உன்னை நான் அடைய விரும்புகிறேன் என அந்தப் பெண்ணிடம் தூது அனுப்பினான். உடனே அந்தப் பெண் "நானும் தயார். ஆனால் ஒரு நிபந்தனை; நீர் நாற்பது நாட்களுக்கு ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுக வேண்டும். எனக்குப் பணம் காசு எதுவும் தேவையில்லை" என்று பதிலளித்தாள்.

இது மிகச் சுலபமான காரியமாயிற்றே எனக் கூறியவாறு அந்த இளைஞன், ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் வருவதற்கு முன்பே மஸ்ஜிதுக்குச் செல்லலானான். ஒரு வாரம், பத்து நாட்கள் வரை அந்தப் பெண்ணின் வீட்டு வழியாக இளைஞன் சென்றான். பிறகு சிறுகச் சிறுக அவன் போக்குவரத்து குறைந்து கொண்டே சென்றது. இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண் வீட்டு பக்கமே தலைகாட்டுவதில்லை. நாற்பது நாட்கள் கழிந்த பின் அந்தப் பெண் இளைஞனுக்கு தூது அனுப்பினாள். உடன் இளைஞன் கூறினான் : "என் மனதில் இப்போது அந்த ஆசை இல்லை. அல்லாஹ்வின் காதலனாகி விட்டேன்" என்றான்.

அந்த மங்கை நல்லாள் இச்சம்பவத்தை தன் கணவரிடம் கூறினாள். கணவன் நேராக கலீஃபா அவர்களிடம் சென்று இந் நிகழ்ச்சியை விவரித்தார். இதனைக் கேட்ட கலீஃபா ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள்,

"நிச்சயமாக தொழுகை மானக்கேடான செயல்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் விலக்குகிறது" என அல்லாஹ் கூறியது முற்றிலும் உண்மை என்றார்கள்.

தொழுகையின் செயல்பாட்டைப் பார்த்தீர்களா? உண்மையில் தொழுகைக்கு மிகப் பெரிய ஆற்றல் இருக்கவே செய்கிறது. அது தீமைகளிலிருந்து மனிதனைத் தடுத்து நிறுத்துகிறது.

வாழ்க்கையில் சர்வ துறைகளிலும் அது தனது செல்வாக்கை நிலைநாட்டுகிறது. அல்லாஹ்வின் தியானமும், அவனுக்குக் கீழ்படிந்து வாழ்கின்ற வாழ்க்கையையும் நம்மவருக்குப் பெற்றுத் தருகிறது. ஒருவர் தொழுபவராக இருந்தும் தீமைகளில் பாவ கரமான செயல்களில் ஈடுபடுகிறாரென்றால் அவருடைய தொழுகை உண்மையான தொழுகை என்று சொல்வதற்கில்லை.

"எவருடைய தொழுகை மானக்கேடான செயல்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் அவரைத் தடுக்கவில்லையோ அந்தத் தொழுகை உண்மையில் தொழுகையாகவே இல்லை" என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## எதுவுமே வேண்டாம்!

இமாம்கள் அனைவருமே பிறர் பொருள் தங்களிடத்தில் இருப்பதை விரும்பவே மாட்டார்கள். ஒரு தடவை இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களுக்குச் சிறிது பணம் தேவைப்பட்டது. எனவே, தங்களிடமிருந்த ஒரு பனிக்கத்தை ஒரு கடைக் காரனிடம் ஈடு வைத்துப் பணம் பெற்றுக் கொண்டார்கள்.

சில நாட்கள் கழித்து பணமுடை தீர்ந்ததும், கடைக்காரனிடம் சென்று பணத்தைக் கொடுத்து விட்டு பனிக்கத்தை கேட்டார்கள். கடைக்காரன் ஒரே மாதிரியாக இருந்த இரு பனிக்கத்தை காண்பித்து, "இதில் எது உங்களுடையது? என்று அடையாளம் தெரியவில்லை. எனவே, நீங்களே பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

இரண்டு பனிக்கங்களும் ஒரே அச்சில் வார்த்தது போல் இருந்தபடியால் இமாம் அவர்களுக்கும் இனம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் தவறிக்கூட பிறர் பொருளை எடுத்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ஏனென்றால் ஏதாவது ஒரு பனிக்கத்தை எடுத்து, அது ஒரு வேளை தம்முடையதாக

---

### யாசீன் சூராவின் சிறப்பு!

"அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி எவரேனும் இரவில் சூரா யாஸீனை ஓதினால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜுன்துப் (ரளி) அவர்கள்
(இப்னுஹிப்பான்)

## ஹாஜிகளே! கொஞ்சம் நில்லுங்கள்!

“அரஃபாவில் ஒன்று சேர்ந்து இருக்கின்ற ஹாஜிகளைப் பார்த்து அல்லாஹ் தன் மலக்குமார்களிடம், என் அடியார்களைப் பாருங்கள். அவர்கள் தூசி படிந்தவர்களாகவும், தலைவிரிகோலமாகவும், வெகு தூரமான எல்லா வழிகளிலிருந்தும் என்னிடம் வந்திருக்கிறார்கள். நான் அவர்களை மன்னித்து விட்டதற்கு உங்களை நான் சாட்சியாக்குகிறேன்” என்று அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ்இப்னு அம்ரு (ரளி) அவர்கள் (நூல் : ஜாமிஉஸ் ஸகீர்)


வாழ்த்துக்களுடன்....

**ARM**

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**
**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

இல்லாதிருந்தால் என்ன செய்வது? என்று யோசித்துவிட்டு இரண்டையும் கடைக்காரனிடமே திருப்பிக் கொடுத்து எனக்கு எதுவுமே வேண்டாம் என்று சொல்லி சென்று விட்டார்கள்.

## மாணிக்கக் கல் யாருக்கு?

அரபு நாட்டில் வாழ்ந்த பெரியார் ஒருவருக்கு மூன்று ஆண் மக்கள். அவர் வயதான காலத்தில் தம்முடைய சொத்துகள் அனைத்தையும் சம பங்குகளாக்கி மூன்று புதல்வர்களுக்கும் கொடுத்தார். விலை மதிப்பு வாய்ந்த ஒரு மாணிக்கக் கல் மட்டும் எஞ்சியது. அம்மக்களை அழைத்து உங்களில் யார் செயற்கரிய நல்ல காரியத்தை செய்கிறாரோ அவருக்கு இந்த மாணிக்கக் கல்லைத் தருவேன்" என்றார் அந்தப் பெரியவர்.

சில நாட்கள் சென்ற பின் மூத்த மகன் தந்தையிடம் வந்து, "தந்தையே! என்னிடம் ஒருவர் மிக அதிகமான தொகை ஒன்றைத் தந்தார். நான் நினைத்தால் அப்பணத்தை அவருக்குக் கொடுக்காமல் ஏமாற்றியிருக்கலாம். அவ்வாறு நான் நம்பிக்கை மோசடி செய்யாமல் சில நாட்களுக்குப்பின் அவர் வந்து கேட்டபோது அப்படியே ஒப்படைத்து விட்டேன் என்றான்.

பெரியவர் சொன்னார் : "மகனே! நீ செய்த காரியம் நல்லதே எனினும் அது ஒரு நம்பிக்கையாளனின் கடமையாயிற்றே; ஒரு கடமையைச் செய்ததற்காக உன் செயல் மெச்சத் தகுந்ததே".

அடுத்த மகன் வந்து, "இன்று நான் ஆற்றங்கரையோரமாக வரும் போது ஒரு சிறுவன் ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்தான். உடனே நான் ஆற்றில் குதித்து அவனைக் காப்பாற்றினேன்" என்றான்.

இதைக் கேட்டு விட்டு தந்தை சொன்னார் : "மகனே! மரண ஆபத்திலுள்ள ஒரு மனிதனைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு மனிதனும் ஆற்ற வேண்டிய கடமையாகும். இதற்காக அந்த மாணிக்கக் கல் உன்னைச் சேராது."

மூன்றாவது மகன் வந்து சொன்னான் : "ஒரு பெரிய ஆற்றின் குறுகலான பாலம் ஒன்றில் நடந்து வந்து கொண்டிருந்தேன். என்னை கொலை செய்ய வேண்டும் என்ற வெறி கொண்ட என் எதிரி ஒருவன் அப்பாலத்தில் மயங்கிக் கிடந்தான். சற்று பிசகினாலும் அவன் ஆற்றில் சரிந்து விழுந்து மரணித்துவிடுவான். அவனைத் தோளில் தூக்கிச் சென்று மயக்கம் தெளிய வைத்து காப்பாற்றி விட்டு வந்தேன். தந்தை அவன் தோளில் தட்டியவாறு மாணிக்கக் கல்லை அவனுக்கு கொடுத்தார். (தொடரும்)

# பெற்றோரைப் பேணுவோம்!

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

இறைவனுக்கு அடுத்த படியாக நாம் அதிகம் கடமைப் பட்டிருப்பது நமது பெற்றோர்களே! நமக்கு பெயரும் முகவரியும் கொடுத்து, நம்மை இந்த அளவுக்கு வளர்த்தெடுத்தது நமது பெற்றோர்களே! பெற்றோர்கள் இன்றி நாம் பிறக்கவும் முடியாது; உலகிற்கு வரவும் முடியாது. நம்மை ஆசை ஆசையாய்... பாச மழையில் வளர்த்த பெற்றோரை நாம் ஒருபோதும் உதாசீனப்படுத்தக்கூடாது.

இறைவனுக்கு நாம் செய்யும் சேவை வணக்கம் என்றால் பெற்றோருக்கு நாம் செய்யும் சேவை அது உபகாரம் ஆகும்.

இறைவன் நமக்கு அடுத்த அந்தஸ்தில் பெற்றோரை நிறுத்தி அவர்களுக்கு உபகாரம் செய்வதை, பணிவிடை செய்வதை, பணிந்து நடப்பதை கடமையாக ஆக்கியுள்ளான். இது குறித்து இறைவன் பின்வருமாறு கூறுகிறான்.

“என்னைத் தவிர யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங் கள்! என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி “சீ” எனக் கூறாதீர்! மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக! அன்புடன் பணிவு எனும் சிறகை அவ்விருவருக்காகவும் தாழ்த்துவீராக! “சிறுவனாக இருக்கும்போது என்னை இருவரும் பராமரித்தது போல் இறைவா! இவ்விருவருக்கும் அருள்புரிவாயாக!” என்று கேட்பீராக!”

- அல்குர்ஆன்(17: 23,24)

இறைவனுக்கு அடுத்த இடம் பெற்றோருக்குத் தரும்படி இஸ்லாம் வேண்டிக்கொள்கிறது. இறைவனுக்கு உரிய அந்தஸ்தை கொடுக்கும்படி ஒரு போதும் பணிக்கவில்லை. இறைவன் இறைவன் தான். பெற்றோர் பெற்றோர்தான். பெற்றோர் இறைவன் அந்தஸ்தை பெற முடியாது. ஆகையினால், இறைவனுக்குச் செய்யும் வணக்கத்தை பெற்றோருக்குச் செய்ய முடியாது என்பது இஸ்லாத்தின் பார்வையாகும்.

“உனக்கு அறிவு இல்லாத ஒன்றை எனக்கு இணை கற்பிக்க அவ்விருவரும் உன்னைக் கட்டாயப்படுத்தி

னால் அவர்களுக்குக் கட்டுப் படாதே! இவ்வுலகில் அவர்களிடம் அழகிய முறையில் தோழமை கொள்!''.

- அல்குர்ஆன் (31 : 15)

இஸ்லாம் என்று வரும் போது இறைவனின் கூற்றுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். உலகம், உறவு, உபகாரம், பணி விடை, பணிவு என்று வரும் போது பெற்றோரின் பேச்சை கேட்டு நடக்க வேண்டும் என்பது மார்க்க விதியாகும்.

ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நான் நபி (ஸல்) அவர்களிடம் "செயலில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது எது?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது" என பதில் கூறினார்கள். பிறகு "எது?" என்று கேட்டேன். "பெற்றோருக்கு நன்மை புரிவது" என்றார்கள். பிறகு "எது?" என்று கேட்டேன். "அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்வது" என்று பதில் கூறினார்கள்.

(நூல் : முஸ்லிம், புகாரி)

அல்லாஹ்விற்கு ஆற்ற வேண்டிய கடமைகளுக்குப் பிறகு பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மற்ற அனைத்து செயல்பாடுகளை விடவும் சாலச் சிறந்ததாக அமைந்துள்ளது.

## அறப்போர் புரிவதை விட தாய்க்கு நன்மை புரிவதே மகத்தானது

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, தான் அறப்போர் புரிவதை விரும்புவதாக தெரிவித்தார். உடனே நபி (ஸல்) அவர்கள் அவரை வந்த வழியில் திரும்பிச் செல்லும்படியும், அவர் தம் தாய்க்கு நன்மைகள் புரியும் படியும் அவருக்கு ஏவினார்கள். அறப்போர் புரிவதில் ஆர்வத்தை காட்டிய அவர் திரும்பவும் வந்த போது, நபி (ஸல்) அவர்கள் மேற்கூறிய பதிலையே திரும்பவும் கூறினார்கள். மூன்றாவது தடவையும் அவர் நபியிடம் வந்து அனுமதி வேண்டிய போது, நபி (ஸல்) அவர்கள் "உனக்கு கைசேதம் ஏற்படட்டும்! (இது நபி (ஸல்) அவர்களால் செல்ல மாகக் கூறப்படும் வார்த்தை) நீர் உமது தாயின் பாதத்தை பற்றிக் கொள்!; அங்குதான் சுவனம் உள்ளது" என நபி (ஸல்) அவர் கள் கூறினார்கள்.

நூல் : இப்னுமாஜா

## நாம் அதிகம் அழகாக உறவாடுவதற்கு தகுதியானவர் தாயே!

இறைவனுக்கு அடுத்த படியாக உலகில் தாய்க்கு நிகர் வேறு எவரும் இல்லை. பிள்ளைகள் அதிகம் பணி விடை செய்வதற்கும், அதிக நேரம் உறவாடி

# நிலையான நன்மைகள் பெற்றிட
# நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற் பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400**சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கணவான்கள் தங்கள் மனம் திறந்து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**
Bank Name : INDIAN BANK    Branch : ARIYUR
A/C No. : **6845938157**
IFSC Code : IDIB000A198

+91 9080005537
+91 9080005537@akbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

**மவ்லானா மவ்லவீ உபைதுல்லாஹ் காஸிமி,** நிறுவனர் & முதல்வர்,

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

மகிழ்வதற்கும் தகுதியான நபர் தாயே! இதுகுறித்து நபி (ஸல்) அவர்களின் கருத்தை கேட்கலாம்.

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழ்
ஹஜ் பெருநாள் சிறப்பிதழ்
மார்க்கப் பசிக்கு
மகத்தான விருந்து

"ஒரு மனிதன் நபி [ஸல்] அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! மக்களில் நான் அதிகம் அழகிய தோழமை கொள்வதற்கு தகுதியானவர் யார்?" என்று கேட்டார். நபி [ஸல்] அவர்கள் "உமது தாய்" என அவருக்கு பதில் கூறினார்கள். "பிறகு யார்?" என அவர் கேட்க, "உமது தாய்" என நபி [ஸல்] அவர்கள் கூற, மூன்றாவது தடவையாக "பிறகு யார்?" என அவர் கேட்கவும் நபியவர்கள் "உமது தாய்" என விடையளித்தார்கள். நான்காவது தடவையாக "பிறகு யார்?" என அவர் கேட்கும் போது "உமது தந்தை" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி, முஸ்லிம்)

இங்கு நபி (ஸல்) அவர்கள் முதல் மூன்று படித்தரங்களையும் தாய்க்கு வழங்கிவிட்டு, பிறகுதான் நான்காவது அந்தஸ்தை தந்தைக்கு வழங்கினார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

குழந்தைகளின் விஷயத்தில் தாய் முக்கியமான மூன்று அபாய கட்டங்களை எதிர்கொள்கிறாள். 1) தாய் என்பவள் தமது குழந்தையை பத்து மாதங்கள் தமது கருவில் சுமக்கிறாள். இந்த சுமை வலி நிறைந்தது; தியாகம் நிறைந்தது. இந்த வலியையும், தியாகத்தையும் குழந்தைகளுக்காக தாயைத் தவிர வேறு எவரும் தாங்கிக் கொள்வது இல்லை. 2) தாய் என்பவள் பத்து மாதம் சுமந்த கருவை எவ்வித சேதாரமும் இன்றி குழந்தையாக பிரசவத்தின்போது பெற்றெடுக்கிறாள். இந்த நிகழ்வுக்கு பிரசவம் என்று சொல்லப்படுகிறது. பிரசவ வேதனை என்பது மரண வேதனைக்கு நிகரானது. மரண வேதனையை கடந்து தாய் குழந்தையை பெற்றெடுப்பது என்பது இது ஒரு வர்ணனை செய்ய முடியாத ஒப்பற்ற தியாகம். 3) தாய் குழந்தைக்கு சுமார் இரண்டாண்டுகள் பாலூட்டுகிறாள்.

தமது இரத்தத்தையே பாலாக மாற்றி பலனை எதிர்பார்க்காமல் கொடுத்து வருகிறாள். இந்த மூன்று கட்டங்களும் வேதனையும், சோதனையும், தியாகமும், அர்ப்பணிப்பும் நிறைந்தவை ஆகும். இப்படிப் பட்ட தாய்க்கு பிரதி பலனாக முதல் மூன்று படித் தரங்களை தாய்க்கு முன் னிலைப்படுத்தி இஸ்லாம் கௌரவிக்கிறது.

“மனிதன் தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படி உபதேசம் செய்தோம்; அவனுடைய தாய் வெகு சிரமத்துடனேயே அவனைச் சுமந்து, வெகு சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுக்கிறாள்; [கர்ப்பத்தில்] அவனைச் சுமப்பதும், அவனுக்குப் பால்குடி மறக்கச் செய்வதும் [மொத்தம்] முப்பது மாதங்களாகும்”.

- அல்குர்ஆன் 46:15

“மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பல வீனத்துக்கு மேல் பலவீனப் பட்டவளாகச் சுமந்தாள். அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு”.

- அல்குர்ஆன் (31 : 14)

## நாடு துறந்து செல்வதை விடவும் பெற்றோரிடம் இருந்து வாழ்வது சிறந்தது

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வருகை புரிந் தார். “நான் இறையருளைப் பெற ஆசைப்பட்டு நாடு துறந்து (ஹிஜ்ரத்) செல்வதை யும், அறப்போர் புரிவதையும் தங்களிடம் உறுதிமொழியாகக் கொடுக்கிறேன்” என்று கூறினார். இதை கேட்ட நபியவர் கள் “உனது பெற்றோரில் ஒருவரேனும் உயிருடன் இருக்கிறாரா?” என்று கேட்டார்கள். “ஆம் இருவருமே உயிருடன் உள்ளார்கள்”

## ஏற்க மறுத்தவர் யார்?

(ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், “என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள்; ஏற்க மறுத்தவரைத் தவிர” என்று கூறினார்கள். மக்கள், “அல்லாஹ்வின் தூதரே! ஏற்க மறுத்தவர் யார்?” என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், “எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார்; எனக்கு மாறு செய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவர் ஆவார்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

நூல் : ஸஹீஹுல் புகாரி

என்று அவர் கூறினார். "அப்படியானால் இறையருளை நீர் தேட வேண்டுமா?" என நபி (ஸல்) அவர்கள் திரும்பவும் கேட்கும் போது, அவர் "ஆம்" என்று பதில் கூறினார். அப்படியானால் "நீர் உமது பெற்றோரிடம் திரும்பிச் சென்று, அவ்விருவரிடமும் அழகான முறையில் தோழமையுடன் நடந்து கொள்வீராக!" என இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி, முஸ்லிம்)

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து, அறப்போர் புரிய அனுமதி வேண்டினார். "உனது பெற்றோர் இருவரும் உயிருடன் இருக்கிறார்களா?" என நபி (ஸல்) கேட்கும் போது, அவர் "ஆம்" என பதில் அளிப்பார். "அப்படியானால் அவ்விருவரிடமும் சென்று, நீர் அறப்போர் புரிவாயாக!" என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்குவார்கள்.
(நூல் : புகாரி, முஸ்லிம்)

போர்க்களம் சென்று போர் புரிவது என்பது சிரமமான ஒரு காரியம் ஆகும். அங்கு சென்று பல விதமான கஷ்டங் களை அனுபவிக்க வேண்டியது வரும். இத்தகைய கஷ்டங் களையும், சிரமங்களையும் வீட்டிற்குச் சென்று பெற்றோருக்கு பணிவிடை செய்யும்போது அடைய நேரிடும். பெற்றோருக்கு பணிவிடை செய்வது போர்க் களம் சென்று போர் புரிவதற்கு நிகரான நன்மை பயக்கும் காரியமாகும். ஆதலால்தான் அவ்விருவரிடமும் சென்று அறப்போர் புரிவாயாக! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"பெற்றோர் சுவனவாசல்களின் மத்திய பகுதி உடையவர்கள். நீ நாடினால் அதை வீணடித்துக் கொள்! அல்லது அதை பாதுகாத்துக் கொள்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்
(நூல் : இப்னுமாஜா)

சுவனத்தில் பல வாயில்கள் உண்டு. சுவனத்தில் சிறந்த பகுதி அதன் மத்திய பகுதி தான். அந்த சிறந்த பகுதியை அடை வதற்கு ஒரே வழி பெற்றோரைப் பேணுவதுதான். பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உரிமைகளையும், கடமைகளையும், பணிவிடைகளையும் ஒழுங்காக குழந்தைகள் நிறைவேற்றினால் நிச்சயம் அவர்கள் சுவனத்தில் சிறந்த மையப் பகுதியை அடைவார்கள். அவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளில் குழந்தைகள் ஏதேனும் குறை வைத்தால், அதனால் குழந்தைகள் சுவனத்தில் நுழைய முடியாது

என்பதையும் இஸ்லாம் எச்சரிக்கை செய்கிறது.

### பெற்றோரை பேணுவது எப்படி?

1. அவர்களை மதித்து நடப்பது.
2. அவர்களை அவர்களுக்கு தகுதியான ஆசனத்தில் அமர வைப்பது.
3. அவர்களுக்கு பணி விடை செய்வது.
4. அவர்களுக்கு தகுதி யில்லாததைக் கொண்டு பரிகாசம் செய்வதை விட்டும் தவிர்ந்திருப்பது.
5. அவர்களுக்கு எரிச்சலூட்டும் விதங்களில் நடந்து கொள்வதை விட்டும் தவிர்ந்திருப்பது.
6. அவர்கள் சபைக்கு வரும் போது, நாம் நமது இடத்திலிருந்து விலகி, எழுந்து, மகிழ்ச்சியாகவும், மங்களகரமாகவும் வரவேற்பது.
7. அவர்களுக்கு முன் நடந்து செல்லக்கூடாது.
8. அவர்களை விட உயர்ந்த இடத்தில் அமரக் கூடாது.
9. அவர்களுக்கு முன்னால் கால் நீட்டவும் கூடாது. காலுக்கு மேல் கால் போடவும் கூடாது.
10. அவர்களின் அனுமதி யின்றி சபையில் தூங்குவதோ, படுப்பதோ கூடாது.


## சோமனூர்
## பள்ளிவாசலுக்கு உதவுங்கள்!

கோவை மாவட்டம், சோமனூரில் மஸ்ஜிதே நூர் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசலின் கட்டிடம் இடிக்கப்பட்டு, புதிதாக கட்டப்பட்டு, உள் வேலைகளும் முடிந்து, வெளி வேலைகள் மட்டும் நிறைவு பெறாமல் உள்ளன. சமுதாயத்தின் நல்லோர்கள் மேற்படி வேலைகள் நிறைவு பெறுவதற்கு தங்களின் மேலான பொருளாதார உதவிகளை அனுப்பி ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

Account Name : **Masjidhe Noor & Madhrasa Sunnath Jamath Paribalana Sabhai**

Bank Name : UNION BANK OF INDIA, SOMANUR.

Account No. : **33490201001094O**, IFSC Code : UBIN0533491

**தொடர்புக்கு :**

G Pay PhonePe **94438 99786**

11. அவர்களை நோக்கி கை நீட்டி பேசக் கூடாது.
12. அவர்களை முறைத்துப் பார்க்கவும் கூடாது.
13. அவர்களின் அனுமதி யின்றி சபையிலிருந்து வெளியேறக் கூடாது.
14. அவர்களின் பேச்சை புத்திக்கூர்மையுடன், செவி தாழ்த்தி, மன ஓர்மையுடன் கேட்க வேண்டும்.
15. அவர்களின் அனுமதியின்றி பேச்சை தொடங்கக்கூடாது.
16. அவர்களிடம் தேவையில் லாமல் அதிகம் கேள்வி களை கேட்கக்கூடாது.
17. அவர்களின் கைகளை முத்தமிட வேண்டும்.
18. அவர்களிடம் பணி வுடன் பேச வேண்டும்.
19. பேசும்போது பேச்சை முறித்துக் கொண்டு முதுகை திருப்பக்கூடாது.
20. அவர்களை முந்தி நடக்கக் கூடாது.
21. பாவமான காரியங்களை தவிர்த்து, மற்ற விஷயங் களில் அவர்களை பின்பற்ற வேண்டும்.
22. அனைத்து விஷயங்களி லும் அவர்களிடம் ஆலோ சனை பெற வேண்டும்.
23. அவர்களின் ஆலோசனை களை மனமுவந்து மகிழ்ச்சி யுடன்ஏற்கவேண்டும்.
24. அவர்களின் அறிவுரையை ஏற்க வேண்டும்.
25. அவர்களுக்காக பாவ மன்னிப்பு கோர வேண்டும்.
26. அவர்களுக்காக பிரார்த்திக்க வேண்டும்.
27. அவர்களின்உறவுமுறையை மதிக்க வேண்டும்.
28. அவர்களின் நட்புவட்டாரங் களை கண்ணியப்படுத்திட வேண்டும்.
29. அவர்களின்வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டும்.
30. அவர்களுக்குரிய தேவை களை பூர்த்தி செய்திட வேண்டும்.

இவ்வாறு பெற்றோருக்குச் செய்ய வேண்டிய மரியாதை களையும், உரிமைகளையும் நிறைவேற்றி வந்தால், குழந்தைகளின் எதிர்காலம் நல்ல விதமாக அமைவதுடன், இவ்வுலக வாழ்வும் சிறக்கும். மறுவுலக வாழ்வும் சிறக்கும். இவ்வுலகம் மற்றும் மறுவுலக நற்பேறுகளும் கிடைக்கும். குறிப்பாக சொர்க்கமும் அதன் இன்பமயமான வாழ்வும் கிடைக்கும். இரு உலக நற் பேறுகள் கிடைத்திட ஈடில்லாத ஒரே வழி பெற்றோரைப் பேணு வது மட்டுமே!

பெற்றோரைப் பேணுவோம்!
பெரும் பாக்கியங்களை
பெறுவோம்!!



# டால்ஃபின் மீன் (Dolphin)

“தமிழ் மாமணி” அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.எஸ்.ஹெச்.,

“அவன் வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், மனிதர்களுக்குப் பயன் தருபவற்றை [ஏற்றி]க் கொண்டு கடலில் செல்லும் கப்பலிலும், வானத்திலிருந்து மழையை இறக்கி அதைக் கொண்டு [வறண்டு] இறந்த பூமியை அல்லது உயிர்ப்பி[த்துச் செழிப்பாக்கி வை]ப்பதிலும், கால்நடைகள் அனைத்தையும் பூமியில் பரவவிட்டிருப்பதிலும், காற்றை[ப் பல கோணங்களில் திருப்பி]த் திருப்பி விடுவதிலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையில் அமர்த்தப்பட்டிருக்கும் மேகத்திலும் [மனிதர்களுக்குள்ள பயன்களை ஆராய்ந்து] சிந்திக்கும் மக்களுக்கு [அவனுடைய அருளையும் அன்பையும் ஆற்றலையும் அறிவிக்கக்கூடிய] பல அத்தாட்சிகள் நிச்சயமாக இருக்கின்றன.

– அல்குர்ஆன் (2 : 164)

டால்ஃபின் மீன் மற்ற மீன்களை விட ஒரு மாறுபட்டப் படைப்பாகும். அறிவுமிக்கது, அதைப் பேணி வளர்த்து, பழக்கப்படுத்தும்போது, அதற்கிடும் கட்டளைகளைக் கேட்டுச் செயல்படும் தன்மை கொண்டது.

டால்ஃபின் காட்சியகத்தில், அதன் செயல்பாடுகளை காட்டும் காட்சிகளைப் பார்த்து மகிழலாம், வியப்பும் அடையலாம்.

நாம் சுவாசிப்பதில் கவனம் செலுத்தி செயல்படுத்துவதில்லை. அது இயங்கிக் கொண்டேயிருக்கும். ஆனால் டால்ஃபின் மீன்கள் சுவாசத்தை உணர்ந்து கொண்டே செயல்படுத்துகின்றன.

டால்ஃபின்கள், கடல்நீர் மட்டத்திற்கு மேலாக மூக்கை உயர்த்தி, அவற்றின் நுரையீரல்களில் 80% முதல் 90% வரை காற்றை நிரப்பிக் கொண்டு நீருக்குள் சென்று விடுகின்றன. இதன் மூலம் நீண்ட நேரம் தண்ணீருக்குள் தங்கிக் கொள்ளலாம்.

## உறக்கத்தில் சுவாசம்

உறங்கும் பொழுது டால்ஃபின்கள் வலது மூளையை

யும், இடது மூளையையும் 15 நிமிடங்கள் மாற்றி மாற்றி செயல்படுத்தி சுவாசிக்கின்றன. ஒரு பக்க மூளை உறங்கும் போது, மறுபக்க மூளை செயல்படும். உறங்கி விழிக்கும் வரை இவ்வாறு செயல்படும். உறங்கிக் கொண்டே, தண்ணீர் மட்டத்திற்கு மேல் எழும்பி, நுரையீரல்களில் காற்றை நிரப்பிக் கொள்கின்ற விந்தை நடைபெறுகிறது.

பூமியில் வாழும் மனிதர்களின் உடலமைப்பும், பணிகளும் வேறுபட்டு, ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டு வியப்பளிக்கின்றன. சில பணிகள் உட்சிக்கல் வாய்ந்தவையாக இருக்கும்.

இதுபோன்ற எண்ணற்ற உயிரினங்கள் பூமியிலும், வானத்திலும், கடலிலும் உதிக்கின்றன. அவற்றின் அமைப்பும், இயக்கமும் வேறுபடுகின்றன. ஆனால், எவ்வித இடையூறுமின்றி, சீராக நடைபெறும் அற்புதத்தை வல்ல அல்லாஹ் நிகழ்த்துகின்றான். ஆகவே தான் இறைவனை அறிய, படைப்புகளை ஆராய்ந்து அறியுமாறு, திருமறை வழிகாட்டுகிறது.

டால்ஃபின்களின் சுவாச முறையே குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்ற பரிணாம வளர்ச்சி முறை டார்வினின் கணிப்பைப் பொய்யாக்கக் காண்கிறோம்.

## கொசு

“கொசு அல்லது அதைவிட [அற்பத்தில்] மேலான எதையும், உதாரணமாகக் கூறுவதற்கு அல்லாஹ் நிச்சயமாக வெட்கப்பட மாட்டான்”.

-அல்குர்ஆன் (2 : 26)

கொசு போன்ற அற்பப் படைப்புகளிலும், வியத்தகு செயற்பாடுகளை அல்லாஹ் அமைத்துள்ளான்.

மனிதன், தனது கரத்தை, ஒரு நொடிப் பொழுதில் சிறிதளவே அசைக்க முடியும். ஆனால், கொசு, ஒரு நொடியில் 500 தடவைகள் சிறகடிக்கின்றது. அதன் சிறகுகளை அசைக்கும் வல்லமையைப் பெற்றுள்ளது.

விஞ்ஞானிகள் இதுபோன்ற ஓர் அமைப்பை உருவாக்கினால், உராய்தலின் காரணத்தால் நெருப்பு தூண்டப்பட்டு, எறிந்து சாம்பலாகி விடும்.

கொசுவின் உயிருள்ள வரை, அதிவிரைவு சிறகடிப்பு நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

அது விரும்பிய பக்கம் ஒரு திசையில் பறந்து செல்லும் போது, அதில் வேகமாகப் பறந்து செல்லக் காணலாம். இலாவகமாகப் பறக்கவும், தரையிறங்கவும், பிசகின்றி அது செயல்படும்.

கொசு, அதன் சிறகை விரித்து பறப்பதற்கு அதிகம் பிராண

வாயு தேவைப்படுகிறது. ஆகவே அதன் சுவாசக் குழல், உடலின் அனைத்து செல் அணுக்களுக்கும் நேரடியாக, பிராணவாயுவை கொண்டு வந்து சேர்க்கும் திறன் கொண்டது. ஆகவே, கொசு களைப்புறுவதேயில்லை! காற்றிலுள்ள பிராணவாயு நேரடியாக கொசுவின் உடல் முழுவதிலும் சென்றடைகிறது.

கொசுவின் அளவு 0.4 அங்குலம் 1 செ.மீ அளவை விட குறைந்ததாகும்.

**வெப்பத்தை உணர்தல்**

வெப்பத்தை உணர்த்தும் ஏற்பிகள் (Heat Receptors) அதன் உடலில் உள்ளன. இவை அதிகத் திறனுள்ளவையாகும்.

உயிர்ப்பொருட்கள் அனைத்தும் வெப்ப உடலமைப்புக் கொண்ட வகைகளே. வெப்பம் 0.05°C அளவிலிருந்தாலும், கொசு வின் வெப்ப ஏற்பிகள், அதனை உணர்த்திவிடுகின்றன.

காரிருளிலும், உயிர்ப் பொருட்களை கொசு உணர்ந்து கொள்ளும்.

உணவைத் தேடவும், உடலைப் பாதுகாக்கவும், வெப்ப உணர்த்தலை கொசுவிற்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்.

**"வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் நிச்சயமாக அல்லாஹ்வுக் குரியனவே என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்".**

- அல்குர்ஆன் (10 : 66)


# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

# வரலாற்றில் ஓர் ஏடு

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள், தம் மனைவிமார்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். குடும்பச் செலவுத் தொகையை அதிகமாகத் தரும்படி கேட்டு குரல்களை உயர்த்திக் கொண்டிருந்தனர் அவர்களது மனைவியர். அப்போது அங்கு வந்த ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் உள்ளே வர அனுமதி கேட்டபோது, அப்பெண்கள் அவசர அவசரமாக தங்கள் மறைப்பாடைகளை (ஹிஜாப்) அணிந்தபடி எழுந்து கொண்டனர். நபி (ஸல்) அவர்கள் சிரித்தபடியே ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு உள்ளே வர அனுமதி கொடுத்தார்கள்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! தங்களை எப்போதும் அல்லாஹ் மகிழ்ச்சியாக இருக்கச் செய்வானாக!" என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "என்னிடமிருக்கும் இந்தப் பெண்களைக் கண்டு வியப்படைகிறேன். (என்னிடம் சகஜமாக அமர்ந்திருந்தவர்கள்) உங்கள் குரலைக் கேட்டவுடன் அவசர அவசரமாக மேலங்கிகளை அணிந்து கொண்டார்களே" என்று சொன்னார்கள்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள், "தங்களுக்குத் தானே அவர்கள் அதிகம் அஞ்ச வேண்டும் அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறி விட்டு, (அப்பெண்களை நோக்கி) "அல்லாஹ்வின் தூதருக்கு அஞ்சாமல் எனக்கா நீங்கள் அஞ்சுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் பெண்கள், "ஆம்! அல்லாஹ்வின் தூதருடன் ஒப்பிடும்போது, நீங்கள் முரடராகவும், வன்னெஞ்சம் கொண்டவராகவும் இருக்கிறீர்கள்" என்று பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வின் மீது ஆணையாக! உமரே! நீங்கள் ஒரு பாதையில் சென்று கொண்டிருக்கையில் உங்களை ஷைத்தான் கண்டால் உங்கள் பாதையை விட்டு விட்டு வேறொரு பாதையில் அவன் செல்வான்" என்று கூறினார்கள்.

ஆதாரம் : முஸ்னது அஹமது ஹதீஸ் எண் 1392

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

தொடர்-9

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

**பகவான் புத்தர்**

தர்மானந்த கோசாம்பி மராத்தியில் எழுதி, கா.ஸ்ரீ.ஸ்ரீ. தமிழாக்கம் செய்து, சாகித்ய அகாடமிக்காக பழனியப்பா பிரதர்ஸ் 1957இல் 458 பக்கங்களில் வெளியிட்ட நூல் பகவான் புத்தர்.

**சாக்கிய சிம்மன்**

சர்வார்த்த சித்தன், சௌத்தோதனி (சுத்தோதனன் மகன்) கௌதமன், அர்க்கபந்து, மாயாதேவி மகன் சாக்கியசிம்மன் இவை புத்தரின் பெயர்கள். பகவான் புத்தர் நூலில் பக்கம் 133-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சாக்கியரும், கோலியரும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள். ஆதலால் அவர்களுக்குள் நெருங்கிய தொடர்பு இருந்தது. சில சமயம் ரோகிணி ஆற்றின் தண்ணீர் விஷயமாக அவர்களுக்குள் சச்சரவு நிகழ்வதுண்டு.

**பக்கம் 137**

ரோகிணி ஆற்றின் நீருக்காகச் சாக்கியரும், கோலியரும் சண்டையிட்டு வந்தார்கள். ஒரு தடவை இரு திறத்தாரும் படை திரட்டிக் கொண்டு ரோகிணி ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அப்பொழுது புத்தர் பெருமான் இரண்டு சேனைகளுக்கு நடுவில் நின்று அத்ததண்டஸுத்தத்தை உபதேசித்தார்.

**அத்ததண்டஸுத்தம்**

ஆயுதம் தாங்குவது பயங்கரமாகத் தோன்றியது. அதனைக் கொண்டு இந்த மக்கள் எப்படி சண்டையிடுகிறார்கள் பாருங்கள்! எனக்கு வைராக்கியம் எப்படி ஏற்பட்டது என்பதைக் கூறுகிறேன்.

**புத்தரின் வெறுப்பு**

குறைவான நீரில் மீன்கள் துடிப்பது போல ஒருவரை ஒருவர் பகைத்துத் துடிக்கும் மக்களைக் கண்டு என் உள்ளத்தில் அச்சம் புகுந்தது. நான்கு பக்கங்களிலும் உலகம் சாரமற்றதாகப் புலப்பட்டது.

திசைகள் யாவும் நடுங்குவனவாகத் தோன்றின. அங்கே புகலுக்கு உரிய இடத்தைத் தேடிய பொழுது அச்சமற்ற இடமே தென்படவில்லை. எனவே, கடைசி வரைக்கும் மக்கள் யாவரும் தமக்குள் எதிரிகளாகவே இருப்பதைக்

கண்டதனால் எனக்கு வெறுப்பு உண்டாயிற்று.

**நதி நீரில் கலந்த நஞ்சு**

இதனைப் பின்னர் அவரது மகன் தாமேதர் தர்மானந்த கோசாம்பியும் உறுதிப்படுத்துகிறார். ரோகிணி ஆற்று நீர் காரணமாக மூண்ட போரில் எல்லா போர் விதிகளையும் மீறி சாக்கியர் நதியில் நஞ்சைக் கலந்தனர்.

The Sakyans fighting with them over the waters of Rohini river, had naturally no compunction in poisoning that water, against all rules of warefare among aryans.

**சுத்தோதனன்**

புத்தரின் தந்தை சுத்தோதனன். இவர் சாக்கிய குடியைச் சேர்ந்தவர் (Sakyam).

**மாயா**

புத்தரின் தாயார் மாயா. இவர் கோலியர் குடியைச் சேர்ந்தவர்.

**சாக்கியர்களின் பிரதேசம்**

சாக்கியர்களின் சிறு பிரதேசம் பூர்வீகத் தன்மை வாய்ந்ததாகவும் வளம் குன்றியதாகவும் இருந்தது. இன்றுள்ள இந்திய - நேபாள எல்லையின் இருபக்கங்களிலும் பஸ்தி (Basti), கோரக்பூர் (Gorakhpur) மாவட்டங்களையொட்டி அப்போது அது அமைந்திருந்தது.

இவர்களுக்கு அடுத்தாற் போல வாழ்ந்தவர்கள் கோலியர்கள் (Koliyan) சாக்கிய குலத்தைச் சேர்ந்தவர் புத்தரின் தாயார். இந்த இருகுலங்களுக்கும் இடையே தான் ரோகிணி நதி நீர் தகராறு போர் - நீரில் நஞ்சு கலத்தல்.

**பயிர்த் தொழில்**

ஆயுதம் தாங்கிப் போராடும் சத்திரியர்களாயினும், சாக்கியர்கள் பயிர்த் தொழிலையும் செய்தனர். புத்தருடைய தந்தை உட்பட எல்லா சாக்கியர்களும் ஏர் பிடித்து உழுதவர்களே; சாக்கிய குலத் தலைவர் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ராஜான்யா**

குலத்தலைவணாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடைய எந்த சத்திரியரையும் ராஜான்யா என்ற பட்டம் குறிக்கும். புத்தரின் தந்தை அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதால், புத்தரை இளவரசராக எழுத வைத்தது.

(Kosalam) கோசல மன்னர் பாசேணாதி (Pasenadi) (சமஸ்கிருதத்தில் பிரசேனஜித் - Prasenajit) அவரின் ஆதிக்கத்தின் கீழ்தான் சாக்கியர்கள் இருந்தார்கள்.

**ஆளார காலாமன் ஆசிரமம்**

புத்தர் இளம் வயதில் ஆளார காலாமனுடைய ஆசிரமத்திற்குச் சென்று தத்துவ ஞானம் பயின்றவர்.


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!
N.S.ஸ்டீல் ஹவுஸ்
எங்களிடம்
திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர்,
மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள்
அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.
214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362


சுப முகூர்த்தப் பட்டுகளுக்கு...
SILK MARK
மக்களின் பாராட்டில் ... மயிலாடுதுறை சீமாட்டி ...
சீமாட்டி
பட்டு - ஜவுளி - ரெடிமேட்ஸ்
மயிலாடுதுறை. ☎: 222587
: seemattiali@gmail.com
: +91 80564 02677

தந்தையுடனே அல்லது தனியாகவே சென்று வயலில் வேலை செய்தவர். அவ்வாறு சென்ற புத்தர் கிழவனையும், நோயாளியையும், பிணத்தையும் பார்த்ததில்லை என்பது எப்படி பொருந்தும்? என்று கேட்பார் தர்மானந்த கோசாம்பி.

புத்தரின் இனத்தவரான சாக்கியருக்கும், கோலியருக்குமிடையே சண்டை சச்சரவுகள் நிகழ்ந்தன. அவற்றில் தாம் தலையிடுவதா? வேண்டாமா? என்ற கேள்வி புத்தருக்கு எழுந்தது.

## துறவு பூண முடிவு

அடிதடியினால் இந்தச் சச்சரவுகள் தீரமாட்டாது என்பதை அவர் அறிந்தார். ஆனால் அவர் அவற்றில் ஈடுபடாவிட்டால் மக்கள் அவரைப் பயங்கொள்ளி என்பார்கள். இல்லறத்துக்கும் அதுஏற்றதன்று. ஆகவே இல்லறம் அவருக்குத் தொல்லையானஇடமாகத்தோன்றியது. அதை விட துறவியாகி எதிலும் விருப்பமற்று காடு மேடுகளில் திரிவது எவ்வளவோ மேலல்லவா?

வீட்டைத் துறப்பது மிகவும் கடினமாக இருந்தது. தீவிரமாகச் சிந்தித்தார் புத்தர். நானே பிறப்பு, முதுமை, நோய், சாவு ஆகியவற்றின் தன்மைகளையுடையவனாக இருக்கும்போது இதே இயல்பினால் கட்டுண்டவர்களான புதல்வன், மனைவி முதலியவர்களிடம் பற்றுக் கொண்டு இந்தத் தொல்லையும் குப்பையுமான இல்லறத்தில் விழுந்து கிடப்பது சரியன்று என்று புத்தருக்குத் தோன்றிற்று.

அதனால் அவர் பிரிவிராஜகரானார். மூன்று காரணங்களில் முதன்மையானது சாக்கியருக்கும், கோலியருக்கும் நிகழ்ந்துவந்த அடிக்கடி சண்டைகள் என்பார் டி.கோசாம்பி.

## போதி சத்வா

1947இல் தர்மானந்த கோசாம்பியின் மறைவிற்குப் பின்னர் 1949இல் அவரது "போதி சத்வா நாடக்" நாடக நூல் மராட்டிய மொழியில் வெளி வந்தது. புத்தர் ஏன் இல்லறத்தைத் துறந்தார்? என்பது பற்றிய ஆராய்ச்சி நூல். அந்த நாடகம் உலகத்தின் மீதான மறுப்பும் பரிநிர்வாணம் மீதான நம்பிக்கையும் அவரது ஞானத்தேடலுக்கான காரணம் அல்ல என்றும், இரண்டு குடிகளுக்கு இடையில் இருந்த நதி நீர்ப் பங்கீடு தொடர்பிலான பிரச்சனையைத் தீர்க்க படை பலத்தையும், சண்டையையும் பயன்படுத்துவதை புத்தர் தீவிரமாக எதிர்த்தது தான் காரணம் என்பார் தர்மானந்த கோசாம்பி. இளவரசர் சித்தார்த்தனின் துறவுக்கு காரணங்கள் என காலங்காலமாக கூறப்பட்டவற்றை தர்மானந்தா கோசாம்பி தனது பிற்கால வாழ்க்கையில் மறுத்தார்.

**வரலாற்றின் வெளிச்சத்தில்**

ஆப்கன்பூரில் அரண்மனை இடிந்து விழுந்து கியாசுத்தீன் துக்ளக் 1325 பிப்ரவரி - மார்ச்சில் மறைந்தார் என்பது காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் சரித்திரத் தவறாகும்.

ஏனென்றால் கியாசுத்தீன் துக்ளக் நோய்வாய்ப்பட்டு 1325 ஜூலையில் இறந்தார் என்பதனை ஆ.கா.மஹதி உசேன் சமகாலச் சான்றுகளுடன் விளக்கியுள்ளதை ஒப்பிட்டுப் பார்த்தேன்.

வரலாற்றின் வெளிச்சத்தில் உண்மைகள் வெளி வர வேண்டியது அவசியமும் காலத்தின் கட்டாயமுமன்றோ!

**எஸ்.ஏ.ஏ.ரிஸ்வி**

பரனீயின் தெளிவற்ற கூற்றைக் கொண்டு பிந்தைய வரலாற்றாசிரியர்கள் முஹம்மது பின் துக்ளக் தனது தந்தையைக் கொல்லச் சதியில் பங்கு பெற்றிருந்தார் எனக் கருதுகின்றனர்.

"But some later writers consider Uhaghkhan to have been innocent"

பிற்கால வரலாற்றாசிரியர்கள் கூற்றுப்படி, உலூகான் என்ற முஹம்மது பின் துக்ளக் தந்தையைக் கொல்ல சதி செய்ததாகக் கூறப்படுவதை ஆராயும்போது அவர் அப்பாவி என்று தெரிகிறது (குற்றமற்றவர்) என்பர் எஸ்.ஏ.ஏ.ரிஸ்வி.

**Dr பி.பி.சாக்சினா**

டாக்டர் பி.பி. சாக்சினா ஆப்கன்பூரில் கியாசுத்தீன் துக்ளக் இறந்தது விபத்து என்றுதான் கூறுகிறார்.

Dr. B.P.Saxena have expressed that he died in an accident.

தனது தந்தையைக் கொல்வதற்கெனவே இளவரசன் (முஹம்மது பின் துக்ளக்) அம்மண்டபத்தைக் கட்டினான் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமானதாயில்லை என்று பேராசிரியர் சாக்சினா போன்றவர்கள் கருதுகின்றனர்.

**இறைவனே அறிவான்**

பிரபல வரலாற்றாசிரியர் ஆர்.சி.மஜூம்தார் இந்த நிகழ்வு பற்றி எழுதிவிட்டு இறுதியாகச் சொல்வார் (God Only knows the real truth) இறைவன் ஒருவனே இதன் உண்மையை அறிவான்.

**ஆப்ரகாம் எரேலி**

ஏற்கனவே தனக்குப் பின் தனது மகன் முஹம்மது பின் துக்ளக் அரசப் பொறுப்பிற்கு என்று நிர்ணயிக்கப்பட்டதற்கு பிறகு அரச குடும்பத்தார் அனைவரும் ஒப்புக் கொண்டதற்குப் பிறகு முஹம்மது பின் துக்ளக், கியாசுத்தீன் துக்ளக்கை சதியால் கொன்றார் என்பதனை நம்பும்படியாக இல்லை என்பார் ஆப்ரகாம் எரேலி.

## திட்டமிட்ட தலைநகர் மாற்றம்!

டெல்லி அடிக்கடி மங்கோலியரின் தாக்குதலுக்கு ஆளாயிற்று. எனவே, மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தலைநகர் டெல்லியைக் காத்திடப் புதிய தலைநகரமாக வேறு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்கு முஹம்மது பின் துக்ளக் உள்ளானார். தௌலதாபாத் புதிய தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏறக்குறைய பேரரசின் மையப் பகுதியில் அந்நகர் அமைந்திருந்தது.

**தௌலதாபாத்**

தௌலதாபாத்தில் அரசு அலுவலர்களும், மக்களும் வாழ்வதற்காகத் தகுந்த முயற்சிகளை முஹம்மது பின் துக்ளக் மேற்கொண்டார். டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு சென்ற பயணிகளின் நன்மைக்காகச் சாலைகள் அமைத்தல், நிழல் தரும் மரங்களை நடுதல், அஞ்சல் வசதிகள் ஏற்படுத்துதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**திடீரெனத் தீர்மானிக்கப்படவில்லை**

தலைநகர் மாறுதல் எல்லோரும் எண்ணுவதைப் போல உடனடியாகவோ திடீரென்று தீர்மானித்தோ நிறைவேற்றப்படவில்லை.

**குடும்பத்தார் அனுப்பி வைக்கப்படல்**

முஹம்மது பின் துக்ளக்கின் குடும்பத்தார், அவரது அன்னையார் அரண்மனையைச் சார்ந்தவர்கள் முதலில் தௌலதாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

**இலவச உணவு-உறைவிடம்**

தௌலதாபாத்திற்கு வருவோர் தங்கிட இலவச உறைவிடமும் இலவச உணவும் முஹம்மது பின் துக்ளக்கால் வழங்கப்பட்டது.

---

## சொர்க்கவாசிகள் யார்? நரகவாசிகள் யார்?

நபி (ஸல்) அவர்கள் (ஒருமுறை), ''சொர்க்கவாசிகள் யார் என்று உங்களுக்கு நான் தெரிவிக்கட்டுமா? அவர்கள் (மக்களின் பார்வையில்) பலவீனமானவர்கள்; பணிவானவர்கள். (ஆனால்,) அவர்கள் அல்லாஹ்வின் மேல் ஆணையிட்டு (எதையேனும்) கூறுவார்களானால், அல்லாஹ் அதை (அவ்வாறே) நிறைவேற்றி வைப்பான். (இதைப் போன்றே,) நரகவாசிகள் யார் என்று உங்களுக்கு நான் தெரிவிக்கட்டுமா? அவர்கள் இரக்க மற்றவர்கள்; அகம்பாவம் கொண்டவர்கள்; பெருமை பிடித்தவர்கள்'' என்று கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹாரிஸா பின் வஹ்ப் (ரளி)அவர்கள் (நூல் : ஸஹீஹுல் புகாரி)

**எல்லா மக்களும் - தவறான கருத்தும்**

டெல்லியிலிருந்த எல்லா மக்களும் மொத்தமாக தௌலதாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது தவறான கருத்தாகும்.

உண்மையில் உயர் வகுப்பினர், பிரபுக்கள், ஷேக்குகள், மார்க்க அறிஞர்கள் ஆகியோரே முதலில் தௌலதாபாத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**இந்துக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை**

டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு இந்துக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்பதனை அக்காலத்தியச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. அவை குறித்து விரிவாகப் பார்ப்போம்.

**பில்லமன்**

கல்யாணச் சாளுக்கிய அரசர் நான்காம் பரமேஸ்வரனுக்குச் சிற்றரசராக இருந்தவர் பில்லமன். சாளுக்கியரின் வலிமைகுன்றியபோதுகிருஷ்ணா ஆறு வரையிலுள்ள இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு கி.பி.1187இல் தேவகிரி என்ற நகரை நிறுவினார். உலகின் சிறப்பான நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட செல்வச் செழிப்பான தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்


CERTIFIED ISO 9001:2008 COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

CERTIFIED ISO 9001:2008 COMPANY

ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்

அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

பில்லமன். ஹொய்சான பல்லாளன் கி.பி.1191இல் போரில் பில்லமனைக் கொன்றார்.

### இராமச்சந்திர தேவி

கி.பி.1296இல் அலாவுதீன் கில்ஜி தேவகிரி மீது படையெடுத்தார். அண்டையிலிருந்த அரசுகள் எதுவும் உதவவில்லை. தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவா போரில் தோற்றார். டெல்லிக்கு கப்பம் கட்ட ஒப்புக் கொண்டார். பெருஞ் செல்வம் கிட்டிற்று. விந்திய மலைக்குத் தெற்கே தேவகிரி, வாராங்கல், துவார சமுத்திரம் சேர, சோழ, பாண்டிய அரசுகள் இருந்தன. அவை ஒன்றொடொன்று போரிட்டுக் கொண்டிருந்தன.

### சங்கனா

இராமச்சந்திர தேவாவின் மகன் சங்கனா டெல்லிக்கு கப்பம் கட்ட மறுத்தார் (1309 - 1312). கி.பி.1312இல் மாலிக்கபூர் தேவகிரியின் மீது படையெடுத்து வென்றார்.

### கி.பி. 1327

கி.பி. 1327இல் முஹம்மது பின் துக்ளக் டெல்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை மாற்ற முடிவெடுத்தார்.

### டெல்லி மக்களைத் தண்டிப்பதற்காகவா?

டெல்லி மக்களைத் தண்டிப்பதற்காக தலைநகரை மாற்றும் முயற்சியில் முஹம்மது பின் துக்ளக் இறங்கினார் என்று இபுன் பதூதா சொல்கிறார்.

### ஏசல் கடிதங்கள்

டெல்லி மக்கள் முஹம்மது பின் துக்ளக்கை பலவாறாகத் திட்டியும், ஏசியும் கடிதங்கள் எழுதி அரண்மனை ஆலோசனை மண்டபத்தில் போட்டு விடுவார்கள். அரசர் தவிர வேறு எவரும் படிக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருந்த அந்தக் கடிதங்களைப் படித்த போது டெல்லி மக்கள் மீது கோபங்கொண்டார். டெல்லி மக்களை தேவகிரிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார். இந்த இபுன்பதூதாவின் கருத்தை நாம் ஏற்க இயலாது.

### கிரையத்தைத் தருதல்

டெல்லி மக்களுக்குச் சொந்தமாக இருந்த எல்லா வீடுகளையும் முஹம்மது பின் துக்ளக் விலைக்கு வாங்கி அவற்றுக்குரிய கிரையத்தையும் கொடுத்து விட்டார் என்று இபுன் பதூதாவே கூறியுள்ளார். டெல்லி மக்களுக்கு மனக் கஷ்டமும், பொருளாதார நஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக முஹம்மது பின் துக்ளக் அவ்வாறு செய்தார்.

(தொடரும்)

# ஹுதைபிய்யாவில் குறைஷியரின் கொடுமையான நிபந்தனைகள்

கம்பம் மவ்லானா
பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்

"அல்லாஹ்" என்பது எல்லாம் வல்ல இறைவனின் எழில்மிகு திருப்பெயராகும். ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒருவனாம் ஏகனின் அற்புத ஆதாரப் பெயராகும். இப்பெயரைத் தவிர இன்னும் 99 அழகிய பெயர்கள் அல்லாஹ்வுக்கு இருக்கின்றன. அப்பெயர்கள் இறைவனின் பண்பு - தன்மை - சிறப்பு - வல்லமை - ஆளுமையைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருக்கின்றன. "ரஹ்மான்" "ரஹீம்" போன்றவை அப்பெயர்களில் உள்ளனவாகும். அர்ரஹ்மான் என்றால் அருளாளன். அடியார்களுக்கு அருள்புரிபவன் என்று பொருள். "அர்ரஹீம்" என்றால் அன்புள்ளவன் என்று பொருள்.

அல்லாஹ்வின் சிறப்பினைச் சொல்லும் அடைமொழிகளாக இவை இருக்கின்றன. குறைஷித் தலைவர் ஸுஹைல் ஆட்சேபித்ததைப் போல புதிய தெய்வங்களின் பெயர்களல்ல. இஸ்லாத்தைப் பொறுத்தவரை கடவுள் ஒருவன் என்பதிலும் எல்லார்க்கும் இறைவன் ஒருவனே என்பதிலும் மிகவும் உறுதியாக இருக்கின்றது. இந்த உண்மையை மறுத்து ரஹ்மான் - ரஹீம் என்பதை தனித்தனி தெய்வங்கள் என ஸுஹைல் கூறியதால் முஸ்லிம்கள் உள்ளத்தால் குமுறினர். தனது மென்மையான பார்வையால் அண்ணல் அனைவரையும் அமைதிப்படுத்திவிட்டு "அலீயே! ஸுஹைல் சொல்வது போல் எழுதும்!" எனப் பணித்தார்கள். தோழர்கள் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

"பிஸ்மிகல்லாஹும்ம" (அல்லாஹ்வே உனது பெயரால்) என எழுதப்பட்டது. பின்னர் உடன்பாட்டின் வாசகம் இவ்வாறு தொடங்கியது. "அல்லாஹ்வின் தூதர் முஹம்மதும் அம்ரின் மகன் ஸுஹைலும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் இவை" இதைக் கண்ணுற்ற ஸுஹைல் கடுமையாக எதிர்த்தார். "என்ன முஹம்மதே! முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் - அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் என எழுதப்பட்டிருக்கின்றது? உம்மை இறை

வனின் தூதராகவே இன்னும் நாங்கள் அங்கீகரிக்கவில்லையே! அவ்வாறு நாங்கள் ஏற்றிருந் தால் இந்த ஒப்பந்தமே நமக் கிடையே அவசியமில்லையே! உங்களோடு சண்டை செய்தி ருப்போமா? போர் தொடுத்திருப் போமா? புனித இறையாலயத் திற்குள் நுழையவிடாமல்இப்படி ஊருக்கு வெளியே தடுத்திருப் போமா? உம்மை ஏற்றிருந்தால் இவ்வாறு எதுவும் நடந்திருக் காதே! ஸுஹைல்தான் பேசினார்.

“சரி... இப்போது அதற்கு என்ன?” அண்ணல் அமைதி யாகக் கேட்டார்கள். இப்போ தென்னவா? ஒன்றும் இல்லை. வாசகத்திலுள்ள முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வில் “ரஸூலுல்லாஹ்” என்பதை அழித்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்” எனக்கூறி எகிறிக் குதித்தார் ஸுஹைல்.

இதயத்தில் ஈட்டி கொண்டு குத்தியதுபோல் இருந்தது தோழர்களுக்கு. ஒவ்வொருவரும் தமக்குள் என்னென்னவோ கூறிக் கொண்டார்கள். எரிமலைக் குழம்பாய் உருகிக் கொண்டிருந் தனர். அங்கு நிலவிய நிசப்த மும், ஒரு மாதிரியான அமைதி யும் எதுவோ விபரீதம் நடக்கப் போவது போல் இருந்தது. “அலீயே! அவர் கூறுவது போல் “ரஸூலுல்லாஹ்” என்பதை அழித்துவிடும்” என்றார்கள் அண்ணலார் அமைதியாக. அக்கணமே அலீ (ரளி) துடித்துப் போனார். “யா ரஸூலுல்லாஹ்! (இறைவனின் தூதரே!) என்ன சொல்கிறீர்கள்? உங்களை அல்லாஹ்வின் தூதராக நம்பி நீங்கள் காட்டிய பாதையில் செல் லும் நான், நீங்கள் அல்லாஹ் வின் தூதர் என்ற உண்மையை அழிப்பதா? இது என்னால் முடி யாது. நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பது உண்மை – சத்தியம். இந்த உண்மையை ஏற்றுள்ள நானே எனது கரத்தால் அழிப்பதா? இது என்னால் முடியாது யாரஸூலல்லாஹ்! எனக்கு இயலாது யா ரஸூலல் லாஹ்! அலீ (ரளி) அழுதே விட்டார்.

தோழர்களோ... துக்கத்தை அடக்க முடியாமல் திணறினர். அழுதனர். கலங்கிக் கண்ணீர் சிந்தினர். மிகவும் சிரமப்பட்டுத் தான் பலர் தங்களின் வீர எழுச்சி களை – உணர்ச்சிப் பெருக்கை அடக்கிக் கொண்டனர். அதைப் பார்த்த அண்ணல் பரவா யில்லை. நானே எனது கையால் அதனை அழிக்கிறேன் எனச் சொல்லி அலீயிடமிருந்து எழுது கோலைப்பெற்று ரஸூலுல்லாஹ் என்பதை அழித்தார்கள். அக் காட்சியைக் காணச் சகிக்காத தோழர்கள் அப்படியே இடிந்து நின்றனர்.

“அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதுக்கும், அம்ரின் மகன் ஸுஹைலுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தம்” என வாசகம் தொடங்கியது. தோழர் களால் பொறுக்க முடியவில்லை.

مدرسة الاسلامية العربية

# மதரஸா-யே-இஸ்லாமிய்யா அரபிக் கல்லூரி

**#2/20, P.V. ஐயர் சந்து, மாஸ்கான்சாவடி, சென்னை – 1.**

அஸ்ஸலாமு அலைக்கும்....,

**உங்கள் ஆண்பிள்ளைகளை ஒரே சமயத்தில் மார்க்க அறிஞராகவும், இளங்கலை பட்டதாரியாகவும் உருவாக்க ஒரு பொன்னான வாய்ப்பு...!**



## சேர்க்கை நடைபெறுகிறது
## (2024 - 2025)

நாடறிந்த நாவலர், மவ்லானா அல்ஹாஃபிழ்

**Dr. M.சதீதுத்தீன் ஃபாழில் பாகவி**

**அவர்களின் தலைமையில்**

**சிறப்பம்சங்கள் :**

- 7 ஆண்டு பாடத்திட்டம்.
- 7ஆம் ஆண்டின் முடிவில் மவ்லவீ ஆலிம் ஸனதுடன் B.Com., பட்டம்.
- சென்னை பல்கலைக்கழகத்தில் அஃப்ழலுல் உலமா பட்டயம்.
- தமிழ், ஆங்கிலம் மற்றும் அரபி மொழியில் பேச்சு, எழுத்து பயிற்சிகள்.
- கம்ப்யூட்டர் வகுப்புகள்.
- பள்ளி படிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு கல்வி முறை.

**நுழைவுத் தேர்வுக்கான தகுதி :**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு சரளமாக குர்ஆன் ஓத வேண்டும்.

**விண்ணப்பத் தொடர்புக்கு:**

**9786250250, 9940939318, 9444916081**

மெல்லிய சலசலப்பு... புலம்பல்... இறைத்தூதருக்கு என்ன ஆனது? எதற்காக இந்த அளவுக்கு பணி கின்றார்கள்? அரபுத் தலைவர் ஸுஹைலின் ஆட்சேபத்தை யெல்லாம் அங்கீகரிக்கின்றார் களே! இறைத்தூதரின் மதீனத்து அரசியல் வாழ்க்கையில் இவ் வாறு எதற்காகவும் எவரிடத்தும் விட்டுக் கொடுத்ததில்லையே! அண்ணலார் அல்லாஹ்வின் ரஸூல் (தூதர்) என்பதுதானே உண்மை. இவர் எதிர்த்ததற் காக அந்த வாசகத்தையும் தனது கரத்தால் அழிக்கின்றார்களே....! உத்தமத் தோழர்களின் எண்ணப் பறவைகள் இவ்வாறெல்லாம் நெடுந்தூரம் பறந்தன.

எது எப்படி இருந்தாலும் இறைத்தூதருக்குக் கட்டுப் படுவதை நபித்தோழர்கள் தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்தனர். அண்ணலார் எது செய்தாலும் அதில் அர்த்தம் இருக்கும்; அவசரப்பட்டு விடக் கூடாது. ஏனெனில் இறைநெறி அழைப்புப் பணி சம்பந்தமாக அண்ணலார் சொல்லும் - செய்யும் ஒவ்வொன்றும் அவர் களது சுய விருப்பத்தில் எண்ணத்தில் இருப்பதில்லை; எல்லாம் வல்ல இறைவனின் (வஹீ) அறிவிப்பின் அடிப் படையிலேயே இருக்கும். ஸஹாபாக்களின் எண்ணம் இப்படித்தான் இருந்தது.

**ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் :**

1. இருசாராரும் பத்தாண்டு களுக்கு யுத்தத்தை நிறுத்தி விடுவது. யாரும் யாரையும் தாக்காமல் போர் நிறுத்தத்தை உடனடியாக உண்மை யாகக் கடைபிடிப்பது.
2. இந்தப் பத்தாண்டுகளில் மக்காவிலிருந்து தனது பொறுப்பாளர்களின் அனுமதியின்றி எவரேனும் மதீனாவுக்கு ஓடி வந்து விட்டால் உடனே அவரை இங்கு திருப்பி அனுப்பிவிட வேண்டும். ஆனால் இவ்வாறு மதீனாவிலிருந்து எவரேனும் மக்கா வந்தால் அவர் திருப்பி அனுப்பப்படமாட்டார்.
3. அரபு குலத்தின் ஏனைய கோத்திரத்தாருடன் இருதரப் பாரில் எவரும் ஒப்பந்தமோ உடன்படிக்கையோ எதுவும் செய்து கொள்ள உரிமை உண்டு. ஆனால் கபடமோ வஞ்சமோ செய்தல் கூடாது.
4. வந்திருக்கும் முஸ்லிம்கள் அனைவரும் இவ்வாண்டு மதீனாவிற்குத் திரும்பிச் சென்று விட வேண்டும். மக்காவிற்குள் நுழைந்து புனித ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் அடுத்த ஆண்டு வரலாம். மூன்று நாட்கள் மட்டும் மக்காவில் தங்கி யிருக்கலாம். அந்த மூன்று நாட்களில் குறைஷியர் எவ

ரும் மக்காவில் இருக்க மாட்டார்கள். ஊரை விட்டும் வெளியேறி விடுவார்கள். அவ்வாறு வரும்போது உறைக்குள்ளிருக்கும் உடைவாளைத் தவிர வேறெந்த ஆயுதங்களும், போர்த் தளவாடங்களும், கருவிகளும் எடுத்து வரக் கூடாது. அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## ஹுதைபிய்யாவில் ஒரு சோகச் சித்திரம்

ஒப்பந்தம் எழுதி முடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் எந்த வாசகமும் முஸ்லிம்களுக்குச் சாதகமாக இருக்கவில்லைஎன்பது ஒரு புறமிருக்க, அது நடுநிலையாக சமச்சீர் நிலையுடன் இருக்கவில்லை என்பது வெளிப்படை. முழுக்க முழுக்க குறைஷித் தலைவர் ஸுஹைலின் வாசகம் குறைஷியரின் எண்ணமாக இருந்தது. முஸ்லிம்களில் எவரது முகத்திலும் துளியும் மகிழ்ச்சியின் சாயல் இல்லை. எல்லோரின் முகமும் சோகச் சித்திரமாய் சோம்பிக் கிடந்தது. குறைஷிக் குழுவினரே குதூகலித்து நின்றனர்.

பெரும் சிரமங்களைச் சந்தித்து, நெடுந்தூரம் பயணப்பட்டு வந்து, புனித இறையாலயத்தைக் காண முடியாமல் போய்விடுமோ உம்ரா செய்யமுடியாமல்போய்விடுமோ எனக் கவலைப்பட்டனர். ஒப்பந்தத்தின் ஒவ்வொரு வரியும் நீதியுடன் இல்லையே! எனக் கலங்கினர். ஏமாற்றம், சோகம், கவலை, துன்பம், வெளிப்படுத்த முடியாத ஆத்திரம் என அத்தனையும் அவர்களைப் பற்றிக் கொண்டன. இழக்கக் கூடாததை இழந்து மௌனமாகத் தவிக்கும் சலனமில்லா சோக நிலை ஆங்கு நிலவியது. நிலைமையனைத்தையும் அவதானித்துக் கொண்ட அண்ணலரின் இதழ் மெல்ல மலர உள்ளத்தால் புன்னகைத்துக் கொண்டார்கள். வீரமிகு எழுச்சியும், அறிவார்ந்த உணர்ச்சியும், உயிரையும் அர்ப்பணிக்கும் தியாகச் சிந்தனையும் கொண்ட தம் உத்தமத் தோழர்களைக்கனிந்த பார்வையால் ஒரு முறை பார்த்துக் கொண்டார்கள். ஏதோ ஒரு வகையான அமைதி நிலவியது.

அந்த அமைதியைக்கிழித்துக் கொண்டு அழுகுரல் கேட்டது. அந்த அழுகையினூடே விம்மலும், குமுறலும் தெறித்தது. அனைவரும் அத்திசை நோக்கிப் பரபரப்புடன் பார்த்தனர். நல்ல உடற்கட்டும், அழகும் நிறைந்த ஓர் இளைஞர் பரிதாபமாகத் தத்தித் தத்தி தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தார். "என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்; அழைத்துச் செல்லுங்கள்

அண்ணலே.... அல்லாஹ்வின் தூதரே! என்னையும் மதீனா விற்குக் கூட்டிச் செல்லுங்கள். இறைமார்க்கமாம் இஸ்லாமே உண்மையானது என நம்பி அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன். அன்றிலிருந்து இன்றுவரைஎனது குடும்பத்தின ரால் நையப் புடைக்கப்பட்டு, சூடுகள் போடப்பட்டு, கடும் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றேன். இனியும்என்னால் தாங்க முடியவில்லை.

இறைவனுக்காக என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள். இந்தக் கொடுமையிலிருந்து என்னை விடுவியுங்கள். "அந்த ஹுதைபிய்யாவே அதிரும் வண்ணம் குமுறினார் அந்த இளைஞர். இத்தனை நாட்களாக இதயத்தில் பூட்டி வைத்திருந்த எண்ணத்தை, சோகத்தைத் திறந்தார் தூதர் நபிகளாரைப் பார்த்திட்ட ஆர்வத்தில்.

அபூஜந்தல் என்பது அந்த இளைஞரின் பெயர். முரட்டுத் தனமான நெடிய இரும்புச் சங்கிலியால் அவரது கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன. கனமான கட்டை ஒன்றும் அவரது முதுகில் சுமையாகிக் கிடந்தது. சங்கிலியைச் சுமந்து கொண்டு எப்படியோ தப்பி வந்திருந்தார். மாநபியும், முஸ்லிம் களும் ஹுதைபிய்யாவிற்கு வந்திருக்கின்றனர் என்பதை அறிந்ததால்.

ஆனால், விந்தையாதெனில், குறைஷியர் சார்பில் ஒப்பந்தம் செய்ய ஹுதைபிய்யா வந்திருக் கும் ஸுஹைல்தான் இவரது தந்தை என்பதுதான்! இருட்டு வீட்டில் போட்டுப் பூட்டி வைத்திருந்தோமே! இவன் எப்படி அதிலிருந்து தப்பி இங்கு வந்தான்? என அதிர்ந்த ஸுஹைல் ஆத்திரத்துடன் கண்டபடி அந்த இடத்திலேயே அபூஜந்தலை வெறித்தனமாக அடிக்க ஆரம்பித்தார். அதைப் பார்த்திட்ட அண்ணல் அப்படியே மனதால்கலங்கிக் குமைந்தார்கள். உணர்ச்சிமிக்க உத்தமத் தோழர் களோ செய்வதறியாது திகைத் தார்கள். பலர் பரபரப்பானார்கள். பொங்கி வந்த நியாயமான கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினர். தங் களையும் மீறி ஏதேனும் நடந்து விடுமோ என அவரவர் அஞ்சிக் கொண்டிருந்தனர்.

தந்தை ஸுஹைலோ அபூஜந்தலின் முகத்தில் ஓங்கி ஓங்கிக் குத்தினார். அவரது ஆத்திரத்தின் வெறி அடங்க வில்லை. அபூஜந்தலின் முகம் வீங்கிச் சிவந்தது. "முஹம்மதே! முஸ்லிம்களே! இதோ பாருங்கள். நாம் ஒப்பந்தம் பேசி எழுதி முடித்த பின்னரே இவன் வந்தான். ஒப்பந்தத்தின் அடிப்படையில் பார்த்தால் இவன் இங்கு தானிருக்க வேண் டும். நீங்கள் அழைத்துச் செல்ல முடியாது" எனக் கத்தினார்.

அண்ணலார் அமைதியாக "ஆம். உண்மைதான்" என்றார்கள். ஒப்பந்தம் எழுதி முடிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் கையெழுத்திடப்படவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. பொதுவாக எந்த உடன் பாடும் இருசாராரும் கையெழுத்திட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் என்பதுதான் நியதி. ஒப்பந்தத்தின் உண்மைச்சட்டம். எனினும் உத்தமர் நபிகளார் ஸுஹைலின் கூற்றை எதிர்க்கவில்லை. மௌனமாக இருந்தார்கள்.

இறைநெறியின்பால் ஈர்க்கப்பட்டு இதயப்பூர்வமாக அதனை ஏற்ற எழுச்சிமிகு இளைஞர் அபூஜந்தல் (ரளி) உள்ளம் உடைந்து விட்டார். "முஸ்லிம்களே! என்னை இந்த அறியாமைக்கார குருட்டு நம்பிக்கை கொண்ட இருட்டுப்பழமைவாதிகளிடமா ஒப்படைக்கப் போகின்றீர்கள்? வேண்டாம் தோழர்களே.... வேண்டாம். நான் உண்மையான இறை மார்க்கத்தை ஏற்றிருக்கின்றேன். அது இயம்பும் கடமைகளைச் செய்ய ஆசைப்படுகின்றேன். அது கூறும் வாழ்வியலை எனது வாழ்வாகக் கொண்டு செயலாற்ற எண்ணுகிறேன். என்னுயிரினும் மேலான இறைத் தூதரின் தோழமையில் உங்களது நட்பில் வாழ விரும்புகிறேன். தயை கூர்ந்து எப்படியேனும் என்னையும் உங்களுடன் அழைத்

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்
பாவா மெடிக்கல்ஸ்
294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.
போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

துச்சென்று விடுங்கள்" கெஞ்சிக் கெஞ்சிக் கதறி அழுதார்.

அந்தக் காட்சி இரும்பு இதயத்தையும் இளகச் செய் திருக்கும். கல்நெஞ்சையும் கரைய வைத்திருக்கும். தோழர் களனைவரும் துடித்துப் போயினர். குமுறிக் குமுறி அழு தனர். உணர்ச்சி, பரபரப்பு, போராட்டம் அவர்களது உள்ளத்தை ஆட் கொண்டன. எனினும் அனைவரது கரங்களும் அவிழ்க்க முடியாதவாறு கட்டப் பட்டிருந்தது போல் உணர்ந் தனர். ஆம். அதுதான் இறை வனுக்கும், இறைத்தூதருக் கும்கட்டுப்பட்டுள்ளோம்எனும் நம்பிக்கை நிலை (ஈமான்). மீண்டும் ஆங்கு ஏதோ ஒருவகை அமைதி நிலவியது.

அபூஜந்தலின் பரிதாப நிலை அவர் படும் அவஸ்தை யைத் தாங்க முடியாத அண்ண லார் ஸுஹைலை தனியே அழைத்துச் சென்று, "ஸுஹைலே! உம் மகன் அபூஜந்தலை எனக் காக விட்டுக் கொடுத்து எங் களுடன் அனுப்பக் கூடாதா, தனிப்பட்ட முறையில் எனக்குச் செய்யும் ஓர் உதவியாக உம் மிடம் இதை நான் கோரு கிறேன்" எனப் பணிவுடன் வேண்டினார்கள். பிடிவாதம் பிடித்த ஸுஹைலோ அதை அடியோடு மறுத்து விட்டார். கனத்த இதயத்தோடு, கசிந்த விழிகளோடு கருணை நபி தலை கவிழ்ந்து வந்தார்கள். ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு மௌனித்துப் போனார்கள்.

"அபூஜந்தலே என் அன்புத் தோழரே! அல்லாஹ்வுக்காகப் பொறுமையாக இருந்து வாரும். நிச்சயமாக அல்லாஹ் உங்கள னைவருக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டுவான். இந்த மக்கத்தாரோடு ஓர் உடன் படிக்கையைச் செய்திருக்கின் றோம். இதை மதித்து நடப்பதாக வாக்குறுதி வழங்கி விட்டோம். கொடுத்த வாக்குறுதியை நாம் மீறமாட்டோம்" என நெஞ்சம் நெகிழக்கூறி அபலையான அந்தத் தோழருக்கு ஆறுதல் வழங்கினார்கள். அந்தத் தருணத்தில் அதைத் தவிர வேறு எதையும் கொடுக்க அண்ணலாரால் முடிய வில்லை. (தொடரும்)

## உண்மையான ஏழை யார்?

"ஓரிரு கவளம் உணவுக்காக அலைபவன் ஏழையல்லன்; மாறாக, தன் வாழ்க்கைக்குப் போதிய செல்வம் இல்லாமலிருந்தும் பிறரிடம் கேட்க வெட்கப்படுகின்றவனும் அல்லது (அப்படிக் கேட்டாலும்) வற்புறுத்திக் கேட்காதவனுமே ஏழையாவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (ஸஹீஹுல் புகாரி : 1476)

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

தங்கத் தட்டுடன் வந்த ஔவையாரை பார்த்த புலவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். "நான் பொறை வரம்பனுக்கு சரியான பாடம் புகட்டி விட்டேன். இனிமேல் அவன் யாரையும் அவமதிக்க மாட்டான். இந்த வயதான காலத்தில் இந்த தங்கத்தட்டை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். இதை விற்று பணமாக்கி நீங்கள் எல்லோரும் பணத்தை சமமாக பங்கிட்டுக் கொண்டு உங்கள் குடும்பத்திற்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு ஊர் போய் சேருங்கள்" என்று கூறி தங்கத் தட்டை புலவர்களி டம் கொடுத்துவிட்டு ஔவை யார் சென்று விட்டார். அன்றிலிருந்து பொறை வரம்பன் தண்டோரா போடுவதை நிறுத்தி விட்டான். புலவர்கள் பணத் தட்டு (பணத் தட்டுப்பாடு) எங்களுக்குத்தான் என்று கூறி தங்கத் தட்டை வாங்கி விட்டு போய்விடுவார்கள். வந்து பாடும் புலவர்களுக்கெல்லாம் தங்கத் தட்டுகளை கொடுப்பது கட்டுபடி ஆகாது என்று முடிவெடுத்துக் கொண்டு புலவர்களை நேரில் பார்ப்பதை நிறுத்திக் கொண்டான்.

ஆகவே உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் ஏழை எளியவர்களை வார்த்தைகளால் புண்படுத்தக்கூடாது. அவ்வாறு எவரேனும் செய்தால் அல்லாஹ் எவரோ ஒருத்தரை அனுப்பி புண்படுத்துபவர்களின் கொட்டத்தை அடக்கி விடுவான் என்று இந்த சம்பவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். எனவே நபி (ஸல்) அவர்கள் கூறியது போல் அருவெறுப்பான வார்த்தைகளால் பேசி யாரையும் வேதனைபடுத்தக்கூடாது.

உதுமானியப் பேரரசின் மன்னர் சுல்தான் முதலாம் சுலைமான் (1520 -1566) அவர்களின் ஆட்சிக்காலத்தில் முஸ்தபா இப்னு இல்யாஸ் அல்காதிரி என்ற பிரபல்யமான நீதிபதி ஒருவர் இருந்தார். இவர் யாருடைய சாதக பாதகங்களையும் பார்க்காமல் பாரபட்சம் இன்றி தீர்ப்புகளை வழங்கி

வந்தார். ஒரு நாள் அஜ்மல் என்ற விவசாயி இவரிடம் வந்து "நீதிபதி அவர்களே! என்னுடைய பழத் தோட்டத்திற்கு தண்ணீர் போதவில்லை என்று பக்கத்து தோட்டத்திலுள்ள கிணற்றை நான் அதன் உரிமையாளர் ஷான் என்பவரிடம் விலைக்கு வாங்கினேன். அவர் விற்பனை பத்திரத்தில் என்னிடம் கையெழுத்தை வாங்கிக்கொண்டு அதற்கான பணத்தையும் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். கிணற்றை நான் உனக்கு விற்றுவிட்டேன். இன்றிலிருந்து கிணறு உனக்கு சொந்தமாகி விட்டது என்றும் ஷான் கூறினார். ஆனால் நான் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதை தடுக்கிறார். நான் உனக்கு கிணற்றை மட்டும் தான் விற்றேன். அதிலுள்ள தண்ணீரை விற்கவில்லை. ஆகவே தண்ணீர் எனக்கு சொந்தம். கிணறு மட்டும்தான் உனக்கு சொந்தம் என்று கூறி தகராறு செய்கிறார். அவரை விசாரித்து எனக்கு நல்ல தீர்ப்பை வழங்குங்கள்" என்று முறையிட்டார்..

நீதிபதி முஸ்தபா இப்னு இல்யாஸ் அல்காதிரி, ஷானை அழைத்து விசாரித்தார். "நீதிபதி அவர்களே! நான் அஜ்மலுக்கு கிணற்றை மட்டும் தான் விற்றேன். அதிலுள்ள தண்ணீரை நான் விற்கவில்லை. நீங்கள் இந்த விற்பனைப் பத்திரத்தை படித்து பாருங்கள்" என்று கூறினான். நீதிபதியிடம் விற்பனைப் பத்திரத்தை கொடுத்தான்.

விற்பனைப் பத்திரத்தை படித்துவிட்டு "அஜ்மல்! தண்ணீர் ஷானுக்கு தான் சொந்தம். உனக்கு கிணறு மட்டும் தான் சொந்தம்" என்ற நீதிபதி கூறினார். "என்ன நீதிபதி அவர்களே! தீர்ப்பை ஷானுக்கு சாதகமாக சொல்கிறீர்கள். ஏன் இந்த பாரபட்சம்?" என்று அஜ்மல் கேட்க, "அஜ்மல்! நான் விற்பனைப் பத்திரத்தின்படி தீர்ப்பு கூறினேன். விற்பனைப் பத்திரத்தில் கிணற்றை விற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தண்ணீரை விற்பதாக குறிப்பிப்படவில்லை" என்று நீதிபதி சொன்னதும் அஜ்மல் இடிந்து உட்கார்ந்து விட்டார். ஷானுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

நீதிபதி ஷானை பார்த்து, "ஷான்! உனக்கு சொந்தமான தண்ணீருடன் நீ ஏன் கிணற்றை அஜ்மலுக்கு விற்றாய்? அது உன் தவறு அல்லவா? ஆகவே உனக்கு சொந்தமான தண்ணீரை முழுவதும் எடுத்து வேறொரு கிணற்றில் ஊற்றி விட்டு காலி கிணறை அஜ்மலுக்கு கொடுக்க வேண்டும். இன்று இரவுக்குள் நீ காலி கிணற்றை அஜ்மலுக்கு ஒப்படைக்கவேண்டும். இல்லை

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

---

வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786 222528 (E)

**மலைவலம் வரும் நகரில்**

**கலை நயம் பொருந்திய**

# பூம்புகார்

துணியகம் & ஆடையகம்!

**55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601**

யென்றால் உனக்கு சொந்த மானதண்ணீரை அஜ்மல் அவன் கிணற்றில் வைத்திருப்பதற்கு நீ அஜ்மலுக்கு வாடகை தர வேண்டும். வாடகை ஒரு நாளைக்கு நூறு வெள்ளிக்காசு. வாடகை கொடுக்கத் தவறினால் நீ ஒரு நாளைக்கு இருநூறு வெள்ளிக் காசை அபராதமாக செலுத்த வேண்டும். இது நான் உனக்கு வழங்கும் தீர்ப்பு" என்று கூறினார்.

ஷான் இந்த தீர்ப்பை கேட்டு அதிர்ந்து போய்விட் டான். என்னது? இன்று இரவுக் குள் தண்ணீரை முழுவதும் எடுத்து வேறொரு கிணற்றில் ஊற்ற வேண்டுமா? காலி கிணற்றை அஜ்மலுக்கு கொடுக்க வேண்டுமா? இது நடக்கக்கூடிய காரியமா? இதென்ன விசித்திரமான தீர்ப்பு என்று எண்ணிக் கொண்டு "நீதிபதி அவர்களே! கிணறும் அஜ்மலுக்குதான் சொந்தம். அதிலுள்ள தண்ணீரும் அவ ருக்கே" என்று கூறி ஷான் அங்கி ருந்து துண்டைக் காணோம்; துணியைக்காணோம் என்று ஓடி விட்டான். வார்த்தை ஜாலங் களைக் கொண்டு அடுத்தவர் களை ஏய்ப்பது மோசடியாகும்.

"நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! [எந்நிலையிலும்] நேர்மையான சொல்லையே கூறுங்கள்!"

- அல்குர்ஆன் (33:70)

"இறைநம்பிக்கையாளர் களே! நீங்கள் இறைவனை அஞ்சுங்கள். [எந்நிலையிலும்] நேர்மையான சொல்லையே கூறுங்கள்."

"[இவ்வாறு நடந்தால்] அவன் உங்களுடைய காரியங் களை சீராக்கி வைப்பான். உங்களுடைய பாவங்களை மன்னிப்பான்."

- அல்குர்ஆன் (33:70, 71)

"நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள் மேலும், [சொல் லிலும் செயலிலும்] உண்மை யாளர்களுடன் இருங்கள்".

- அல் குர்ஆன் (9:119)

மோசடிக்கு இஸ்லாத்தில் இடம் கிடையாததால் நேர்மை யாக பேசவேண்டும் என்றும், சொல்லிலும் - செயலிலும் உண்மையாக இருக்க வேண் டும் என்றும் இஸ்லாம் இந்த உலகத்தாருக்கு எடுத்துக் கூறுகிறது.

மலர்ந்த முகத்தோடு, புன்னகையோடு, மனப்பூர்வ மாக, ஆத்மார்த்தமாக நாம் மற்றவர்களிடம் பேசும்போது நம்மை அறியாமல் இனிமை யான சொற்கள் நம்முடைய பேச்சில் வந்து விழும். இனிமை யான சொற்களுடன் நாம் மற்ற வர்களிடம் பேசினால் நாம் சமுதாயத்தில் மிகவும் விரும்பத் தக்கவர்களாகி விடுவோம்.

சர் ஆலன் புரூக் என்பவர் இங்கிலாந்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மிகப் பெரிய பதவி வகித்தவர். இவர் அதிகாலையில் எழுந்து நடந்து போகும்போது அப்போது தெருவை கூட்டிக் கொண்டிருக்கும் வயதான பெண்மணிகளைப் பார்த்து குட் மார்னிங் என்று கூறி அவர்களுடன் இன் முகத்துடன் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவருக்கு திடீரென்று உடல் நலம் சரியில்லாமல் போனதால் அவர் மருத்துவமனையில் மூன்று மாத காலம் சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

காலையில் நடந்து வரும் சர் ஆலன் புரூக் வெகு நாட்களாக காணவில்லையே என்று சஞ்சலப்பட்ட தெரு கூட்டும் வயதான பெண்கள், அவர் வீட்டில் விசாரித்தபோது, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து அவர்கள் அனைவரும் பழங்களையும், ரொட்டி போன்ற உணவுப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு அவரை மருத்துவமனையில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்கள். அப்போது அவர் உடலில் ஏற்றுவதற்கு இரத்தம் தேவைப் பட்டதை அறிந்த அந்தப் பெண்மணிகள் அவர்கள் இரத்தம் தருவதாக மருத்துவமனையில் தங்களின் பெயர்களையும், முகவரிகளையும் பதிவு செய்தார்கள்.

இதையறிந்த சர் ஆலன் புரூக் ஆச்சரியப்பட்டார். இவருக்கு இரத்த அழுத்தம் அதிகமாகி 1963ம் ஆண்டில் இறந்தார். இவர் உடலை வைத்திருந்த சவப்பெட்டியை கல்லறை மைதானம் வரைக்கும் தூக்கிச் செல்கிறோம் என்று அந்த வயதான பெண்மணிகள் கூறினார்கள். அதற்கு சர் ஆலன் புரூக்கின் பிள்ளைகள் ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு சவப் பெட்டியை தூக்கி சவ ஊர்வல வண்டியில் வைப்பதற்கு அந்தப் பெண்மணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. இனிமையான சொற்கள் ஒருவரை சமூகத்தில் விரும்பத் தக்கவராக மாற்றிவிடுகிறது என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. மேலும் காசு பணம் கொடுத்து வாங்க முடியாத அபிமானத்தை, அன்பான, இனிமையான சொற்கள் பெற்றுத் தருகின்றன என்பதையும் இந்த சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

இதனால் தான் அல்லாஹ் திருமறையில் அழகானதைப் பேசுங்கள் என்று கூறியிருக்கிறான்.

**“மனிதர்களிடம் அழகானதைப் பேசுங்கள்.”**

- அல்குர்ஆன் (2 : 83)

“முஹம்மதே! அழகிய வற்றையே பேசுமாறு எனது அடியார்களுக்கு கூறுவீராக! ஷைத்தான் அவர்களிடையே பிளவை ஏற்படுத்துவான். ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்க எதிரியாவான்.”

- அல்குர்ஆன் (17 : 53)

இனிமையாகப் பேசுவதும் ஒரு தர்மம் என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுறுத்தி யிருக்கிறார்கள்.

“இன்சொல்லும் ஒரு தர்மமாகும்” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் புகாரி : 2989)

பஞ்சபாண்டவர்களான தர்மர் (யுதிஷ்டிரர்), பீமன், அர்ச்சுனன், நகுலன், சகா தேவன் ஆகியோர் ஒரு நாள் மதிய வேளையில் உணவு உண்ணும்போது ஓர் ஏழை வந்து, “எனக்கு பசிக்கிறது. பிச்சைபோடுங்கள்” என்று கேட் டார். உடனே தர்மர் இடது கையால் அந்த ஏழைக்கு உணவளித்தார். அப்போது அந்த ஏழை “ஐயா! நீங்கள் உணவு உண்ணும்போது நான் வந்து உங்களுக்கு தொந்தரவு கொடுத்துவிட்டேன். என்னை மன்னியுங்கள்” என்றார். அதற்கு தர்மர், “தம்பி! நீயும், நானும் ஒரே தாய் வயிற்றில் பிறக்காவிட்டாலும் நீ என்


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)**
அல்லாமா “அஸ்அதுல் மில்லத்”
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)**

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

**அலுவலக அலைபேசி எண் :**
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

**ஓராண்டு சந்தா ரூ.300/-**
**தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ**
**தொகை செலுத்துபவர்களுக்கு :**
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
**M.MOHAMED ISMAIL**
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**
**M/s. INDIAN OVERSEAS BANK,**
**Madurai Meenakshi College Branch,**
**M.MOHAMED ISMAIL**
**S.B. A/c No. 175701000003467**
**IFSC Code : IOBA0001757**

Google Pay Name : QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

சகோதரன்தான். நீ வந்து எங்களுக்கு தொந்தரவு கொடுக்கவில்லை. உனக்கு உணவளிப்பதால் எனக்கு புண்ணியம் கிடைக்கும். இந்த புண்ணியத்தை எனக்கு சம்பாதித்து கொடுக்கவே நீ இங்கு வந்திருக்கிறாய். உனக்கு எவ்வளவு உணவு வேண்டும் என்றாலும் கேள். நான் தருகிறேன். உனக்கு பசித்தால் நீ எப்போது வேண்டுமானாலும் என்னிடம் வரலாம். உனக்கு என்ன உணவு தேவையோ அதை நான் உனக்கு சமைத்து தருகிறேன்" என்று தர்மர் கூறினார். அந்த ஏழை அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்.

"அண்ணா! இடது கையால் அன்னதானம் செய்வது தவறு அல்லவா? அந்த தர்மத்தின் புண்ணியம் உங்களை சேராமல் போய்விடும்" என்று தர்மரிடம் அவருடைய தம்பி பீமன் கூறினான். "நான் உணவை உண்டு முடிக்கும் வரை அந்த ஏழையை பசியோடு காக்க வைப்பது பாவமல்லவா? இந்த புண்ணியம் என்னை சேராமல் போனால் போகட்டும். ஆனால் அந்த ஏழையின் பசியை தீர்ப்பது தான் முக்கியம். அன்னதானத்திற்கான புண்ணியம் எனக்கு கிடைக்காமல் போனாலும் அந்த ஏழையிடம் அன்பாகப் பேசி அவரின் மனத்தை குளிர வைத்திருக்கிறேன். அந்த புண்ணியம்எனக்கு கிடைக்கும்" என்று தர்மர் கூறினார்.

"பேரீச்சம்பழத்தின் ஒரு துண்டை தர்மம் செய்தேனும் நரகத்திலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதுவும் இல்லையானால் இன் சொல்லைக் கொண்டாவது (காப்பாற்றிக் கொள்ளுங்கள்)" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

அறிவிப்பவர்: ஹள்ரத் அதீ பின் ஹாத்திம் (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் புகாரி : 6023)

கனிவான இனிய சொற்களை சொல்ல வேண்டும் என்று அல்லாஹ் திருமறையில் வலியுறுத்துகிறான்.

**"கனிவான இனிய சொற்களும், மன்னித்தலும்; தர்மம் செய்த பின் தொடர்ந்து தொல்லை கொடுப்பதை விட மேலானவையாகும்; தவிர அல்லாஹ் [எவரிடத்திலும், எவ்விதத்] தேவையுமில்லாதவன்; மிக்க பொறுமையாளன்."**

- அல்குர்ஆன் (2 : 263)

அழகானதைப் பேச வேண்டும். இனிய சொற்களை பேச வேண்டும் என்று இஸ்லாம் இந்த உலகத்தாருக்கு எடுத்துக் கூறுகிறது. இனிப்பை உணரும் சுவை அரும்புகள் நாக்கின் நுனிப்பகுதியில் உள்ளன. கசப்புச் சுவையை அறியும் சுவை அரும்புகள் நாக்கின்

கடைசி தொண்டைப் பகுதியில் உள்ளன என்று மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். மனிதர்கள் எப்போதும் இனிமையாக பேச வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் இனிப்பை உணரும் சுவை அரும்புகளை நாக்கின் நுனிப் பகுதியில் வைத்திருக்கிறான் என்றே சொல்லவேண்டும்.

ஒருமுறை ஒரு பண்டிதரும், ஓர் இசைக் கலைஞரும், ஒரு மருத்துவரும் ஆற்றை கடப்பதற்காக ஒரு தோணியில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது பண்டிதர் தோணி ஓட்டுப வரை பார்த்து, "நீ இதுவரை எத்தனை நூல்களை படித்திருக்கிறாய்" என்று கேட்டார். "எனக்கு எழுத படிக்கத் தெரியாது" என்று தோணி ஓட்டுபவர் சொன்னதும், "நீ பெரிய முட்டாள். உன் வாழ்க்கை வீணாகி விட்டது" என்று பண்டிதர் கூறினார். "உனக்கு இசையைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று தோணி ஓட்டுபவரை இசைக் கலைஞர் கேட்டார். "எனக்கு இசையைப் பற்றி எதுவும் தெரியாது" என்று தோணி ஓட்டுபவர் கூற, "நீ பெரிய முட்டாள். உன் வாழ்க்கை வீணாகி விட்டது" என்று இசைக் கலைஞர் கூறினார். "தலைவலி, காய்ச்சல் போன்று ஏதாவது உபாதைகள் வந்தால் அவற்றிற்கு என்ன மருந்துகள் சாப்பிட வேண்டும் என்று உனக்கு தெரியுமா?" என்று தோணி ஓட்டுபவரை மருத்துவர் கேட்டார். "எனக்கு தெரியாது" என்று தோணி ஓட்டுபவர் கூற, "நீ பெரிய முட்டாள். உன் வாழ்க்கை வீணாகி விட்டது" என்று மருத்துவர் கூறினார். அப்போது திடீரென்று ஆற்றில் பெரு வெள்ளம் வந்து தோணி ஆட ஆரம்பித்தது. "உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்று அந்த மூவரையும் பார்த்து தோணி ஓட்டுபவர் கேட்டார். "எங்களுக்கு நீந்தத் தெரியாது" என்று அந்த மூவரும் கூறினர். "வெள்ளம் ஆற்றில் அதிகமாகி வருவதால் தோணி கவிழப் போகிறது. எனக்கு நீந்தத் தெரியும். நான் தப்பித்து விடுவேன். ஆனால் நீந்தத் தெரியாத உங்கள் மூவரின் வாழ்க்கையும் வெள்ளத்தில் வீணாகப் போகிறது" என்று கூறி தோணி ஓட்டுபவர் நீரில் குதித்தார். உடனே அந்த மூவரும், "எங்களை மன்னித்து விடு தோணிக்காரரே! நாங்கள் ஏதேதோ பேசி விட்டோம். எங்களை காப்பாற்று" என்று அந்த மூவரும் கெஞ்சினர். தோணிக்காரர் அந்த மூவரையும் தன்னுடைய முதுகில் சுமந்தவண்ணம் வெள்ளத்தில் நீந்தி அவர்களை கரை சேர்த்துவிட்டார். அந்த மூவருக்

எங்கள் நோக்கம் எல்லா புகழும் இறைவனுக்கே உங்கள் மனநிறைவு

**மீரா டாக்குமெண்டேஷன் & லா அசோசியேட்ஸ்**

சட்ட ஆலோசனைகள் வழங்கி பத்திர பதிவிற்கு தேவையான அனைத்து விதமான ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து தரப்படும்.

**M.ஷேக் பரீத் அலீ, M.Com.,M.L., அட்வகேட்,**



100, சார்பதிவாளர் அலுவலக தெரு, அரவக்குறிச்சி – 639201. கரூர் Dt.

9940787789 / 04320-231789

எங்கள் இதர நிறுவனம் :

**மீரா இன்ஃபோநெட் இ-சேவை மையம்**

அனைத்து விதமான ஆன்லைன் சேவைகளும் செய்து தரப்படும்

100/2, S.R.O. தெரு, அரவக்குறிச்சி.

9843062785 / 8148148177

**MEERA DIGITAL HUB மீரா டிஜிட்டல் ஹப்**



அனைத்து விதமான கம்ப்யூட்டர், லேப்டாப், பிரிண்டர்ஸ், மொபைல் போன், CCTV கேமரா அனைத்தும் குறைந்த விலையில் கிடைக்கும்.



72, A.R.S. பில்டிங், கரூர் மெயின் ரோடு, அரவக்குறிச்சி.

8248522455 / 9080360049

shabnamsilks@ymail.com www.facebook/shabnamsilk.com

**Shabnam**

**SILKS & READYMADE**

**No.74, J.N.STREET, PUDUCHERRY - 1.**

**Ph : 0413-2222600, 2333600**

**Sagar Foot Wear**



**269, M.G.ROAD, PUDUCHERRY - 1.**

**Ph : 0413-2344600**

கும் தெரியாத நீச்சல் தோணிக்காரருக்கு தெரிந்திருந்தது. ஆகவே ஒருவருக்கு ஒரு விஷயம் தெரியவில்லை என்றால் அவர்களை மட்டம் தட்டி பேசக்கூடாது. அவருக்கு ஒரு விஷயம் தெரியாமல் இருந்தாலும் அவருக்கு இன்னொரு விஷயம் தெரிந்திருக்கும்.

ஆகவே எப்போதும் நாம் நல்லதைப் பேச வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் [ ஒன்று] நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்.**

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் (ஸஹீஹ் புகாரி 6018)

**“நான் நபி [ஸல்] அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! உங்களை நான் கண்டால் எனது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. எனது கண் குளிர்ச்சியடைகிறது. எனக்கு அனைத்து பொருட்களைப் பற்றியும் சொல்லுங்கள்” என்றேன். அதற்கு அவர்கள் “அனைத்தும் நீரிலிருந்து படைக்கப்பட்டுள்ளன” என்று கூறினார்கள். “எந்த காரியத்தை நான் செய்தால் சொர்க்கத்திற்குச் செல்வேனோ அப்படிப்பட்ட ஒரு காரியத்தை எனக்கு கற்றுக் கொடுங்கள்” என்று கூறினேன். “சலாமைப் பரப்பு. நல்ல பேச்சைப் பேசு. உறவுகளை இணைத்து வாழ். மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்கு. சாந்தியுடன் சொர்க்கத்தில் நுழைவாய்” என்று கூறினார்கள்.**

அறிவிப்பவர்: ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மத் 9996)

நல்ல பேச்சைப் பேசு, உறவுகளை இணைத்து வாழ் என்று நபி (ஸல்) அவர்கள்கூறிய அறிவுரையின் படி நல்லதை பேசினால் தான் உறவுகள் நம்மோடு இணைந்திருக்கும். உறவுகள் நம்மோடு இணைந்திருப்பது நமக்கு இருக்கும் பலமாகும். நல்லதை பேசத் தவறினால் உறவுகள் நம்மை விட்டு தூரமாகிவிடும். நல்லதை பேசாதவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். சிங்கம் சிங்கிளாகத்தான் வரும் என்று மனிதர்களும் சிங்கிளாக வாழ முடியாது. மரணித்தால் தூக்கிச் செல்வதற்கு குறைந்த பட்சம் நாலு பேர்களாவது வேண்டும். நல்லதை பேசுகின்றபோது நம்மைச் சுற்றி நல்லவர்களின் வட்டம் பெருகும். நெருக்கடி ஏதும் ஏற்படும்போது அந்த நல்லவர்

களின் ஆதரவு கிடைக்கும். அவர்களின் ஆலோசனைகள் கிடைக்கும். நல்லவர்களின் வட்டத்தில் இல்லாத இளைஞர் களுக்கு திருமணத்திற்கு பெண் கொடுக்க தயங்குகிறார் கள் என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இதனால் தான் 2700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹிராக்ளிடஸ் என்று கிரேக்க தத்துவஞானி இளைஞர் கள் எப்போதும் நல்லது செய் யும் கூட்டத்தில் காணப்பட வேண்டும் என்று கூறினார்.

ஏறத்தாழ 2500 ஆண்டு களுக்கு முன் கன்பூசியஸ் என்ற தத்துவ ஞானி சைனா வில் இருந்தார். ஒரு நாள் இவர் தன்னுடைய சீடர்களுடன் வெளியே போய்க் கொண்டிருக் கும் போது ஒருவன் இவரைப் பார்த்து கேலி செய்தான். ஆனால் அவர் ஒன்றும் பேசாமல் அமைதியாக சென்று கொண்டிருந்தார். அப்போது அவருடைய சீடன் ஒருவன் "என்ன ஐயா! அவன் கேலி செய்கிறான். நீங்கள் ஒன்றும் பேசாமல் போய் கொண்டிருக் கிறீர்கள்" என்று கேட்டான். அதற்கும் அவர் பதில் பேசா மல் சென்று கொண்டிருந்தார். ஒரு பழத்தோட்டத்திற்கு வந்த தும் ஒர் அழுகிப்போன பழத்தை எடுத்து அவர் அந்த சீடனிடம் கொடுத்து தின்னச் சொன்னார். "ஐயா! இது அழுகிப் போன பழம். இதை தின்றால் என் ஆரோக்கியம் பாழாகிவிடும்" என்று கூறினான்.

"என்னை ஒருவன் கேலி செய்தானே அவனுடைய வார்த்தைகளும் அழுகிப்போன பழம் போன்றவை. அழுகிப் போன பழத்தை தின்றால் உடல் ஆரோக்கியம் கெடுவது போல் அவனுடைய கேலி வார்த்தைகளை காதில்போட்டுக் கொண்டால் நம்முடைய மன ஆரோக்கியம் கெட்டுவிடும். எனவே நம்மை எதிர்கொள்ளும் அனைவரின் சொற்களையும் நாம் ஏற்க வேண்டும் என்ற கட் டாயம் இல்லை. எது நமக்கு நன்மை தருமோ எது நம் வாழ்விற்கு வளம் சேர்க்குமோ அதை மட்டும் ஏற்றால் போதும். நம்முடைய வாழ்வு நலமாக மாறும். இதைப் போல் நீயும் மற்றவர்களை கேலி செய்யா மல் நல்ல வார்த்தைகளை கொண்டு பேசு. உன் வாழ்க்கை உன்னதமாகும்" என்று கன்பூசியஸ் கூறினார்.

"நல்லதை பேசுவது என்பது நேர்மறையான விஷயங் களை பேசுவதாகவும் அர்த்தம் கொள்ளலாம். நல்லதைப் பேசும்போது நேர்மறை எண்ணங்கள் உருவாகும். நல்ல செயல்களை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் தூண்டப்படும். நாம் பேசுவது நமக்கும், அடுத்த வருக்கும் நல்லதாக இருந்தால்

நாம் ஒரு நல்ல ஆளுமைத் திறன் உள்ளவராக வளர்ந்து விடுவோம் என்று மென்திறன் பயிற்சியாளர் கிறிஸ்டினா பெனெடிக் எழுதிய சிறந்த ஆளுமைக்கான வழிகள் (Ways to greater personality) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். வளரும் குழந்தைகளிடம் நேர்மறையான எண்ணங்கள் உருவாவதற்கு அவர்களிடம் நேர்மறையான விஷயங்களை பேச வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (United Nations Children's Fund) என்ற நிறுவனம் கூறுகிறது. ஆகவே நபி (ஸல்) அவர்களைப் பற்றியும், அவர்களின் வாழ்க்கை துணைவியர்களான அன்னை ஹள்ரத் கதீஜா நாச்சியார் (ரளி), அன்னை ஹள்ரத் ஆயிஷா நாச்சியார் (ரளி) மற்றும் அவர்களின் அன்பு மகளார் ஃபாத்திமா நாச்சியார் (ரளி) இன்னும் நபி (ஸல்) அவர்களின் தோளோடு தோள் நின்ற அற்புதமான ஸஹாபாக்கள் ஆகியோரைப் பற்றியும் வளரும் குழந்தைகளிடம் எடுத்துக் கூறும்போது அவர்களின் மனதில் நேர்மறை எண்ணங்கள் உருவாக வழி வகுக்கும். "நேர்மறை எண்ணங்களை கொண்டவர்கள் வாழ்க்கை பாதையில் தவறுவதில்லை" என்று உளவியல்நிபுணர் டாக்டர் அகஸ்டஸ் சோபிரிக் கூறியுள்ளார். "சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு போனால் குற்றவாளிகளை தண்டிக்க முடியுமே தவிர நிரபராதிகளை உருவாக்க முடியாது. ஆகவே மக்களிடம் நேர்மறை எண்ணங்கள் உருவாவதற்கு வழி வகை செய்யுங்கள்" என்று இங்கிலாந்து நாட்டின் உச்ச நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி எட்வர்ட் டௌக்ளாஸ் கூறியுள்ளார்.

நல்லதை பேசுவதனாலும், பிறப்பு உறுப்பை ஒழுங்கீனத்திலிருந்து பாதுகாத்து கொள்வதனாலும் நமக்கு சொர்க்கத்திற்கு உத்தரவாதம் அளிப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"தம் இரண்டு தாடைகளுக்கு இடையே உள்ளதற்கும், தம் இரண்டு கால்களுக்கு இடையே உள்ளதற்கும் என்னிடம் உத்தரவாதம் அளிப்பவருக்கு நான் சொர்க்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறேன்" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் சஹ்ல் பின் சஅத் (ரளி) அவர்கள்
(நூல் : ஸஹீஹ் புகாரி - 6474)

அடுத்தபடியாக இஸ்லாம் அன்பாகப் பேச வேண்டும் என்று எடுத்துரைக்கிறது. அன்பான வார்த்தைகள் பேசுவதனால் அல்லாஹ் நம்முடைய தகுதிகளை உயர்த்தி விடுகிறான் என்றும், அதே நேரத்தில் கோபமான வார்த்தை

41 ஆண்டுகள் ஒழுக்கத்துடன் கூடிய சீரிய கல்விப்பணியில் ...

# அல்–அமீன் பொறியியல் கல்லூரி

(தன்னாட்சி அந்தஸ்து – AUTONOMOUS)

கருந்தேவன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி (Po). ஈரோடு - 638 104.

[ APPROVED BY AICTE, NEW DELHI, AFFILIATED TO ANNA UNIVERSITY, CHENNAI
Run By : AL-AMEEN EDUCATIONAL AND CHARITABLE TRUST ]

Mobile - 96777 61786

2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கு முதலாம் ஆண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு அட்மிஷன் நடைபெறுகிறது.

**TNEA - 2652**

**B.E.,** CSE | MECH | EEE | ECE **B.Tech.,** IT | AI&DS

**M.E.,** CSE | Industrial Safety Engineering

**MBA** Master of Business Administration [2 Years] **Ph.D.,** ECE

**சிறப்பம்சங்கள்**

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், சிறந்த உட்கட்டமைப்புகள் மற்றும் ஆய்வகங்கள்.
- மத்திய அரசு வழங்கும் சிறுபான்மையினர் நல கல்வி உதவித்தொகை பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்படும்.
- கல்லூரி பள்ளிவாசலில் ஐவேளை தொழுகை, ஜும்ஆ தொழுகை, ரமலான் மாதங்களில் சஹர், இப்தார் வசதி, தராவீஹ் தொழுகை. பாதுகாப்பான தனித்தனி விடுதி வசதிகள் உண்டு.

உலமாக்கள், முஅத்தீன்கள், விதவைகள், கடைகளில் பணிபுரிபவர்கள், எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் ஏழைத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இக்கல்லூரியில் தங்கி பயில்வதற்கு நிர்வாகத்தினரால் கீழ்க்கண்ட சிறப்புக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஒரு வருடத்திற்கு கல்லூரி கட்டணம், விடுதி & உணவு கட்டணம் உட்பட**
**மாதம் ரூ. 6,000 X 12 மாதங்கள் = ரூ. 72,000/=**

Campus Interview மூலம் கல்லூரியில் வேலைவாய்ப்பு வழங்கிய நிறுவனங்களில் சில...

HEXAWARE | DeltaX | MALLOW | ZUCI SYSTEMS | mitsogo | SANMINA | propel | BLITZWORKS | YAMAHA | FOXCONN



அட்மிஷன் தொடர்புக்கு : **98420 22458, 82485 63630**

கள் ஒருவரை நரகத்தில் தள்ளி விடும் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஓர் அடியார் அல்லாஹ்வின் அன்புக்குரிய ஒரு வார்த்தையை சர்வசாதாரணமாக [அதன் பலனைப் பற்றிப் பெரிதாக யோசிக்காமல்] பேசுகிறார். அதன் காரணமாக அவருடைய தகுதிகளை அல்லாஹ் உயர்த்திவிடுகிறான். ஓர் அடியார் அல்லாஹ்வின் கோபத்திற்குரிய ஒரு வார்த்தையை சர்வசாதாரணமாக [அதன் பின்விளைவைப் பற்றி யோசிக்காமல்] பேசுகிறார். அதன் காரணமாக அவர் நரகத்தில் போய் விழுகிறார்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (ஸஹீஹ் புகாரி : 6478)

முகஸ்துதி இஸ்லாத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. துதி என்றால் ஒருவரை அளவுக்கு அதிகமாக புகழ்வதாகும். முகத்துக்கு நேராக இந்த துதியை செய்வதால் இது முகஸ்துதி என்று அழைக்கப்படுகிறது. ஒருவரை அவருடைய தகுதிக்கு மீறி புகழ்வதே முகஸ்துதியாகும்.

முகஸ்துதி செய்பவர்களைப் பற்றி மறைந்த முன்னாள் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு பொது கூட்டத்தில் ஒரு சிறிய கதையை கூறினார் : "ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் சில குரங்குகள் இருந்தன. அந்த ஆற்றில் ஒரு பெரிய முதலை இருந்தது. குரங்குகளின் குடல், ஈரல், இதயம் ஆகியவை மிகவும் ருசியாக இருக்கும் என்று முதலைக்கு தெரிய வந்தது. ஆகவே அந்த மரத்திலுள்ள குரங்கு ஒன்றை சாப்பிட வேண்டும் என்று அதற்கு ஆசை பிறந்தது. ஒரு நாள் இளம் வயதுள்ள ஒரு பெண் குரங்கு மரக்கிளையில் உட்கார்ந்து இருப்பதைக் கண்ட முதலை அந்த குரங்கிடம் தங்கச்சி "நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்" என்று கூறியது. "நிஜமாவா? நான் அவ்வளவு அழகாக இருக்கிறேனா?" என்று அந்த குரங்கு கேட்டது.

"ஆமாம் தங்கச்சி. உலகத்திலேயே நீ தான் பேரழகி. உனக்கு இணையான அழகி இந்த உலகத்திலேயே இல்லை!" என்று முதலை புகழ்ந்து கூறியதும் அந்த முகஸ்துதியில் அந்தக் குரங்கு மயங்கிவிட்டது.

"உன் அழகில் மயங்கிய நான் உன்னை திருமணம் செய்துகொள்ளலாம் என்று ஆசைப்பட்டேன். ஆனால் நீயோ நிலத்தில் வாழ்கிறாய். நானோ நீரில் வாழ்கிறேன்.நம் இருவருக்கும் சரிவராது. அத

ணால் இந்த ஆற்றுக்கு அடுத்த கரையில் இருக்கும் இராஜ குமாரனுக்கு உன்னை மண முடித்து வைக்கிறேன்" என்று முதலை கூறியது. "முதலை அண்ணா! இராஜகுமாரன் என்னை திருமணம் செய்து கொள்வானா?" என்று குரங்கு கேட்டது. "தங்கச்சி! உன் னுடைய பேரழகை கண்டதும் அவன் மயங்கி உன்னை உடனே திருமணம் செய்து கொள்வான். நீ என் முதுகில் உட்கார்ந்து கொள். ஆற்றுக்கு அடுத்த கரையில் இருக்கும் இராஜ குமாரனிடம் உன்னை கூட்டிச் செல்கிறேன்" என்று முதலை கூறியது. குரங்கு முதலையின் முதுகில் அமர்ந்து கொள்ள முதலை நடு ஆற்றுக்கு வந்த தும் "குரங்கே! உன்னை தின்ப தற்கே நான் உன்னை இங்கே கூட்டி வந்தேன்" என்று முதலை கூறியது. சமயோசித புத்தியுள்ள குரங்கு "ஐயோ! முதலை அண்ணா! இதை ஏன் முதலிலேயே என்னிடம் சொல்ல வில்லை? என்னுடைய குடல், ஈரல், இதயம் ஆகிய எல்லா வற்றையும் மரக்கிளையில் தொங்க விட்டிருக்கிறேன்; என்னை நீ கரைக்கு கூட்டிச் செல். நான் உனக்கு என்னுடைய குடல், ஈரல், இதயம் எல்லா வற்றையும் தருகிறேன். என் தந்தை, அம்மா, அண்ணன், தம்பி ஆகியோரின் குடல், ஈரல், இதயம் ஆகியவற்றையும் தருகிறேன்" என்று குரங்கு சொன்னதும் முதலை குரங்கை கரைக்கு கூட்டி வந்தது. கரைக்கு வந்த தும் குரங்கு மரத்தில் ஏறிக் கொண்டு "நயவஞ்சகா! நீ என்னை ஏமாற்றி தின்னப் பார்த்தாயா? என்னுடைய குடல்,ஈரல்,இதயம் ஆகிய எல்லா வற்றை யும் நான் தருகிறேன் என்று நான் சொன்னதெல்லாம் பொய். இங்கிருந்து ஓடிப் போய் விடு" என்று குரங்கு கூறியது. "தங்கச்சி! நீ என்னை மன்னித்து விடு" என்று சொல்லி முதலை அழுதது. முதலை கண்ணீரை நம்ப வேண்டாம் என்று சொல் வார்கள். நீ இங்கிருந்து போய் விடு என்று குரங்கு கூறியது. முகஸ்துதி செய்கிறவர்கள் முதலை மாதிரி.

அவர்கள் நம்மை தின்னப் பார்ப்பார்கள். அப்புறம் அவர்களும் முதலை கண்ணீர் வடிப்பார்கள். எல்லோருக்கும் சமயோசித புத்தி இருக்கும் என்று சொல்ல முடியாது.

ஆகவே முகஸ்துதி செய்கிறவர்களை விட்டு தூரமாக இருக்க வேண்டும் என்று நாவலர் நெடுஞ்செழியன் எடுத்துரைத்தார்.

முகஸ்துதி என்பது ஒருவரை மிதமிஞ்சி புகழ்வதா கும். முகஸ்துதி என்பது வேறு; பாராட்டுதல் என்பது வேறு.

பாராட்டுதல் என்பது மரியாதைக்குரிய, புகழ்ச்சியை

உள்ளடக்கிய வார்த்தைகளாகும். மற்றவர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதே பாராட்டுவதன் நோக்கமாகும். ஆனால் சுயநல இலாபங்களுக்காக மற்றவர்களை வரம்பு மீறிப் புகழ்ந்து அவர்களை கைப் பொம்மையாக்க முயல்வது தான் முகஸ்துதி என்று டபிள்யூ. பி. பில்லஸ்பரி என்ற உளவியல் நிபுணர் அவர்கள் எழுதியிருக்கும் உளவியலின் அத்தியாவசியங்கள் (Essentials of Psychology) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவரின்சரியானசெயலை மதிப்பிட்டு அதனுடைய நேர்மறையான தன்மையின் பிரதிபலிப்பை ஒப்புக்கொள்ளும் வடிவம்தான் பாராட்டு என்று யாக்கிரைசிகூன்என்றஉளவியல் நிபுணர் தான் எழுதி யிருக்கும் "வெற்றியின் உளவியல்" "The Psychology of Success" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாராட்டுஎன்பதுஒருவரின் உறவையும், நட்பையும் மறைமுகமாக அங்கீகரிப்பதாகும். பாராட்டுகள் நேர்மையாக இதயத்திலிருந்து பேசப்படுகின்றன என்று ராபர்ட் பர்ட்டன் என்ற உளவியல்நிபுணர் அவர் எழுதியிருக்கும் மனச்சோர்வின் உடற்கூறியல் (Anatomy of Melancholy) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக நாம் ஒருவர் வீட்டிற்கு விருந்துக்கு செல்கிறோம். விருந்து உண்டு முடித்தபின் உணவுகள் பிரமாதமாக இருந்தன என்று பாராட்டுகிறோம். இந்தப் பாராட்டு அவருடைய நல்லுறவை அங்கீகரித்து நம்முடைய இதயத்தின் அடித்தளத் தில் இருந்து வெளிவரும் கருத்து வெளிப்பாடாகும். இதைப் போல் கணவன் மனைவிக்கு ஒரு சேலையை வாங்கி வருகிறான்.

அந்தச் சேலை பிடிக்காவிட்டாலும் மனைவி நன்றாக இருக்கிறது என்று கூறுகிறாள். இந்தப் பாராட்டு அவளுடைய கணவன் மனைவி நல்லுறவை அங்கீகரித்து அவளுடைய இதயத்தின் அடித்தளத்தில் இருந்து வெளிவரும் கருத்து வெளிப்பாடாகும். (தொடரும்)

## நாவை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்க!

நான் உறுதியாக கடைப்பிடிக்கும் படியான ஒரு செயலை எனக்குச் சொல்லித் தாருங்கள்'' என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன், தமது நாவைக்காட்டி, இதை உமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வீராக" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் ஹாரிஸிப்னு ஹிஷாம் (ரளி) அவர்கள்

(நூல் : தப்ரானி)

# காக்கை

நமது பாவா ஆதம் (அலை) அவர்களின் பிள்ளைகளுக்குள் சண்டை ஏற்பட்டு தன்னுடைய சகோதரரை கொலை செய்து விடுகிறார்.

ஆனால், எப்படி புதைப்பது என்று தெரியாமல் தவித்த போது,

"மண்ணைத் தோண்டி புதைக்க வேண்டும் என்பதை காக்கை மூலம் அல்லாஹ் கற்றுக் கொடுத்தான்".

நல்லெண்ணத்தில் நடமாடிய காக்கைகள் இப்போது நம்மை பார்த்து கெட்டுப் போய் விட்டது.

## முன்பெல்லாம்

ஒரு உணவு கிடைத்துவிட்டால் மற்ற சகாக்களை அழைத்து உபசரிக்கும் காக்கைகள், இப்போது மற்ற காக்கைகள் வந்தால் கடும் எதிர்ப்பு தெரிவித்து விரட்டும் கொடுமை தொடர்கிறது.

## பாட்டி சுட்ட வடை

"பாட்டி வடை சுட்டு வைத்திருப்பாள், காக்கை தூக்கி கொண்டு போகும்; உடனே நரி தந்திரத்துடன், 'காக்கா நீ அழகா இருக்கே! ஒரு பாட்டுப் பாடு!" என்று சொல்லும். உடனே காக்கா "கத்தும்! வடை கீழே விழுந்து விடும்" என சிறு குழந்தைகளுக்கு கதை சொன்னோம். ஆனால் இப்போதுள்ள காக்கைகள் புத்திசாலித்தனமாக எடுத்த வடையை காலில் வைத்துக்கொண்டு தான் கத்தவே ஆரம்பிக்கின்றன.

*"காக்கைகள் இப்படி விவரமானதும் நம்மை பார்த்துத்தான்!"*

*"ஒன்னா இருக்க கத்துக்கணும் அந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும் காக்கா கூட்டத்தைப் பாருங்க! அதற்கு கற்றுக் கொடுத்தது யாருங்க?"*

என்ற பாட்டின் வரி ஒற்றுமையை வலியுறுத்துகிறது. அப்படிபட்ட காக்கைகள் இப்படி ஆகிவிட்டதே!"

## மாடுகள்

மாடுகள் கூட மனசுக்குள் சிரிக்கிறது. என்ன இவன் நம்மைவிட மோசமான ஆசாமியாக இருக்கிறான் என்று எண்ணுமளவிற்கு மிருகத்தை மிஞ்சும் குணம் நம்மிடத்தில் மிகைத்துவிட்டது.

## பச்சோந்தி

நிறம் மாறுவதிலும், நிலை மாறுவதிலும், தடுமாறுவதிலும் பச்சோந்திகள், மனிதர்களிடம் படுதோல்வியை தழு

விட்டது. அந்த அளவு மனித குணம் குப்பையில் கிடக்கிறது.

## நாய்

நாய் நன்றியுள்ள பிராணி. அதுகூட நன்றியில்லா மனிதர்களைப் பார்த்து நகைக்கிறது! இல்லை திகைக்கிறது. நாய் கடிப்பதற்குகூட காரணம் இதுவாகத்தான் இருக்குமோ?

*நன்றியில்லாத மனிதா நீ நடமாடாதே! இல்லை, நாடக மாடாதே! என எச்சரிக்கும் வகையில் தான் நாயும் கடிக்கிறதோ!*

## எருமை மாடு

எருமை மாடு, என இலேசாக சொல்லி விடுகிறோம், ஆனால் அந்த எருமை மாடுதான் கட்டியான பால் தருகிறது.

## கோழி

நமது எச்சிலை கழிவுகளை கோழி உண்டுவிட்டு நமக்கு திடமான சக்திமிக்க முட்டை தருகிறது. ஆனால் சக்தியான உணவை சாப்பிடும் நாம் என்ன தருகிறோம்?

## காண்டா மிருகம்

காண்டா மிருகம் என்று திட்டுகிறோம். ஆனால் அந்த மிருகத்தின் தோல்களைக் கொண்டுதான் குண்டு துளைக்காத ஆடை தயாரிக்கப் படுகிறது. இதை மாட்டிக் கொண்டு ஏதோ தன்னை பெரிய மனிதர்களாக காட்டிக் கொள்கிறான் மனிதன். மனிதன் தன்னை சிந்தித்துப் பார்த்தால் பூஜ்ஜியம் தான் மிஞ்சும். கூட்டி கழித்துப் பார்த்தால் மனிதனிடம் ஒன்றுமே இல்லை! ஆனால், நற்செயல் மூலமே மனிதன் உயர்வடைகிறான் என்பதை மனிதன் புரிந்து செயல்பட வேண்டும்!

---

## இஸ்லாம் எனும் ஒளியை ஏற்றவரின் நிலை!

ஓர் அடியார் இஸ்லாத்தைத் தழுவி, அவரது இஸ்லாம் (அகத்திலும் புறத்திலும்) அழகு பெற்றுவிட்டால், அவர் அதற்குமுன் செய்த அனைத்துத் தீமைகளையும் அல்லாஹ் மாய்த்து விடுகின்றான்.

அதற்குப் பின்னர் (அவர் செய்யும் நன்மை, தீமைகள்) நிகருக்கு நிகராக இருக்கும். (நன்மை செய்தால் நன்மையும் தீமை செய்தால் தீமையும் கிடைக்கும். அதிலும்) ஒரு நன்மைக்கு அதுபோன்ற பத்துமுதல் எழுநூறு மடங்கு நன்மைகள் கிடைக்கும். (ஆனால்,) ஒரு பாவத்திற்கு அதைப் போன்ற ஒன்றே (தண்டனையாகக்) கிடைக்கும். அதையும் அல்லாஹ் மன்னித்துவிட்டால் (எந்தத் தண்டனையும்) கிடையாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

# துஆ மஜ்லிஸ்

## நல்லோர்கள் ஆட்சியில் அமர...

நம் நாடும், நம் நாட்டிலுள்ள மக்களும் பிரிவினையின்றி ஒற்றுமையுடன் வாழவும், நல்லோர்கள் ஆட்சியில் அமர்ந்து நல்லாட்சி செய்திடவும் துஆ செய்யுமாறு வேண்டுகிறோம்.

**- குர்ஆனின் குரல் வாசக நேயர்கள்.**

ஹாஜி சி.எஸ்.ஜாபர் அலீ - திருப்பூர்; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் - மங்கலம்; அஃப்ரிதா ஜன்னத், ஆரிஃப் - கனடா; சிராஜுதீன், மினல் மெஹ்ராஜ், சல்மான் - சென்னை; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; அ.ஜெய்புனிஷா - திருச்சி; சந்தா எண் : F595 - திருச்சி; அ.ஹக்கீமுல்லாஹ் - திருச்சி; ரேஷ்மா - திருச்சி; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; சாகுல் பழக் கமிஷன் கடை - பழனி; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; என்.மும்தாஜ் - தஞ்சாவூர்; எஸ்.நூருன்னிஷா - தஞ்சாவூர்; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; அ.ஹாஜரா - கர்நாடகா; ஆ.சப்ரின் - பெங்களூரு; அ.சம்சாத் - பெங்களூரு; சந்தா எண் : 1262 - கர்நாடகா; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; கே.முஹம்மது ஹனிபா, காதர் கான், முஹம்மது அஜ்வத்துல்லாஹ் - தாராபுரம்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; அ.ராபியத் பசரியா - மூணார்; ஆஷிக் - திருச்சி; நியாமத் - பெரியகலையம்புத்தூர்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; சாரா பானு - திருச்சி; ஆயிஷா பர்கத் - மங்கலம்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை;

ரஹ்மத்துல்லாஹ் - பழனி; தீன் முஹம்மது - பழனி; எஸ்.ஹசன் பானு - தஞ்சாவூர்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; மெகராஜ் - மடத்துக்குளம்; ரஹ்மத்துல்லாஹ் பாத்திமா - பழனி; பீவி - தஞ்சாவூர்; குரல் வாசகி - மங்கலம்; ருக்ஷானா - திருச்சி; முஹம்மது ஃபயாஜ் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; நூருல்பஸர், எம்.ஏ.சாகுல்ஹமீது, எஸ்.இம்தாதுல்லாஹ் - கணியூர்; என்.சுல்தான் பீவி - மதுரை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபீனா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுஸைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - மதுரை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிய்யுத்தீன் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹுமு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

## துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும், உடல் நலக் குறைவிருந்தாலும் புனித ரமளான் மாதத்தில் முப்பது நோன்புகளை நோற்கவும், நல் அமல்களையும் செய்ய வைத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்! எனக்காக துஆ செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி! எஸ்.பாத்திமா - தஞ்சாவூர்.

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கரூர் மாவட்டம் பள்ளபட்டி மர்ஹூம் தவக்காயன் ஷேக் இஸ்மாயீல் (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் T.S. சாகுல் ஹமீது அவர்கள் 01.03.24 அன்றும்,

இராமநாதபுரம் மாவட்டம் R.S.மங்கலம் மர்ஹூமா உம்முசல்மா (ரஹ்) அவர்களின் மருமகனாரும், ஹாஃபிழ் M.S.முஹம்மது அல்ஃபலாஹ் அவர்களின் தகப்பனாரும், குர்ஆனின் குரலின் நீண்டகால வாசகருமான ஜனாப் V.M. செய்யது இப்ராஹீம் அவர்கள் 17.03.24 அன்றும்,

மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரியில் வசூலகராகப் பணியாற்றி வந்த, இளங்காகுறிச்சி ஜனாப் முஹம்மது அலீ அவர்கள் 20.03.24 அன்றும்,

கோவை மாவட்டம் பொள்ளாச்சி மின் நகர் அல்ஹாஜ் ஷேக் மிர்ஜா இஸ்மாயீல் (ஓய்வு பெற்ற தமிழ்நாடு மின்வாரிய கணக்கு அதிகாரி) அவர்களின் அருமை துணைவியாரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால வாசகியுமான அல்ஹாஜ்ஜா செகிம்ஷா பேகம் (எ) L.பாபி (Retd. H.M.) அவர்கள் 21.03.24 அன்றும்,

கடலூர் மாவட்டம் பண்ருட்டி போலீஸ் லைன் மஸ்ஜிதின் மேனாள் இமாம் மவ்லானா மர்ஹூம் S.அப்துல் மாலிக் லெப்பை ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மகனார் மவ்லவீ ஹாஃபிழ் ஃபஜ்லுல் ஹக் அன்வாரி ஹள்ரத் அவர்கள் 23.03.24 அன்றும்,

பள்ளபட்டி ஹாஜி மீரத்த "கபூர் சில்க் ஹவுஸ்" அல்ஹாஜ் மர்ஹூம் A.M.A. ஷேக் அப்துல் காதிர் (ரஹ்) அவர்களின் மூன்றாவது புதல்வர் அல்ஹாஜ் M.S.அப்துல் வஹாப் அவர்கள் 25.03.24 அன்றும்,

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர் மன்ற முன்னாள் தலைவரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் முன்னாள் நகரத் தலைவரும், மேலப்பள்ளிவாசல் ஜமாஅத் கமிட்டி முன்னாள் தலைவருமான அல்ஹாஜ் சக்கரை M.முஹம்மது இஸ்மாயீல் அவர்கள் 27.03.24 அன்றும்,

திருவாரூர் மாவட்டம் பொதக்குடி பெரிய பள்ளிவாசலில் கடந்த 50 ஆண்டுகளாக இமாமாகவும், பொதக்குடி அந்நூர் முஹம்மதியா அரபிக் கல்லூரியில் முன்னாள் பேராசிரியராகவும், தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமாவின் வழிகாட்டுக் குழு உறுப்பினருமான சித்தையன்கோட்டை மவ்லானா மவ்லவீ P.H.ஸலாவுதீன் பாகவி ஹள்ரத் அவர்கள் 29.03.24 அன்றும்,

சென்னை மண்ணடி "பஷாரத் புக் டிப்போ" மவ்லானா அஹமது இப்ராஹீம் காஷிஃபி ஹள்ரத் மற்றும் சகோதரர்களின் அருமை தகப்பனாரும், "அதிரை ஷம்சுல் இஸ்லாம்" சங்க முன்னாள் தலைவருமான அல்ஹாஜ் ஹஸன் அவர்கள் 07.04.24 அன்றும்,

திருச்சி நானாமூனா பள்ளிவாசலின் மஹல்லாவைச் சார்ந்த ஜனாப் ரோஷன் அலீ அவர்கள் 14.04.24 அன்றும்,

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் மர்ஹூம் லியாகத் அலீ மன்பயீ ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அருமை துணைவியாரும், புளியங்குடி "இப்ராஹீம் ஜவுளி ஸ்டோர்" ஜனாப் முஹம்மது நைனார் அவர்களின் அருமை மாமியுமான ஜனாபா சைய்யது அலீ பாத்திமா அவர்கள் 12.04.24 அன்றும்,

மதுரை சுங்கம் பள்ளிவாசல் ஜமாஅத்தைச் சேர்ந்த மவ்லானா P.காஜா நஜிமுதீன் மன்பயீ ஹள்ரத் அவர்கள் 22.04.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டவர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!


## அல்லாஹ்தான் யாவற்றையும் நன்கு அறிந்தவன்!

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மறைவானவற்றின் திறவுகோல்கள் ஐந்தாகும். (ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான்:) "நிச்சயமாக (இறுதித் தீர்ப்பிற்குரிய) அந்த நேரத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது. அவனே மழையைப் பொழிவிக்கின்றான். (பெண்களின்) கருப்பைகளில் இருப்பவற்றையும் அவனே அறிவான். எந்த மனிதனும், அவன் நாளை என்ன சம்பாதிக்கப்போகிறான் என்பதை அறிவதில்லை. தாம் எந்த இடத்தில் மரணிப்பார் என்பதும் எந்த மனிதருக்கும் தெரியாது. நிச்சயமாக, அல்லாஹ்தான் (யாவற்றையும்) நன்கு அறிந்தவனாகவும் நுண்ணறிவுள்ளவனாகவும் இருக்கின்றான்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர்(ரளி) அவர்கள் (நூல் : ஸஹீஹுல் புகாரி)

# வாசகர் வட்டம்



"தேர்தல் வந்திருச்சி" தலையங்கம் உள் மனம் துடி துடிக்க எழுதியது போல் இருந்தது. ஆம்; நாட்டின் முன்னேற்றம் மக்களின் அன்றாட சுக வாழ்விற்கு உண்டானவை. இது வளருவதற்கு ஏதும் தராத மத்திய அரசு விழித்திட தேர்தலில் தோல்வியை தருவதுதான் ஒரே வழி! பொறுத்திருப்போம் நல்ல நாட்களை எதிர்பார்த்து! அது சம்பந்தமாக வெளியான துஆவும் அருமை!

"இறைவனுக்காக இஃதிகாஃப்" தலைப்பில் குர்ஆன், ஹதீஸ்களை மேற்கோள்காட்டி எழுதியிருந்தவை சிந்திக்கத் தக்கதாக உள்ளன. அம்மாதிரியான அமலைச் செய்ய அனைவரும் முயற்சிப்போம்.

"வெற்றி பெற குர்ஆனை ஓதுவோம்" க.டடுரை இக்காலத்திற்கு ஏற்றதாக இருக்கின்றது. ஓர் எழுத்திற்கு பத்து நன்மைகள் என்ற நிலையில், அதனை தினமும் ஓதி வர வேண்டும் என்பது அவசியம். குறிப்பாக புனித ரமளானில் மட்டுமல்ல, அதன் பின்னும் தொடர்ந்து கடைபிடிப்போம்.

பா. ஹாஜிமுஹம்மது.
சேந்தமங்கலம்.

இளம் பச்சை நிற அட்டையில் ஈத் பெருநாள் சிறப்பிதழ் மலர்ந்து புன்னகை பூக்கும் வண்ணம் கண்களுக்கு குளிச்சியைத் தந்தது.

தலையங்கம் ஒளி விடும் வைரமாய் பிரகாசித்தது. நாட்டில் சிறந்த ஆட்சி அமைய ஓதும் துஆ, வரப்பிரசாதமாய் அமைந்தது.

பதில்கள் விதி, மதி, சதி, கதிகளுக்கு விளக்கமாய் அமைந்திருந்தது.

மவ்லவீ மு.முஹம்மது ஹைதர் அலீ ஹள்ரத் கட்டுரை மூலம் இஃதிகாஃபை பற்றித் தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது. லைத்துல் கத்ர் விதி எழுதும் இரவு, மனித

வாழ்வின் மகத்தான செயலை சிறப்பாக செய்ய உதவியது.

ப.பீர் இலாஹி B.Sc., எழுதிய "வரலாற்றில் ஓர் ஏடு" காலத்தால் அழியாத காவியம் ஆகும்.

எம்.ஜே.அன்வரியின் "என் நெஞ்சைத் தொட்டவை!" பழைய செய்திகளை பளிச்சென்று எழுதுகிறார்.

மேலும்,

கொடிக்குக் காயோ
மரத்துக்குப் பழமோ
பாரமாகத் தெரியாது;
குர்ஆனின் குரலை
படிப்பவர்களுக்கு
துன்பங்கள் நெருங்காது!

அ. சேக் முஹம்மது,
வேடசந்தூர்.

ஈத் பெருநாள் சிறப்பிதழ் கரம் கிடைத்தது. அல்ஹம்து லில்லாஹ்!

இதழின் ஒவ்வொரு கட்டுரையும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. இன்ஷா அல்லாஹ் "குர்ஆனின் குரல்" உலகம் உள்ளளவும் தொடர்ந்து வெளிவர துஆ செய்கிறேன்.

ஜெ. முஹம்மது யூசுப்,
பனைக்காட்டூர்.


## தமிழக மதரஸாக்களுக்கான அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் "**சொல்லிலக்கணம்**" என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி** ஹஸ்ரத் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

**மிக பயனுள்ள நூல்!**


**பக்கங்கள் : 800;** **விலை ரூ. 500/-** (தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் :** **குர்ஆனின் குரல்** மதுரை 9486729192

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

# LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India